பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 07 வெள்ளிக்கிழமை (19.02.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 085

# துணிச்சலான முடிவை ஐக்கியப்பட்டு தமிழர்கள் எடுக்க வேண்டிய தேர்தல்

## தலைவிதியை நிர்ணயிக்கும் கட்டம் எனப் புத்திஜீவிகள் கருத்து

கொழும்பு, பெப்ரவரி 19

இலங்கையில் தமிழ்ப்பேசும் சமூகத்தின் இருப்பையும் எதிர்காலத்தையும், தலைவிதியையும் தீர்மானிக்கும் முக்கிய பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வது இன்று தொடங்குகின்றது. இத் தேர்தலில் தமிழ்ப் பேசும் சமூகம் ஐக்கியப்பட்டு துணிச்சலாக எடுக்கும் முடிவிலேயே - தீர்மானத்திலேயே - அதன் எதிர்காலமே தங்கியிருக்கின்றது எனத் தமிழ்ப் புத்திஜீவிகள், தொழில்சார் நிபுணர்கள், கல்விமான்கள் மற்றும் சமூக நலனில் அக்கறையுள்ள வர்த்தகத்துறை முக்கியஸ்தர்கள் போன்றோர் ஒருமித்துக் கருத்து வெளியிட்டிருக்கின்றனர். (23 ஆம் பக்கம் பார்க்க)

## சுயேட்சைக் குழு கட்டுப் பணம் செலுத்தியது

யாழ்ப்பாணம், பெப்.19

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு சுயேச்சைக்குழு ஒன்று யாழ்.செயலகத்தில் நேற்று முதலாவதாக கட்டுப்பணம் செலுத்தியது.

சாவகச்சேரி விலாசத்துடன் சண்முகநாதன் மனோகரன் என்பவரை தலைமை வேட்பாளராகக் (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி. வரிச்சலுகைக்காக சர்வதேசத்திடம் சரணடைவதா?

### முடியாது என்பதில் அரசு திட்டவட்டம்

கொழும்பு, பெப். 19

'ஜி.எஸ்.பி.'வரிச்சலுகையைப் பெற வேண்டும் என்பதற்காக இலங்கையின் சுயாதீனம், இறைமை போன்றவற்றை இழந்து சர்வதேசத்திடம் சரணடைய முடியாது என்று அரசு நேற்றுத் தெரிவித்தது.

இலங்கையின் உள்விவகாரம் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் உரிமை இலங்கை அரசுக்கே உண்டு என்பதை அடிப்படையாகக் கொண்டு இந்த வரிச்சலுகையை மீளப் பெறுவதற்காக ஐரோப்பிய ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தவும் தயார் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

'ஜி. எஸ்.பி.' வரிச்சலுகையை மீளப் பெறுவதில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ள போதிலும் அதைப் பெறுவதற்கான நடவடிக்கையில் அரசு மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக நாம் எமது நாட்டின் இறைமையைப் பாதுகாக்க வேண்டும். இந்த வரிச்சலுகையைப் பெற வேண்டும் (24ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தரப்பினருடன் கோத்தபாய சந்திப்பு

புதுடில்லி, பெப். 19

இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா மற்றும் வெளிவிவகாரச் செயலாளர் நிரூபமா ராவ் ஆகியோரைச் சந்தித்துப் பேசவிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்புகள் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் நடைபெறவிருந்தன. இந்தச் சந்திப்புகளில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரகாஷ் காரியவசமும் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தியாவில் இடம்பெறும் பாதுகாப்புத்துறை தொடர்பான சர்வதேசக் கண்காட்சியைப் பார்வையிடவே இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் அங்கு சென்றிருக்கின்றார் என முன்னர் அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே. (அ-சி)

## பொன்சேகா தலைமையில் ஜே.வி.பி. அணி வெற்றிக் கிண்ணச் சின்னத்தில் களத்தில்?

கொழும்பு, பெப். 19

ஜே.வி.பியினரும், தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் ஜனநாயக தேசியக் கூட்டணியின் கீழ் வெற்றிக் கிண்ணச் சின்னத்தில் போட்டியிடவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சி தனது யானைச் சின்னத்தில் போட்டியிடுவதில் உறுதியாகவுள்ளதால், ஜே.வி.பி. ஜெனரல் பொன்சேகாவுடன் சேர்ந்து ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் கீழ் வெற்றிக் கிண்ணச் சின்னத்தில் போட்டியிட முடிவு செய்துள்ளது.

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக ஜெனரல் சரத் பொன்சேகாவும், அதன் செயலாளராக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தும் விளங்குவர்.

ரோயல் அவென்யூவில் உள்ள ஜெனரல் பொன்சேகாவின் தேர்தல் அலுவலகமே கட்சியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமாக விளங்கும்.

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டமைப்பில் அன்னச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவதற்குச் (24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க.வுடன் மனோ கணேசன் வேட்பாளர் தெரிவில் முறுகல்!

கொழும்பு, பெப். 19

தலைநகருக்கான தமிழ் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் ஐ.தே.கட்சிக்கும் , அதனுடன் கூட்டணி அமைத்துச் செயற்பட்டு வந்த மனோ கணேசன் எம்.பியின் ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் இடையில் கடும் முறுகல் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஜனநாயக மக்கள் முன்னணி நேற்று வெளியிட்டுள்ள (24ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்ட நீடிப்பு சர்ச்சைக்குரிய நிலையில்

கொழும்பு, பெப். 19

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பில் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் மாதாந்தம் நீடிக்கப்பட்டு வந்த அவசரகாலச் சட்டத்தை அடுத்த தவணைக்காக நீடிப்பதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## வேட்புமனுத் தாக்கல் இன்று தொடங்குகிறது; சிறுபான்மையினக் கட்சிகளின் முடிவும் இன்று

கொழும்பு, பெப். 19

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன. 26ஆம் திகதி வரை வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யமுடியும்.

அதேவேளை, தேர்தல் தொடர்பான தமது இறுதி முடிவுகளை சிறுபான்மை இனத்தவர்களின் கட்சிகள் இன்று வெளியிடலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறுபான்மைக் கட்சிகள் தமது வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தயாரிக்கும் இறுதிக் கட்டப் பணிகளில் நேற்று ஈடுபட்டிருந்தன. (24ஆம் பக்கம் பார்க்க)

## மகாசங்கக் கூட்டம் ரத்தாகக் காரணம் அரசு சார்பான பிக்குமாரின் அழுத்தமே

### தேசிய பிக்குகள் முன்னணி விசனம்

கொழும்பு, பெப்.19

அரசிற்கு சார்பான பௌத்தமத குருமார்களின் கடும் அழுத்தங்கள் காரணமாகவே மகா சங்கத்தினால் நேற்று நடத்தப்படவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது எனத் தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று செய்தியாளர் மாநாட்டில் தேசிய பிக்குகள் முன்னணியின் [illegible] தன பால தேரர் (24ஆம் பக்கம் பார்க்க)

## மர்மமாக மறைந்த செய்தியாளர் தொடர்பான முழுத் தகவல்களையும் வெளியிட வற்புறுத்து

கொழும்பு, பெப். 19

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புத் தினத்திற்கு முன்னர் காணாமற்போன 'லங்கா ஈ நியூஸ்' இணையத்தளத்தின் செய்தியாளர் பிரதீப் எகனலிகொட குறித்த சகல தகவல்களையும் வெளியிடுமாறு சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் இலங்கை அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

எகனலிகொடவைக் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறு சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் எய்டன் வைட் (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலம் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்

மனிதாபிமானப் பேராளனாய் - மக்கள் சேவைக்கு இலக்கணமாய்- கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக எமது கிராம மக்களின் நல்வழி காட்டியாக நற்சேவையாற்றி தற்போது சுகவீனமடைந்துள்ள எமது கிராம சேவை உத்தியோகத்தர்

**திரு. ஐயாத்துரை சிவானந்தம்**

அவர்கள் எல்லா நலங்களும் பெற்று விரைந்து வந்து எமது கிராமத்துக்கு நற்சேவையாற்ற அருள்புரிய எல்லாம் வல்ல கேதூவுப்பிள்ளையாரை இறைஞ்சுகின்றோம்.

இ.தெய்வேந்திரம், இ.புவனேந்திரம்
வாதரவத்தை, புத்தூர். (95637)

## மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்



ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட வட பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று யாழ்.நகர்தனில் உன்னதமான சேவையை வழங்கவுள்ள

உயர்திரு. **திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்**

அவர்களை மனதாரப்பாராட்டி மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வடபிராந்திய முகாமையாளர் தி.ஜெயராசசிங்கம் அவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று தனது குடும்பத்தினருடன் நீடூழி வாழ வாழ்த்துவதோடு, அவர் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

கதிர்வேலவன்
அரிசி ஆலை.
கைதடி. (95626)

# மக்கள் வங்கி
## யாழ்ப்பாணக் கிளைகளின் வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்

எமது வாடிக்கையாளர்களுக்கு தரமுயர்ந்த சேவையினை வழங்குவதற்காக எமது யாழ்ப்பாணக் கிளைகள் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதிகளில் மக்கள் வங்கியின் கணனித் தொழில்நுட்ப சேவை ஒருங்கிணைக்கப்பட்ட சேவையாக தரமுயர்த்தப் படவுள்ளது.

இதன் காரணமாக இக் குறிப்பிட்ட கிளைகளில் மட்டுப்படுத்தப்பட்ட வங்கிச் சேவை இடம்பெறுவதுடன் வழமையான வங்கி நடவடிக்கைகள் இடம்பெறமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும். எனவே குறிப்பிட்ட தினங்களில் இக் கிளைகளில் தன்னியக்க இயந்திரத்தில் (ATM) பணத்தை மீளப் பெறும் தினங்கள் பற்றிய விவரமும், வங்கி நடவடிக்கைகள் இடம்பெறும் நேர விவரமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் | கீழ்க்காணும் திகதிகளில் கொடுக்கல் வாங்கல் இடம்பெறாத திகதியும் நேரமும் (ந.ப 12முதல்) | ATM செயற்படும் நேரம் (மு.ப 9முதல்) | கிளைகள் புதிய திட்டத்துடன் இணையும் திகதி (நள்ளிரவு 12முதல்) |
|---|---|---|---|
| யாழ்.ஸ்டான்லி வீதி | 2010.02.19 | 2010.02.21 | 2010.02.22 |
| நாவலர் வீதி | 2010.02.19 | 2010.02.21 | 2010.02.22 |
| மானிப்பாய் | 2010.02.19 | 2010.02.21 | 2010.02.22 |
| யாழ்.பல்கலைக்கழகம் | 2010.02.19 | 2010.02.21 | 2010.02.22 |
| திருநெல்வேலி | 2010.02.19 | 2010.02.21 | 2010.02.22 |
| கல்வியங்காடு | 2010.02.19 | 2010.02.21 | 2010.02.22 |
| சுன்னாகம் | 2010.02.26 | 2010.02.28 | 2010.03.01 |
| கோப்பாய் | 2010.02.26 | 2010.02.28 | 2010.03.01 |
| நெல்லியடி | 2010.02.26 | 2010.02.28 | 2010.03.01 |
| பருத்தித்துறை | 2010.02.26 | 2010.02.28 | 2010.03.01 |
| புலோலி | 2010.02.26 | 2010.02.28 | 2010.03.01 |
| கன்னாதிட்டி | 2010.03.05 | 2010.03.07 | 2010.03.08 |
| இணுவில் | 2010.03.05 | 2010.03.07 | 2010.03.08 |
| யாழ்.பிரதான வீதி | 2010.03.05 | 2010.03.07 | 2010.03.08 |
| உரும்பிராய் | 2010.03.05 | 2010.03.07 | 2010.03.08 |
| அச்சுவேலி | 2010.03.05 | 2010.03.07 | 2010.03.08 |

எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு மேற்குறித்த தினங்களில் ஏற்படும் சிரமங்களுக்கு வருத்தத்தை தெரிவிப்பதுடன் தாங்கள் எமக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கு எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவிக்கிறோம்.

நாடு பூராகவுமுள்ள 231 வங்கிக்கிளைகளிலும், 257 சேவை நிலையங்களிலும் மக்கள் வங்கியின் தரமுயர்த்தப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட பின்வரும் சேவைகளை வாடிக்கையாளர்கள் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

- ★ காசோலைத் தீர்ப்பனவு
- ★ காசோலைப் பணப்பரிமாற்றம்
- ★ நிலையான கட்டளைகளுக்கான கொடுப்பனவு, பெறுவனவு
- ★ சேமிப்பு, நிலையான வைப்புகளுக்குரிய துரித பணப்பரிமாற்றம்
- ★ SMS ஊடான வங்கிச் சேவை
- ★ SLIPS பரிமாற்றம்
- ★ 24மணி நேரத்திற்குள் வெளிநாட்டுப்பணப்பரிமாற்றங்கள்
- ★ NRFC, RFC கணக்குகளுக்கான கொடுக்கல் வாங்கல்கள்
- ★ விரைவான வெளிநாட்டு நாணய மாற்றல் சேவை
- ★ வெளிநாட்டு காசோலை, பயணிகள் காசோலைகள் துரித வழங்கல், உடனடித் தீர்ப்பனவு.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி (C/56520)

## காணி விற்பனைக்குண்டு

நுணாவில் கிழக்கு, வலிவில் ஒழுங்கையில் 9பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொ.பே 0776112477 - கண்ணன் (95645)

## கடன் உதவி

பேக்கறி மற்றும் ஹோட்டலுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் இலகுமுறைக் கடனில்

★ இன்று மட்டுமே இச் சலுகை

★ நேரில் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: பூபதி காட்சியறை,
யாழ்.மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.
தொ.பே 0777427777 (C/564998)

## சண்டிலிப்பாயில் மேசன் பயிற்சி நெறி

நவாலி, பெப்.19

உலக வங்கியின் வடக்கு மாகாண வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 3 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 40 பேருக்கு ஒரு நாள் மேசன் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நாளை சனிக்கிழமை காலை 9 மணியில் இருந்து மாலை 4 மணிவரை செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ஒ- 100)

## மனித உரிமைகள் குறித்த சிந்தனை அரங்கு

யாழ்ப்பாணம், பெப்.19

'சிந்தனைக்கூடம்' யாழ்ப்பாணம், அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் சிந்தனை அரங்குத் தொடர் 05 இன் கருத்தரங்கு மனித உரிமைகள் தொடர்பாக நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் 182, பிறவுண் வீதியில் அமைந்துள்ள ஐ.ஐ.ரி. யாழ். கிளை வரவேற்பு மண்டபத்தில் இடம் பெறவள்ளது.

'மனித உரிமைகளின் சமகால கருத்தியல் சார் சர்ச்சைகளின் பிரதிபலிப்புகள்' எனும் தலைப்பில் இலங்கை மனித உரிமைகள் இல்ல நிர்வாகப்பணிப்பாளர் செரின் சேவியரின் கருத்துரையைத் தொடர்ந்துபங்குபற்றுநர்களின் கலந்துரையாடல் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு ஆர்வலர்கள் வருகை தந்து பயன்பெற முடியுமென சிந்தனைக் கூடத்தின் அமைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்தார். (ஒ-1)

## யாழ்.செயலகத்தில் நாளை ஒன்றுகூடல், பாராட்டு விழா

யாழ்,பெப்.19

யாழ்.செயலக நலன்புரிக்கழகத்தின் பொதுக்கூட்டம், ஒன்றுகூடல், வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமிக்கு பாராட்டுவிழாஆகியன நாளை சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளன.

கழகத்தின் தலைவர் ம.வித்தியானந்தநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறும். (1)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி விசுவலிங்கம் நாகரத்தினம் (வேவி) (டென்மார்க்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் நாகரத்தினம் (வேவி) 13.02.2010 சனிக்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (20.02.2010) சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.ஜெயச்சந்திரன். (மருமகன்).
உதயா வெதுப்பகம்,
வல்லை வீதி, சங்கானை.
தொ.பே 0776143115 (சங்கானை), 004559464547 (டென்மார்க்) (C/5648900)



### திருமதி வேலாயுதபிள்ளை லலிதாதேவி

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்பொழுது இல 98, செட்டித்தெரு, நல்லூரில் வசித்தவருமான திருமதி வேலாயுதபிள்ளை லலிதாதேவி நேற்று (18.02.2010) வியாழக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-சிவஞானம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், க.க.வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர், தரம் 1, பிரதேச செயலகம், தெல்லிப்பழை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தனஞ்ஜயன் மற்றும் கனகதுர்க்கா (சுவிஸ்), வினித்திரா (3ஆம் வருட தாதிய மாணவி, இணை மருத்துவ விஞ்ஞானம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாலன் (சுவிஸ்) அவர்களின் அன்பு மாமியாரும், விஜயசேகரன், விஜயராகவன் மற்றும் காலஞ்சென்ற விஜயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், ருக்மணிதேவி, சிவபாக்கியம் மற்றும் லோகேஸ் வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2010) சனிக்கிழமை மு.ப 10மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.க.வேலாயுதபிள்ளை (கணவர்), பிள்ளைகள், மருமகன்.
இல 98, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம். (95642)



### யோகநாதன் தாரகா

(மாணவி, தரம் 11, யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்)

தனங்களப்பு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட யோகநாதன் தாரகா நேற்று (18.02.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் யோகநாதன்-ஜெயமலர் தம்பதிகளின் அன்பு மகளும், கஜேந்தினி, மகேந்தினி, வாகீசன், தக்ஷயன், தனலக்ஷன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2010) வெள்ளிக்கிழமை பி.ப 2மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.யோகநாதன் (தந்தை)
ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு. (95647)

### முருகையா சிவராஜரட்ணம்



(முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர் - கல்விக்கோட்டம், பண்டத்தரிப்பு , சமாதான நீதிவான், சமாதான சபை உறுப்பினர், கிராம அபிவிருத்திச்சபைத் தலைவர்)

இளவாலை வடக்கு, இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா சிவராஜரட்ணம் நேற்று (18.02.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகையா-இளையதங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம்-செல்வநாயகிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற புஸ்பராணியின் அன்புக் கணவனும், Dr. மோகன் (லண்டன்), சுரேஸ் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. சௌமினி (லண்டன்), ரகுவதனா(அவுஸ்ரேலியா) ஆகியோரின் மாமனாரும், கோபிகா, ரிஷி, விஷால் ஆகியோரின் பேரனும், திருஞானரட்ணம் (கேகாலை), காலஞ்சென்ற தேவதாசன் மற்றும் பிறேமதாசன் (யூனியன் வங்கி, யாழ்.), சத்தியதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், விஸ்வநாதமுதலியார் (முகாமையாளர், LOLC, கொழும்பு), முருகதாசன் (ஓய்வூதியர், நீர்பாசனத் திணைக்களம்), காலஞ்சென்ற உமாராணி மற்றும் சிறிதரன் (நியூசிலாந்து) ஆகியோரின் மைத்துனரும், கோபிகிருஷ்ணன், மோகனகிருஷ்ணன் (சவுதி), தயாளினி (ஆசிரியை, யாழ்.கனிஷ்ட மகாவித்தியாலயம்), நர்த்தனன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), நர்த்தலோஜினி (வங்கியாளர், ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2010) வெள்ளிக்கிழமை பி.ப 2மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3மணியளவில் முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மோகன், சுரேஸ் (மகன்மார்).
"சிவவாசா",
இளவாலை வடக்கு, இளவாலை. (C/564994)

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## எதிர்க்கட்சி எம்.பிக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக!

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மெய்ப்பாதுகாவலர்களை திடுதிப்பென விலக்கிக் கொண்டிருக்கின்றது இலங்கை அரசு.

பொதுத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட சூழ்நிலையில் - வேட்புமனு ஏற்கும் காலம் நெருங்கும்போது - எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கை குறித்து எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் தேர்தல்கள் ஆணையாளரைச் சந்தித்து முறைப்பாடு செய்திருக்கின்றனர். மெய்ப்பாதுகாவலர்களை வாபஸ் பெற்ற நடவடிக்கை தனது பணிப்புரைக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விடயம் அல்ல என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் வெளிப்படையாகவே தெளிவுபடுத்தி விட்டார்.

தேர்தல் சமயத்தில், எதிர்க்கட்சிப் பிரமுகர்களை ஆபத்தில் ஆழ்த்துவதன் மூலம், அவர்களின் அசைவியக்கத்தைக் கட்டுப்படுத்தி செயலிழக்க வைத்து, அவர்களின் பிரசார நடவடிக்கைகளை முடக்கி, அதன் வாயிலாகத் தனக்கு இத் தேர்தலில் அரசியல் லாபம் தேடிக் கொள்ளலாம் என்பதே அரசின் இத்திடீர் நடவடிக்கைக்குக் காரணம் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன.

ஆனால் அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, இது சட்டப்படியான நடவடிக்கை என்று சமாதானம் சொல்லுகின்றார் அரசுத் தரப்பில் அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா.

இது சட்டப்படியான நடவடிக்கை என்றால், நாடாளுமன்றத்தில் பிரதமர், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் தவிர, ஏனைய எம்.பிக்கள் அனைவர் தொடர்பிலும் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அரசுத் தரப்பின் எம்.பிக்களில் ஓரிருவரைத் தவிர ஏனைய அனைவரையும் குறைந்த பட்சம் பிரதி அமைச்சர்கள் அல்லது அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்களாக அரசு வைத்துக்கொண்டு எம்.பிக்கள் விடயத்தில் மட்டும் மெய்ப்பாதுகாவலர்களை விலக்கும் நடவடிக்கையை அது முன்னெடுத்தால் அதன் அர்த்தம் என்ன? எதிரணியினரை மட்டும் இலக்கு வைக்கும் நோக்குடன் வகுக்கப்பட்ட ஒரு திட்டம் என்றும், அதற்கேற்ற வகையில் இப்படி விளக்கம் தரப்படுகின்றது என்றும்தானே கருத்து......?

பயங்கரவாதத்தைப் பூண்டோடு ஒழித்து விட்டதாக மார்தட்டும் அரசு, ஆனால் அவசரகாலச் சட்டத்தை மட்டும் தொடர்ந்தும் நீடிக்கின்றது. அதன்மூலம் தனக்குக் கிடைக்கும் கட்டுமட்டில்லாத அதிகாரத்தைத் தொடர்ந்தும் பிரயோகிக்க அது விரும்புகின்றது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பதை நியாயப்படுத்தக்கூடிய வன்முறைக் கள நிலைமை தொடர்ந்தும் இருப்பதாக அரசு கூறுமானால் - அது உண்மையானால் - அந்த அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணையை நாடாளுமன்றில் அங்கீகரித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏதும் இல்லை என்று அரசு எப்படி நியாயப்படுத்தப் போகின்றது....?

அதுவும், எதிரணி எம்.பிக்களின் பாதுகாப்பு உரிய முன்னறிவித்தலின்றி - திடுதிப்பென - நீக்கப்பட்டமை எங்ஙனம் நியாயமாகும்.....?

அத்தோடு தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது எனத் தெரிவித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் தமது பாதுகாப்புக் குறைக்கப்பட்டமை தொடர்பில் ஏற்கனவே உயர் நீதிமன்றை நாடியிருந்த சூழ்நிலையில், அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு, அதன்படி பாதுகாப்பு வழங்கப்பட்டும் இருந்தது. ஆனால், அவர்களின் பாதுகாப்புக் கூட, உயர்நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டு, நீதிமன்றிடம் அனுமதி பெறுவது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத சூழ்நிலையில் ஒருதலைப்பட்சமாகத் திடீரென வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இப்படித் தேர்தல் அறிவிக்கப்பட்ட சமயத்தில் அதுவரை எம்.பிக்களாக இருந்தோருக்கான பாதுகாப்பை அதிரடியாக விலக்குவது என்பது வழமையான ஒரு காரியம் என்றும் கூட அரசுத் தரப்பில் சமாதானம் கூறப்படுகின்றது. ஆனால் அது தவறானது.

முன்னைய பொதுத் தேர்தல்களின்போது இத்தகைய நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டமை தொடர்பில் தகவல் ஏதும் இல்லை. அப்படி இருக்கையில் இவ்வாறு எதிரணித் தரப்பின் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பை ஆபத்தில் மூழ்கடிக்கும் விதத்தில் அரசுத் தரப்பு எடுத்துள்ள முடிவு - நடவடிக்கை - பெரும் விசனத்துக்கும், விமர்சனத்துக்கும், கண்டனத்துக்கும் உரியதாக இருக்கின்றது.

சிங்கள இணையத்தளம் ஒன்றின் ஊடகவியலாளர் ஒருவர் தேர்தல் சமயத்தில் மாயமாக மறைந்தமை தொடர்பான மர்மம் தொடர்ந்தும் நீடிக்கும் நிலைமை தற்போதைய யதார்த்தப் புறநிலையின் ஆழ, அகலப் பரிமாணத்தை ஓரளவுக்குப் பிரதிபலித்து நிற்கின்றது.

இந்தப் பின்புலத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் மெய்க்காவலர்களைத் திடீரென - முன்னறிவிப்பின்றி - நீக்கி, அவர்களின் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளும் சந்தேகத்துக்குள்ளும் ஆழ்த்துவது பெரும் விபரீத விளைவுகளை ஏற்படுத்த வல்லது. அரசுத் தலைமை தன் முடிவை உடனடியாக மாற்றி, தேர்தல்கள் முடியும் வரை - புதிய நாடாளுமன்றம் தெரிவு செய்யப்படும் வரை - தற்போதைய எம்.பிக்களின் பாதுகாப்பைத் தொடர்ந்து வழங்கவேண்டும். அதுதான் நியாயம். நீதியும் கூட.

## வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் புதிய நடைமுறைகள் 23ஆம் திகதி முதல் அமுலில்.

யாழ்ப்பாணம்,பெப்.19

வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சந்தைகள், கடைகள் என்பவற்றின் முன் துவிச்சக்கரவண்டிகள் நிறுத்தக்கூடாது.

அதேவேளை -

கடை உரிமையாளர்கள் தமது பொருள்களை கடைக்கு முன்னால் வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

- இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக அவர் தெரிவிக்கையில் -

சந்தைப் பகுதிகளிலும் அதனையண்டிய வர்த்தக நிலையங்களிலும் நுகர்விற்காக வருபவர்கள் தமது துவிச்சக்கரவண்டிகளை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டும் நிறுத்தவேண்டும்..

அதுவே பிரதேச சபையின் நிர்வாக செயற்பாட்டுக்கும் சட்ட வரம்புகளுக்கும் உட்பட்டதாக இருக்கும்.

இதனை மீறிச் செயற்படுவோரை சட்டத்தின் முன் கொண்டுசெல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல கடைகளுக்கு முன்னால் போக்குவரத்துப் பாதிக்கப்படும் அளவிற்கு வெளியில் வைத்து பொருள்கள் விற்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

எனவே 23.02.2010 முதல் இந்த நடைமுறை சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் அமுல்படுத்தப்படும்.

மேலும் அனுமதியற்ற கட்டடங்களின் விவரங்கள் உப அலுவலகங்கள் ரீதியாகத் திரட்டப்பட்டு வருகின்றன.

இவற்றினை மீறும் கட்டட உரிமையாளர் மீதும் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வலி.மேற்குப் பிரதேசசபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார். (04-302)

## சிறுவர்கள் மகிழ்வு நிறைந்த வாழ்வை அனுபவிக்க அனைவரும் உதவுவோம்

### கொள்கைப் பிரகடன நிகழ்வில் கியுடெக் இயக்குநர் அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.19

சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள், வன்முறைகள் மற்றும் மனித உரிமை மீறல்களைத் தடுத்து மகிழ்ச்சி நிறைந்த வாழ்வை சிறுவர்கள் அனுபவிப்பதற்கு சிறுவர் பிரகடனக் கொள்கை உதவும் என கரித்தாஸ் - கியுடெக் இயக்குநர் அருத்தந்தை ஜெயக்குமார் தெரிவித்தார்.

சிறுவர் பிரகடனக் கொள்கை வெளியீட்டு விழாவிலேயே அருட்தந்தை இக்கருத்தை வெளியிட்டார்.

யாழ்.பாதுகாவலன் மண்டபத்தில் கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்ற கொள்கைப் பிரகடன நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், இலங்கையில் சிறுவருக்கு எதிரான வன்முறைகள் கூடுதலாக இடம்பெறுவதைச் சுட்டிக்காட்டி இறைசாயலாகப் படைக்கப்பட்ட சிறுவர்களைப் பாதுகாப்பது எல்லோரினதும் கடமை என வற்புறுத்தினார்.

யாழ்ப்பாணத்திற்கு முதன்முறையாக விஜயத்தை மேற்கொண்டுள்ள கரித்தாஸ் தேசிய இயக்குநர் அருட்தந்தை ஜோர்ஜ் சிகாமணி தனது உரையில் -

யுத்த சூழ்நிலைகளினாலும் வறுமையினாலும் சிறுவர்கள் பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். கரித்தாஸ் நிறுவனம் 11 மறைமாவட்டங்களில் 13 நிறுவனங்களாகப் பணிபுரிகின்றது. அந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு கொள்கையினை இன்று வெளியிடுவதன் மூலம் சிறுவர்களைப் பாதுகாப்பது எமது முக்கியமான வேலைத்திட்டம் என்பதைத் தெரிவிக்க விரும்புறேன் என்று குறிப்பிட்டார்.

இக்கொள்கை வெளியீட்டில் பாடசாலை சிறுவர் உரிமையை பாதுகாத்தல், நிறுவன சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல், சமூக சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் அடக்கியிருக்கின்றன.

இந்த விழாவிற்கு அருட்தந்தையர்கள், சிறுவர் இல்ல பெறுப்பாளர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் முதலானவர்கள் கலந்துகொண்டனர்.(ப)

## இடம்பெயர்ந்த மக்கள் தாம் தற்காலிகமாக வசிக்கும் பகுதிகளிலேயே வாக்களிப்பதற்கு நடவடிக்கை

### யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.19

வாக்காளர்கள் தற்போது தாம் வசிக்கும் இடத்திலுள்ள வாக்கெடுப்பு நிலையத்திலேயே வாக்களிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் இத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ளவர்கள் தற்போது தாம் வதியும் இடங்களில் உள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்கள் தற்போது வசிக்கும் பிரதேசங்களின் கிராம அலுவலர்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

விண்ணப்பப்பத்திரம், விண்ணப்பதாரி வதியும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரினால் அத்தாட்சிப் படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் இடம்பெயர்ந்தவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள பிரதேசங்களின் வாக்காளர் இடாப்புகள் அந்தந்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களில் பார்வைக்காக வைக்கப்படும்.

2008ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்புகள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகத்தில் பார்வைக்காக வைக்கப்படும் - என்றார். (04-9)

## சுதுமலை-மதவடி வீதி இவ்வருடம் மீள் புனரமைப்புச் செய்யப்படும்

### மானிப்பாய் பிரதேச சபைச் செயலர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.19

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுதுமலை-மதவடி வீதி, இவ்வாண்டில் மீள்புனரமைப்புச் செய்யப்படும்.

இவ்வாறு மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சுதுமலை-மதவடி வீதி 2000ஆம் ஆண்டில் தொழில் நுட்ப அலுவலர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டது.

காலத்திற்கு காலம் மீளப் புனரமைக்கப்படும் என கூறியபோதிலும் இதுவரை அத்திட்டம் முன்னகர்த்தப் படவில்லை.

இதேவேளை -இவ்வருடம் சுதுமலை-மதவடி வீதி மீள்புனரமைப்புச் செய்யப்படும் என சபைச் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

கடந்த 23 ஆண்டுகளாக மேற்படி வீதி கவனிப்பாரற்று போக்குவரத்துத் தடைப்படும் அளவிற்கு மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (04-201-302)

## ஓய்வு பெற்ற ஊழியருக்கு பல்கலையில் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த ஆண்டுகளில் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற மற்றும் 25 வருடசேவையை நிறைவு செய்த ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் ச.க.தனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (201)

## நாளை

| | | |
|---|---|---|
| மாசி | 08 | 20.02.2010 |
| | | சனிக்கிழமை |
| திதி: | | சஷ்டி |
| | | பி.ப. 3.00 வரை |
| நட்சத்திரம்: | | பரணி |
| | | பி.இ. 3.47 வரை |
| [illegible] | | [illegible] |
| [illegible] | | [illegible] |

## மீளக்குடியமர்ந்த பின்னர் விண்ணப்பித்தவர்களுக்கு படகுகள் வழங்கும் நிகழ்வு செவ்வாயன்று

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்து கடற்றொழில் செய்வதற்காகப் படகினைப் பெற விண்ணப்பித்த மீனவர்களுக்கு அவற்றை விநியோகிக்கும் நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

படகினைப் பெற வருபவர்கள் அன்றைய தினம் காலை 9 மணிக்கு பருத்தித்துறை கடற்படை முகாமுக்கு சமுகமளிக்குமாறு யாழ்ப்பாணக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

நாளை சனிக்கிழமை இந்தப் படகுகள் விநியோகிக்கப்படவிருப்பதாக ஏற்கனவே சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.


எனினும் கடற்படை உத்தியோகத்தர்களுக்கு அன்றைய தினம் நேரம் ஒதுக்கமுடியாத நிலைமை ஏற்பட்டதன் காரணமாகவே அந்தத் திகதியில் மாற்றம் செய்ய வேண்டியிருந்தது.

எனவே, படகுகளைப் பெற விண்ணப்பித்தவர்கள் அனைவரும் எதிர்வரும் 23ஆம் திகதி அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வன்னிப் பகுதியிலிருந்து இடம் பெயரும் போது, தமது படகுகளை கடற்படையினரிடம் ஒப்படைத்து, பின்னர் யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த நிலையில் அதனைப் பெற விண்ணப்பித்தவர்களுக்கே இவ்வாறு படகுகள் விநியோகிக்கப் படவுள்ளன.

கடந்த மாதம் 18ஆம் திகதி வரையும் மீளக்குடியமர்ந்து விண்ணப்பித்தவர்களுக்கு 258 படகுகளும், 303 வெளி இணைப்பு இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன என மேலும் அவர் தெரிவித்தார். (04-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதகல் புனித லூர்து மாதா ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் போது மாதா தேரில் ஊர்வலமாக எடுத்து வரப்படுவதையும் மாதகல் கடற்கரையில் அமைந்துள்ள ஆலயத் தோற்றத்தையும், திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## நகரை அண்டிய பாடசாலைகளில் டெங்குநோய் விழிப்புணர்வு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்.நகரை அண்டியுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், இந்நோய் பற்றிய கருத்தரங்கு, சிறப்பு உரைகள் போன்றவற்றை சுகாதாரப் பகுதியினர் நடத்தி வருகின்றனர்.

அத்துடன் பாடசாலைகள் அமைந் துள்ள இடங்களில் டெங்கு நோயைப் பரப்பும். நுளம்புகளை அழிப்பதற்காக புகையூட்டல் செய்யப்படுவதோடு அங்கு காணப்படும் புல், பூண்டு, செடி கொடிகள் என்பனவும் அழிக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. நுளம்பின் பெருக்கம் அதிகமாகக் காணப்படும் இடங்களில் கிருமிநாசினிகளும தெளிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

(ரி-224)

## அஞ்சல் அலுவலக சேமிப்புக் கணக்குகள் வங்கியின் வலையமைப்பில்

யாழ்ப்பாணம்,பெப்.19

அஞ்சல் அலுவலகங்களில் வைப்பிலிடப்பட்டுள்ள சேமிப்புக் கணக்குகள் தேசிய சேமிப்பு வங்கியின் வலையமைப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் வைப்பிலிடப்பட்ட சேமிப்புக் கணக்குகள் அனைத்தும் தேசிய சேமிப்பு வங்கியின் வலையமைப்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(201-207)


## Vacancy For Hardware Technicians

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கணனி நிறுவன மொன்றுக்கு முன் அனுபவம் வாய்ந்த மற்றும் பழக விரும்பும் Hardware Technicians தேவை.

தொடர்புக்கு:- 077 7563145

(95630)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### விஞ்ஞானபீடம்

விஞ்ஞானத்தில் பொதுப்பட்டத் தேர்வு - நிலை 1G/2G, 2009

விஞ்ஞானத்தில் பொதுப்பட்டத் தேர்வு - நிலை 3G, 2008&2009

### முதலாம் அரையாண்டு கற்கைநெறி அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித்தேர்வு

முதலாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கைநெறி அலகுகளுக்கான கற்கை.நெறி இறுதித் தேர்வுகள் (End of Course Examinations) 2010 மார்ச் 10ஆம் திகதி ஆரம்பமாகும். தேர்வுகள் நடைபெறவுள்ள கற்கை அலகுகளின் பட்டியலும் நேரசூசியும் விஞ்ஞானபீட விளம்பரப் பலகைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வில் மீள்பரீட்சார்த்தியாகத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்திய தேர்வு அனுமதிப் படிவங்களைத் தேர்வுக்கான கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் 2010 மார்ச் மாதம் 01ஆம் திகதிக்கு முன் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

18.02.2010 (சி/564983) பதிவாளர்


## தேவை

நல்லூரில் இயங்கி வரும் Building Construction Companyக்கு Concrete mixer, Welding plant, Vibrator, Hoist ஆகிய உபகரணங்களைத் தகுந்த முறையில் பராமரிப்பதற்கு அனுபவமுள்ள ஒரு Mechanic தேவை. ஒரு கிழமைக்குள் விண்ணப்பிக்கவும்.

C/o உதயன் : 3986, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/95632)


உ

சுன்னாகம் - தாளையடி

## ஸ்ரீ ஹரிகரபுத்திர ஐயனார்



தேவஸ்தானத்தில் 40 வருட குருத்துவப் பணி ஆற்றிய முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களின்

## பாராட்டு சேவை நயப்பு விழா அழைப்பு

காலம்: நாளை(20.02.2010) சனிக்கிழமை, பிற்பகல் 3.00 மணி
இடம்: ஐயனார் தேவஸ்தான திருமண மண்டபம்
தலைவர்: திரு.சி.குமரவேல் (ஜே.பி) அவர்கள்
(தலைவர், ஆலயபரிபாலன சபை,
விவாகப் பதிவாளர், தலைவர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

சைவப் பெருமக்களே!

சுன்னாகம் தாளையடி ஹரிஹரபுத்திர ஐயனார் ஆயலத்தில் கடந்த 40 வருட காலமாக நைமித்திய கிரியைகளை கிரியா கலாபமணி சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களுடனும் தனித்தும் ஆற்றிவரும் சேவையை நன்றிகூறும் முகமாக ஆலய ஆதீன கர்த்தாக்களும் பரிபாலன சபையினரும் விழா உபயகாரர்களும் பொதுமக்களும் இணைந்து

**முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்**

ஐயா அவர்களுக்கு நடத்தும் கௌரவிப்பு விழாவில் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாராட்டு விழாக்குழு
ஐயனார் தேவஸ்தானம், சுன்னாகம்.

**நிகழ்வுகள்**

(விழா நாயகரை ஐயனார் வீதி முகப்பிலிருந்து ஐயனார் கோவில் திருமண மண்டபத்திற்கு அழைத்துவரல்)

மங்கள விளக்கேற்றல்:
சிவத்திரு பெ.வாமதேவன் - ஆதீனகர்த்தா, சிவத்திரு ஐ.கந்தசாமி பூசகர், ஆதீனகர்த்தா, சிவஸ்ரீ பாலபாஸ்கரக் குருக்கள் (சந்திரசேகரப் பிள்ளையார் கோயில்-சுன்னாகம்)
தேவாரம்:
வரவேற்புரை:
கந்தசாமி மணிவண்ணன் (யாழ்.பல்கலைக்கழகம், கலைப்பீடம்)
ஆசியுரை:
மஹாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக் குருக்கள் (மாவை ஆதீனம்)
வாழ்த்துரை: சித்தாந்த நல்லறிஞர்
சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் (புன்னாலைக் கட்டுவன்)
சிவஸ்ரீ ச.சண்முகானந்தக் குருக்கள் (மயிலணி)
கௌரவிப்பு: விழா நாயகரை கௌரவித்தல்
பாராட்டுரை:
சிவஸ்ரீ ராம் கெங்காதரக் குருக்கள் (அல்லையம்பதி)
சிவஸ்ரீ பாலகணேஸ்வரக் குருக்கள் (நயினாதீவு)
பேராசிரியர் திரு.க.தேவராஜா (பீடாதிபதி,வணிகத்துறை,யாழ்.பல்கலைக் கழகம்)
டாக்டர் அ.ஜெயக்குமார் (வைத்திய அதிகாரி, தெல்லிப்பழை)
திரு.ஆறுதிருமுருகன்(தலைவர்,துர்க்காதேவிதேவஸ்தானம், தெல்லிப்பழை, அதிபர்-யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
சிவத்திரு. வ. குமாரசாமி ஐயா
திரு.செ.குபேரநாதன் S.L.E.A.S (கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)
திரு.இ.பேரின்பநாயகம் (முன்னாள் இந்து கலாசார அமைச்சு ஆலோசகர்)
திரு.எஸ்.பரமநாதன் (முன்னாள் மாவட்ட சபை செயலாளர்)
திரு.மு.செல்வஸ்தன் (அதிபர், ஸ்ரீமுருகன் வித்தியாலயம், ஏழாலை)
திரு.மா.இராமலிங்கம் G.S (உப தலைவர், ஐயனார் பரிபாலனசபை)
திரு.பா.பாலபத்மன் G.S (தலைவர், ஐயனார் சனசமூக நிலையம்)
சபாபுஸ்பநாதன் (சத்தியபிரமாண மொழிபெயர்ப்பாளர், துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம்)
திரு.செ.நடராஜா J.P. (செயலாளர், ஐயனார் பரிபாலனசபை)
ஏற்புரை:
நன்றியுரை:
திரு.ச.தேவராசா B.A. (பொருளாளர், ஐயனார் பரிபாலன சபை)

(95639)

## மகளிர் தினத்தையொட்டி விளையாட்டுப்போட்டி

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சாவகச்சேரி நகர்ப் பிரிவு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சங்க எல்லைப் பிரிவுக்குட்பட்ட 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான விளையாட்டுப்போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்து வருகின்றனர்.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு சங்கச் செயலாளர் திருமதி ம. கீர்த்திநாதன் தெரிவித்துள்ளார்.

(ஒ-207)

## இளைஞர் காயம்

நெற் குவியல்களை எடுப்பதற்காக பின்புறமாக (றிவேஸில்) சென்ற டிரக்டர்பெட்டி, நெற் குவியலை அள்ளிக் கொண்டிருந்த இளைஞனை மோதிக் காயப்படுத்தியது.

மட்டுவிலில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ம.சுலக்ஷன் (வயது 17) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.(ஒ-207)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 26 . 12 . 1953

உதிர்வு 11 . 03 . 2008

## அமரர் துரைரத்தினம் சோதிராஜா

அதிகாலை வானம் இருண்டிருந்தது
சூரியனைக் காணவில்லை
காற்றும் வீசத்தயங்கியது
வீதி எங்கும் ஆழமான அமைதி
விழுதூன்றி மரமாய் வாழ்ந்த நாம்
இன்று ஆணிவேரைத் தொலைத்துவிட்டோம்
இந்தச் சொல்லின் அர்த்தம்தான் எத்தனையோ !
எங்கள் இல்லத்தில் ஒளியாய் இருந்த நீங்கள்
இடை நடுவில் ஒளிதர மறந்ததேனோ
ஆண்டுகள் இரண்டான போதும் ஆறவில்லை மனம்
வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தோம்
ஆனால் நீங்கள் திரும்பி வரவில்லை
நீங்கள் இனி வரவும் போவதில்லை
உங்கள் இறுதிப் பயணம்
விடையளிக்க முடியா விழிகளுடன் நான்
விருப்பமின்றி நீங்கள் போக மறுக்க
இதயம் வெடித்துச் சிதறியது
என் கண்ணில் வடியும் கண்ணீர்
துடைப்பதற்கு யாரும் இல்லை இங்கே
உங்கள் வரவை எதிர்பார்த்து
காலமெல்லாம் காத்திருக்கிறேன்.
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

இன்று (19.02.2010) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

[illegible], அச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
மனைவி.

(95631)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவாக...




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**01.10.1988**

✱ உத்தேச மாகாணசபைத் தேர்தலுக்கெனக் கொழும்பிலிருந்து யாழ். தபாலகத்துக்கு வந்து சேர்ந்த ஆவணங்கள் அடங்கிய நான்கு பொதிகள் இனந் தெரியாதோரால் அபகரிப்பு.

✱ காணிமூலப் பதிவேடுகளின் 250 தொகுப்புகள் யாழ்.காணிப் பதிவுத் திணைக்களத்திலிருந்து அண்மைய அசம்பாவிதங்களின்போது காணாமல் போய்விட்டதாகத் தெரிவிப்பு.

✱ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோவை நிறுத்த ஜே.வி.பி உட் பட ஏழு எதிர்க்கட்சிகள் உடன்பாடு தெரிவிப்பு.

**02.10.1988**

✱ இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் அனைத்து அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுவர் என ஏற்கப்பட்ட போதிலும், தடுப்புக்காவல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படுமென இலங்கை அரசு தெரிவித்துள்ளமை நியாயமற்றது எனப் பூஸாவில் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ள தமிழ் அரசியல் கைதிகள் குற்றச்சாட்டு.

✱ வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்ற 23 அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம்.

**03.10.1988**

✱ முல்லைத்தீவில் வைத்துத் தம்மால் சிறைப்பிடிக்கப்பட்ட இரு இந்திய அமைதிப்படை வீரர்களையும் விடுதலைப் புலிகள் விடுவிப்பு.

✱ ஜனாதிபதித் தேர்தலில் சிறிமாவோ வெற்றியீட்டிய பின்னர் தாம் தம்மிடமுள்ள ஆயுதங்களை ஒப்படைக்கப் போவதாக ஜே.வி.பியினர் சுதந்திரக் கட்சிக்கு உறுதியளிப்பு.

**04.10.1988**

✱ வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்கும் பணி நேற்றுமுதல் ஆரம்பம்.

✱ இலங்கையும் இந்தியாவும் நட்புறவு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற பிரதமர் பிரேமதாசவின் கோரிக்கையை இந்தியா பரிசீலிக்கும் என இந்தியத் தூதுவர் டிக்ஸிற் தெரிவிப்பு.

**05.10.1988**

✱ வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ இயக்கம் மற்றும் ஈ.என்.டி.எல்.எவ் என்பவற்றுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிப்பு.

✱ வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.கட்சியும் தனது வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாகத் தெரிவிப்பு.

**06.10.1988**

✱ பிரதமர் பிரேமதாச தனது பிரதமர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவிகளை ராஜினாமாச் செய்துவிட்டு என்னுடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வருவாரா? என சிறிமாவோ, பிரதமர் பிரேமதாசவுக்குச் சவால் விடுப்பு.

✱ சென்னை மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கிட்டு அங்கு சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு.

**07.10.1988**

✱ உத்தேச வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியும், ரெலோவும் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு.

✱ வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ். நிச்சயமாகப் போட்டியிடும் என அவ்இயக்கத்தின் பிரமுகரான வரதராஜப் பெருமாள் தெரிவிப்பு.

**08.10.1988**

✱ வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் நேற்றுத் தாக்கல்.

✱ வடக்கிலும் தெற்கிலும் எல்லா அமைப்புக்களும் ஆயுதங்களை வைத்திருக்கும்போது விடுதலைப்புலிகளை மட்டும் ஆயுதங்களை ஒப்படைக்குமாறு கோருவது நியாயமல்ல என நவசமசமாஜக் கட்சிச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிப்பு.

**09.10.1988**

✱ வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்த்லில் வாக்களிப்பு இல்லாமலே தெரிவு நடப்பதற்கு உதவும் விதத்தில் ஆளும் கட்சியான ஐ.தே.கட்சியும் தேர்தலில் போட்டியிடாது தவிர்க்க முடிவு.

✱ வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பான கடமைகள் எதுவும் தபாலகம் ஊடாக நடைபெறக் கூடாதென யாழ்.பிரதம தபாலகத்துக்குக் கிடைத்த எச்சரிக்கைக் கடிதத்தையடுத்து பிரதம தபாலகம் மூடப்பட்டது.

**10.10.1988**

✱ தமிழ் நாட்டில் சிறை வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் கிட்டு உட்பட 157 விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இந்திய அரசால் விடுவிக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் அனுப்பிவைப்பு.

✱ நாட்டில் வன்செயல்கள் இடம் பெறுவதாகக் காரணம் காட்டி தேர்தல்களை ஒத்திவைக்க ஜனாதிபதி ஜே. ஆருக்கு இடமளிக்க வேண்டாம் என சிங்கள - தமிழ் இளைஞர்களுக்கு சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ வேண்டுகோள் விடுப்பு.

**11.10.1988**

✱ வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் ஐ.தே. கட்சியும் முஸ்லிம் காங்கிரசும் தமது வேட்பாளர்களை நிறுத்தித் தேர்தல் களத்தில் குதிப்பு.

✱ தென்னிலங்கையில் பல இடங்களில் இடம்பெற்ற ஹர்த்தால் மற்றும் வீதிக் கிளர்ச்சிகளால் இயல்பு நிலை பாதிப்பு. பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல்.

**12.10.1988**

✱ தமிழகத்திலிருந்து இங்கு அனுப்பப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் கிட்டு மற்றும் சக போராளிகளதும் தற்போதைய நிலை என்ன என்பதை இந்தியா உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு தெரிவிப்பு.

✱ ஊரடங்குச் சட்டத்தை மீறி மாத்தறை மாவட்டத்தில் ஆயிரக் கணக்கானோர் கிளர்ச்சி. கிளர்ச்சிக்காரர்களைக் கலைக்க மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 15 பேர் மரணம்.

**13.10.1988**

✱ தமிழ் நாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட 157 விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் யாழ்.தளபதி கிட்டு உட்பட ஒன்பது பேர் மட்டும் விடுவிப்பு.

✱ நாடற்றவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கும் விதத்தில் சட்டமூலமொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவர அரசு முடிவு.

**14.10.1988**

✱ இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டோரில் பலர் தாம் விசேட அதிரடிப் படையினராலேயே சித்திரவதை செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆகப் பிந்திய அறிக்கையில் தெரிவிப்பு.

✱ இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை இரத்துச் செய்துவிட்டு மாகாண சபைகளைக் கலைக்கப்போவதாக சிறிமாவோ அல்லது எதிர்க்கட்சித் தலைவர் அனுராவோ தம்மிடம் ஒருபோதும் தெரிவிக்கவில்லை என இந்தியத் தூதுவர் டிக்ஸிற் தெரிவிப்பு.

**15.10.1988**

✱ தென் பகுதியில் அரசுக்கு எதிரான வன்செயல்கள் நீடிப்பு. கடுகண்ணாவை ரயில் நிலையம் தீவிரவாதக் கோஷ்டியொன்றினால் குண்டு வைத்துத் தகர்ப்பு.

✱ இலங்கையின் வடபகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்நிர்மாண வேலைகளுக்கு கனேடிய அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென மனித உரிமைகள் ஆணைக்குழு கனேடிய அரசிடம் வேண்டுகோள்.

# பொன்சேகாவின் சம்பந்தி அசோகா பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி

கொழும்பு,பெப்.19

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகனின் தாயாரான அசோகா திலகரத்னாவை குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கைதுசெய்து நேற்றுமுன்தினம் முற்பகல் கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது, அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கொழும்பு, திம்பிரிகஸ்ஸாய பகுதியிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் அசோகா திலகரத்னவுக்குச் சொந்தமான நான்கு பாதுகாப்புப் பெட்டகங்களிலிருந்து 5 லட்சத்து 27 ஆயிரம் அமெரிக்க டொலர்களும், 100 ஸ்ரேலிங் பவுண்களும், ஒன்றரைக் கோடி ரூபாவும் கண்டுபிடிக்கப்பட்டன எனக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சந்தேக நபரான அசோகா திலகரத்னவுக்கு எவ்வாறு இந்தப் பணம் கிடைத்தது என்பது குறித்து தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதனால், அவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸார் நீதிவானிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

எனினும், அசோகா திலகரத்ன சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணிகளின் கருத்துகளைக் கருத்திற்கொண்ட நீதிவான், சந்தேகநபரை தலா 50 லட்சம் ரூபா பெறுமதியான நான்கு பேரின் சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

மேலும் அசோகா திலகரத்னவுக்கு நாட்டிலிருந்து வெளியேறுவதற்குத் தடைவிதித்த நீதிவான், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நண்பகல் 12 மணிக்கு அவர் குற்றப்புலனாய்வுப் பொலிஸில் ஆஜராக வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தார்.

சந்தேகநபரால் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த பணம் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் குறிப்பிட்ட தனியார் வங்கிக் கிளையின் முகாமையாளருக்கு பிரதம நீதிவான் உத்தரவு ஒன்றையும் பிறப்பித்தார். (அ-சி)

# இடம்பெயர்ந்த 96ஆயிரம் பேரை விரைவில் மீளக்குடியமர்த்த அரசு நடவடிக்கையாம்

கொழும்பு,பெப்.19

இடம்பெயர்ந்துள்ளவர்களின் மேலும் 95 ஆயிரம் பேர் விரைவில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர் என இடர்முகாமைத்துவ மற்றும் மீள்குடியேற்ற அமைச்சுத் தெரிவித்துள்ளது.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டமை உறுதிசெய்யப்பட்ட பின்னர் இடம்பெயர்ந்தவர்கள் அவர்களது சொந்த இடங்களில் விரைவில் மீள்குடியேற்றப்படுவர் என அமைச்சின் செயலாளர் யு.என்.எம்.ஹால்டின் சொன்னார். சுமார் 75 ஆயிரம் பேர் தற்போது மெனிக்பாம் முகாமில் உள்ளனர். முகாமிற்கு வெளியே சுமார் 20 ஆயிரம் பேர் உள்ளனர் என அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். முகாமிலுள்ளவர்கள் அவர்களது உறவினர்களின் வீடுகளுக்கு செல்லுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

இவர்களில் ஒருபகுதியினரை அடுத்த வாரம் மீள்குடியமர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-சி)

# மனிதாபிமான நிவாரணம் வழங்கியமை குறித்து தொண்டு நிறுவனம் அமெரிக்க நீதிமன்றில் மனு

கொழும்பு,பெப்.19

மனிதாபிமான நிவாரணம் மற்றும் பயங்கரவாதிகளுக்கான உதவி ஆகியவற்றிற்கிடையில் உள்ள வேறுபாட்டை உறுதிப் படுத்துவதற்கான தீர்ப்பொன்றைக் கோரி, 'மனிதாபிமான நீதி செயற்றிட்டம்' என்ற அமைப்பு அமெரிக்க உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ள அமைப்பு ஹமாஸ், ஹிஸ்புல்லா, அல் கொய்தா மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற இயக்கங்களுக்கு மனிதாபிமான முறையில் உதவிசெய்துள்ளது எனத் தெரி வித்துள்ளது.

இந்த உதவிகள், சட்டஆலோசனை, ஆங்கில அறிவைப் புகட்டுதல் மற்றும் வைத்திய சேவைகள் மூலமே மேற்கொள்ளப்பட்டுள்ளன என அந்த அமைப்புக் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இவ்வாறான உதவிகள், பயங்கரவாதிகளுக்கு உதவும் நடவடிக்கையா? அல்லது மனிதாபிமான செயற்பாடுகளா என்பது குறித்து அமெரிக்காவின் அதியுயர் நீதிமன் றம் சந்தேகம் வெளியிட்டுள்ளது

இதனை அடுத்தே இந்த விடயத்தை தெளிவுப்படுத்தும் நோக்கில், இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சர்ச்சைக்குரிய வழக்கின் தீர்ப்பை அடுத்து அமெரிக்காவில் இருந்து சர்வதேச ரீதியாகச் செயற்படும் அமைப்புகள், தமது நடவடிக்கைகளை அமெரிக்க அரசின் சட்டங்களுக்கு அமைய வரையறுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)

# அம்பாறையில் தமிழர் பிரதிநிதித்துவத்தை காப்பாற்றுவதற்கு ஓரணி திரள்வது அவசியம்

## தமிழர் மகாசங்கம் வலியுறுத்து

மட்டக்களப்பு,பெப்.19

அம்பாறை மாவட்ட தமிழர் பிரதிநிதித்துவத்தை காப்பாற்றும் நோக்கில் சகல தமிழ்க்கட்சிகளையும் ஓரணியில் இணைந்து ஒரு பொதுச் சின்னத்தில் போட்டியிட வருமாறு அழைக்கி றோம்.

-இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து இச்சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

இந்த மாவட்டத்தில் உள்ள 74 ஆயிரம் தமிழ் வாக்குகளுக்குரிய ஒரே ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் பறிபோகக் கூடாது என்பதில் தமிழர் மகாசங்கம் அன்றும் இன்றும் என்றும் கரிசனை கொண்டுள்ளது. கடந்த காலங்களில் சங்கம் எடுத்த முயற்சிகளை அம்பாறை மாவட்ட தமிழர்கள் மட்டுமல்லாது அகில உலகமே அறியும்.

இந்நிலையில் கடந்த சனியன்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எம்மை அழைத்துப் பேசினர் எமது பொதுவான வேண்டுகோளை ஏற்று போட்டித் தவிர்ப்பை மேற்கொள்ளவும் இணங்கியுள்ளார்.

இதுபோன்று ஏனையவர்களும் விட்டுக்கொடுப்புடனும், சகிப்புத்தன்மையுடனும் செயற்பட்டு எமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத் தைக் காப்பாற்ற முன்வர வேண்டும்.

எமது சங்கம் கூடிய மந்திராலோசனை நடத்திய பின்னர் அம்பாறை மாவட்டத் தேர்தலில் கலந்துகொள்ள தயாராகும் சகல தமிழ்க் கட்சிகளையும் ஓரணியில் திரட்டிப் பொதுவானதோர் சின்னத்தில் போட்டியிட ஏற்பாடு செய்வது எனத் தீர்மானமாகியது. ஒவ்வொரு தமிழ் மகனும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய கட்டாயமுள்ளது. நாம் அரசியல் சார்ந்தவர்களல்லர்.

1994 பொதுத் தேர்தலில் பிரிந்து நின்று போட்டியிட்டதனால் எமது தமிழ்ப்பிரதிநிதித்துவத்தை இழந்தோம். அதனால் நாம் அனுபவித்த துன்ப துயரங்கள் சொல்லும் தரமன்று. அது ஒரு வரலாற்றுப் பாடம். அதனை விடக்கூடாது என்பதற்காக 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நாமே சுயேச்சையில் களமிறங்கினோம். அம்முறை சகல தமிழ்க்கட்சிகளும் உடன்பட்டபோதிலும் தமிழர் கூட்டணி உடன்படவில்லை.

அவர்கள் தனித்துப் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்தனர். அதிஸ்டவசமாக அவரது வேட்பு மனுநிராகரிக்கப்பட்டது. அதனால் எமது சுயேச்சைக்குழு வேட்பாளர் நாடாளுமன்ற பிரதிநிதியானார். அரசுடன் இணைந்து பல சேவைகளைச் செய்தார். எனவே, இத்தேர்தலில் அனைவரும் ஓரணியாகப் போட்டியிட வேண்டும் என்பது வரலாற்றுத் தேவை - என்றுள்ளது.(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் புதன்கிழமை கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர் பான்ட் வாத்தியத்துடன் அழைத்துவரப்படுவதையும், கல்லூரியின் பழைய மாணவன் புரட்சிதாசன் உரைநிகழ்த்துவதையும் முதல் இரு படங்களிலும், மெய்வன்மைப் போட்டியில் வெற்றிபெற்ற றோமேன் இல்லத் தலைவருக்கு பிரதம விருந்தினரும் அவரின் பாரியாரும் இணைந்து வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதனையும் இடைவேளை நிகழ்வாக இடம்பெற்ற கரத்தே பயிலும் மாணவர்களின் சாகச நிகழ்வினையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள்: தமிழினியன்)

# மூன்றில் ஒரு பங்கு...

*(07 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

நிச்சயமாக சுதந்திர முன்னணி இன்னமும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறவேண்டும். ஆனால் அது ஜனாதிபதித் தேர்தலில் போல் எதிர்க் கட்சிகளுக்கு எதிரான குண்டர் நடவடிக்கைகள் மற்றும் வன்முறைத் தாக்குதல்களோடு சேர்த்துத் தேர்தல் பிரசாரத்துக்காக அரசுக்குச் சொந்தமான ஊடகங்கள் உட்பட அரச வளங்களை பகிரங்கமாகப் பயன்படுத்தும் அதே வழி முறைகளை பின்பற்றும் என்பதற்கான ஒவ்வொரு அறிகுறியும் உள்ளன. ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து இரண்டு வார காலத்தில் அரசு பொன்சேகாவின் ஆதரவாளர்களைக் கைதுசெய்து, 'இந்த முன்னாள் இராணுவத் தளபதியின் விசுவாசிகளான இராணுவ அதிகாரிகளை பதவிவிலக்கி' எதிர்க் கட்சியான மக்கள் விடுதலை, முன்னணி (ஜே.வி.பி.) சார்ந்த பத்திரிகையின் ஆசிரியரை கைது செய்து, மற்றும் அரசாங்கத்தை விமர்சிக்கும் வலைத் தளங்களை தடுத்துள்ளது.

அசசாங்கத்தைத் தூக்கி வீசுவதற்காக எதிர்க் கட்சிகளுடன் சதி செய்தார் என்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டின் கீழ் பொன்சேகா அவரது அலுவலகத்தில் இருந்து இழுத்துச் செல்லப்பட்டு இராணுவப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். நாட்டின் முன்னாள் உயர்மட்ட ஜெனரலும் மற்றும் ஜனாதிபதி வேட்பாளருமான பொன்சேகாவை அந்த முறையில் கைது செய்யமுடியுமெனில் எந்தவொரு அரசியல் எதிரியும் இந்த முறையிலேயே நடத்தப்பட முடியும். எதிர்க் கட்சித் தலைவர்களுடன் பொன்சேகா சதியில் ஈடுபட்டிருந்தால் அவர்களும் 'தேசத்துரோக' நடவடிக்கையில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பதே அதன் உட்பொருளாகும்.

அரசுக்குச் சொந்தமான 'டெயிலி நியூஸ்' பத்திரிகையின் ஆசிரியர் தலைப்பு எதிர்க் கட்சிகள் சார்ந்த ஊடகங்களுக்கு எதிரான அச்சுறுத்தலுக்கு சமமான ஒன்றை விடுத்தது. 'கடந்த பல வாரங்களாக ஊடகங்களைக் கவனமாக வாசித்தால் பிழையான தகவல்களுக்கு பல உதாரணங்களை ஒருவர் காண முடியும்' என அது தெரிவிக்கின்றது. ஜனாதிபதி தேர்தலின் நேர்மையைப் பற்றி 'தவறான தகவல் தந்ததாக' ஊடகங்களை விமர்சித்த பின்னர் அந்த பத்திரிகை பொன்சேகா கைதுசெய்யப்பட்டமையை வரவேற்கிறது.

இந்தக் கைதை அங்கீகரிக்காமல் இருப்பதற்குள்ள உரிமையை ஏற்றுக்கொள்ளும் அந்த ஆசிரியர் தலைப்பு ''இது குறிப்பிட்ட சில ஊடகங்களும் குறிப்பிட்ட அரசியல்வாதிகளும் கூறிக்கொள்வது போல் இந்தக் கைது சட்ட விரோதமானது என்ற முடிவுக்கு வர எவரையும் அனுமதிக்கவில்லை. அந்த கருத்தைப் பரப்பும் எந்தவொரு ஊடகமும் அல்லது நபரும் பிழையான தகவல்களை வழங்குவதோடு இராணுவத்துக்குள்ள அதிகாரங்கள் பற்றி மக்களையும் பிழையாக வழிநடத்துகின்றனர்.'' - எனப் பிரகடனம் செய்கின்றது.

''இந்தப் பிழையான தகவல் தருவதானது நாட்டின் எதிரிகள், நாட்டுக்கு அவப்பெயரைக் கொண்டுவரக் கூடிய மற்றும் தேசிய பாதுகாப்பையும் அரச இறைமையையும் சமரசத்துக்குள்ளாக்கக் கூடிய, திகைப்பூட்டும் நிலைமைக்குள்ளும் கூட தள்ளிவிடக் கூடிய ஆபத்தில் தங்கியிருக்கின்றது'' என அந்தப் பத்திரிகை எச்சரிக்கின்றது.

முதலாளித்துவ ஜனநாயக வரம்புக்குள் கூட, பிரஜைகளால் கைதுகள் தொடர்பான சட்டப்பூர்வத் தன்மை மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விவகாரங்கள் தீர்மானிக்கப்படும் இடமான நீதிமன்றத்தின் ஊடாக சவால் செய்ய முடியும். உண்மையில் பொன்சேகாவின் கைது விவகாரம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. தேசிய பாதுகாப்பு என்ற அடித்தளத்தில் அவரது கைதின் சட்டப்பூர்வத் தன்மையை கேள்விக்குள்ளாக்குவதை அங்கீகரிக்க முடியாது எனப் பிரகடனம் செய்வதன் மூலம், அரசு, எது சட்டபூர்வமானது மற்றும் ஏற்கத்தக்க மற்றும் ஏற்கக் கூடாத பகிரங்க விமர்சனம் எத்தகையது என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை அதுவே எடுத்துக்கொள்கின்றது.

கொழும்பு ஊடகங்கள் நன்கு அறிந்தவாறு அத்தகைய அச்சுறுத்தல்கள் மோசமான விளைவுகளைக் கொண்டவை. கடந்த நான்கு ஆண்டுகளாகப் பாதுகாப்புப் படையினருடன் கூட்டாக இயங்கும் அரசு சார்பு கொலைப் படைகளால் எதிர்ப் பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது 'காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்'. ராஜபக்ஷ அரசாங்கத்திடம் இது பற்றி கவனத்திற்குக் கொண்டுவந்தால் அது 'தேசியப் பாதுகாப்பின்' நலனுக்காக அத்தகைய நடவடிக்கைகள் அவசியம் என சந்தேகத்திற்கிடமின்றி அறிவிக்கும்.

தேர்தலின் போதும் அதன் பின்னரும் மேலோங்கவுள்ள அச்சுறுத்தல் மற்றும் அடக்குமுறை சூழ்நிலை பற்றிய இன்னுமொரு எச்சரிக்கையே அந்த ஆசிரியர் தலையங்கமாகும். இறுதி ஆய்வுகளில் ஜனநாயக உரிமைகள் மீதான அரசாங்கத்தின் மோசமான தாக்குதல்கள் அடிப்படையில் பொன்சேகாவை மற்றும் எதிர்க் கட்சிகளை இலக்காகக் கொண்டவையல்ல 'மாறாக' அவை தொழிலாளர் வர்க்கத்தை இலக்காகக் கொண்டதாகும். தேர்தல் முடிந்த கையோடு, அடுத்த ராஜபக்ஷ அரசு, சர்வதேச நாணய நிதியத்தின் வயிற்றிலடிக்கும் கோரிக்கைகளின் வழியில் வாழ்க்கைத் தரத்தின் மீது கடுமையான தாக்குதலை முன்னெடுப்பதோடு எந்தவொரு எதிர்ப்பின் மீதும் அரச இயந்திரத்தின் முழு பலத்தையும் பயன்படுத்தும்.

புலிகளுக்கு எதிரான 26 ஆண்டுகால நீண்ட யுத்தத்தின் போது ஆட்சியில் இருந்த கொழும்பு அரசுகள், பொலிஸ் அரசுக்கான வரைவுத் திட்டத்தை வழங்கும் பிரமாண்டமான இராணுவ-பொலிஸ் இயந்திரத்தை கட்டியெழுப்பியுள்ளன. ராஜபக்ஷ தனது முதல் பதவிக் காலத்தின் போது அரசியல் எதிர்ப்புக்களை அச்சுறுத்தவும் நசுக்கவும் தனக்குள்ள விரிவான அதிகாரங்களை உச்சிவரை சுரண்டிக் கொண்டார். இப்போது அவர் உழைக்கும் மக்களுக்கு எதிராக பொருளாதார யுத்தமொன்றை தொடங்கத் தயாராகின்ற நிலையில், ஜனாதிபதி தனது சர்வாதிகார ஆட்சிக்கு ஓர் அரசமைப்பு இறப்பர் முத்திரையை வழங்க மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எதிர்பார்க்கின்றார்.

நன்றி - 'இன்போதமிழ்' இணையம்.

## ஆலய வழிபாடும் சுயநலமற்ற சமய சமூகத் தொண்டுகளும்

ஞானக்கதிர்

''கோயில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம்'', ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பது முதுமொழி. இறைவன் ஒருவன். அவன் பல ரூபத்தில் எங்கும் வியாபித்திருக்கின்றான். அவன் எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டவன். எம் உடம்பில் இறைவன் ஒன்றாகக் கலந்து நிற்பவன். எமக்கு முன் எத்தனையோ, சித்தர்களும், ஞானியரும் தோன்றிப் பல அற்புதங்களைச் செய்தும், பல உண்மைகளை எடுத்துரைத்தும் எம்மை உண்மையான் நல்வழி செல்ல வழிகாட்டியுள்ளனர். இக்காலத்திலும் பல ஞானிகளும், சிவநெறிச் செம்மல்களும் நம் மத்தியில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் அன்பு - இரக்கம் என்ற சொல்லுக்குப் பெருமதிப்பளித்துள்ளனர்.

''அன்பே சிவம்'' - அன்பே கடவுள்'' என்ற உண்மையை நன்கு அறிந்து உள்ளன்போடு தொண்டு செய்து புனிதமாகத் தெய்வீகத்துடன் செயறப்பட்டவர்கள்.

மக்கள் உடல் வளர்ச்சிக்கு உணவு இன்றியமையாததாகும். அதுபோல் மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆலய வழிபாடு இன்றியமையாததாகும். 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதிவடிவான எமது இறைவனை நாம் உள்ளன்போடு வணங்க உகந்த இடமே ஆலயம் ஆகும். ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்பது முதுமொழி. நாம் விரும்பிய நன்மைகளை எல்லாம் இனிது அடையவேண்டுமெனில் ஆலயங்களுக்கு ஒழுங்காகச் செல்லவேண்டும். நாம் மனதினை ஒருவழிப்படுத்திக் கடவுளை உள்ளன்போடு புனிதமாக நினைத்துத் தியானிக்க வேண்டும். ஆலயத்தில் நாம் தவறாது கடவுளின் நாமத்தை உச்சரித்தும், பஜனை - கூட்டுப் பிரார்த்தனைகள் பாடியும் புனிதமாக வழிபாடு செய்யவேண்டும்.

இராமகிருஷ்ணரின் முக்கியத்துவம் வாய்ந்த உபதேசத்தில் தொண்டின் சிறப்புகள் விரிவாகக் கூறப்படுகின்றன. உண்மையில் நாம் ''ஆலய வழிபாடும், சமய, சமூகத் தொண்டுகளும், இறையருள் சுரக்கும் சுயநலமற்ற புனிதமான சகல தொண்டுகளையும் நாம் புனிதமாகவும், உள்ளன்போடும், இறைபக்தியுடனும் செய்து வந்தால் எமக்கு உண்மையான இறையருள் கிடைத்தே ஆகும்.

நம் உள்ளத்தில் சத்தியத்தோடு சுயநலமற்ற தொண்டும் ஒன்றுசேருமானால் மனம் விரைவில் தூய்மை அடைந்து உயர்ந்த ஆன்மீக நிலையை அடைகிறது. எங்கும் பரவியுள்ள காற்றுத்தான் நுரையீரல்களுக்குள்ளும் இருக்கிறது. காற்றை, இது என்னுடைய காற்று என்று சொல்லிக்கொள்ள முடியுமா? அதுபோலவே எல்லா இடத்திலும் ஒரே இறைவன் தான் பரவி இருக்கிறார்.

நன்றி ஞானச்சுடர்

LOLC
imagine the possibilities

LOLC மாபெரும் வாகனச் சந்தை
நீங்கள் விரும்பும் வாகனத்தை உடனடியாக பெற்றிடுங்கள்

அனைத்து வாகன லீசிங்களுக்கும் காப்புறுதி இலவசம்

குறைந்த ஆவணங்கள்
குறைந்த வட்டி வீதம்
இலவசப் பதிவு
கவர்ச்சிகரமான சலுகைகள்
லீசிங் பெறும் அனைவருக்கும் விஷேட பரிசுப்பொதிகள்
பிறவுன்ஸ் இடமிருந்து இரண்டு மற்றும் நான்கு சக்கர ட்ரக்டர் வண்டிகள்

பெப்ரவரி 14ம் திகதி முதல் 28ம் திகதி வரை
121, பவர் ஹவுஸ் வீதி, யாழ்ப்பாணம்
அழையுங்கள் - 0773-596476 / 0772-394837

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி வேறு வழிகளை உலகம் யோசிக்க வேண்டும்


இலங்கைத் தீவிற்குள் தமிழர் மீது விரிக்கப்பட்ட 'போர்க்களம்' தற்போது தென்னிலங்கைச் சிங்கள மக்களிடமும் விரிவாக்கப்படும் காட்சிகள் அரங்கேறத் தொடங்கி விட்டன.

அனைத்துலக சமூகத்திற்குப் 'பயங்கரவாதம்' என்னும் புலிப் பூச்சாண்டி காட்டிக்கொண்டிருந்த சிறிலங்கா சிங்களப் பெருந் தேசியவாதம் - தற்போது தனது உண்மையான 'ஜனநாயக' முகத்தைத் தனக்குத் தானே காட்டத் தொடங்கி இருக்கின்றது.

அதே போல் - சிங்கள மக்களைத் தேசியவாத முகம் காட்டி ஏமாற்றியவர்கள் - இப்போது, தமது குடும்ப ஆதிக்கவாதத்தை நிறுவுவதற்கான 'ஜனநாயகக் கொலை' முயற்சியில் தீவிரம் காட்டி வருகிறார்கள்.

சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னான அரசியல் நிகழ்வுகள் இதைத்தான் சுட்டி நிற்கின்றன.

இப்படி இலங்கைத் தீவின் ஜனநாயகம் சீரழிக்கப்பட்டு, ஆதிக்கவாத இன வெறிகொண்ட இராணுவ பலத்துடனான ஆட்சி மேலெழுந்ததற்கும், தமிழர்கள் மீதான பேரவலத்தை நிகழ்த்தியதற்குமான பொறுப்பாளிகள் யார்...?




இன்றைய இந்த ஜனநாயகப் படுகொலைக்கு நேரடியாகவும் மறைமுக மாகவும் பங்களித்த சக்திகள் எவை? அவை தங்களது தார்மீகப் பொறுப்பி லிருந்து விலகிச் செல்ல முடியுமா..? அல்லது, தமது சொந்த நலன்களைத் தன்னும் அவற்றால் இனிக் காக்க முடியுமா...?

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த வினையை விதைத்தவர்களே அதன் விளைச்சலையும் அறுக்க வேண்டியவர்களானதும், இனவாதப் பூதத்தை வளர்த்தவர்களே அதற்கு இரையாகிப் போனதும்தான்.

இந்த விதைப்பையும், வளர்ப்பையும் அறிய, வரலாற்றில் நாம் அதிக தூரம் பின்னோக்கிப் பயணிக்க வேண்டியதில்லை.

2002 ஆம் ஆண்டின் பின்னான நிகழ்வுகளில் இருந்தே அவற்றை அடையாளம் காணலாம்.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களினைச் சுருக்கி அல்லது அகற்றி மக்களின் மீள் குடியமர்வுக்கு வழி செய்வதன் ஊடாக, சமாதான முயற்சிகளை முன்னோக்கி நகர்த்தும் வாய்ப்பினை இல்லாமல் செய்தவர் யார்?

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான அன்றைய இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் சரத் பொன்சேகா.

விடுதலைப் புலிகளும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசும் தற்காலிக உடன்பாட்டின் ஊடாக, இடைக்கால நிர்வாக சபை முறையினைச் செயற்படுத்தும் வாய்ப்புக்களினை உருவாக்கிய போது, அமைச்சரவைப் பதவிகளினைப் பறித்து நிலைமையினை மோசமாக்கியது யார்?

சிறிலங்கா குடியரசின் அன்றைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து வந்தவருக்கு வாசல் திறந்து, விடுதலைப் புலிகளின் குவிமையப்பட்டிருந்த அரசியல்-போரியல் பலத்தினை சிதைத்தவர் யார்?

சிறிலங்கா நாடாளுமன்றத்தில் அன்று அதிக ஆசனங்களை வென்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும், அதன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும்.

ஆழிப் பேரலை அனர்த்தத்தின் பின்னான பொதுக் கட்டமைப்பினை சிறிலங்கா அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் இணைந்து செயற்படுத்த முன்வந்த போது அதற்கெதிராக நீதிமன்றத்திற்குச் சென்று அதனைச் செயலிழக்கச் செய்தது யார்?

இன்றைய எதிர்க் கட்சிக் கூட்டணியிலுள்ள மக்கள் விடுதலை முன்னணியும் அதன் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவும்.

ராஜபக்ஷக்களின் தலைமைத்துவ ஆற்றலினையும், அரசியல் வல்லமையையும், போர்த் தந்திரோபாயத் திறனையும், இராஜதந்திர சூழ்ச்சிக் கெட்டித்தனத்தையும் குறைத்து மதிப்பிட்டு - ஆட்சிக் கதிரையை அவர்கள் கைப்பற்ற முதலில் இடம் கொடுத்தது யார்?

**வேலுப்பிள்ளை பிரபாகரன்.**

'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற பதாகையின் கீழ் முன்னெடுக்கப்பட்ட ஓர் இன அழிப்புப் போருக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தவறியோர் யார்? சிறிலங்காவின் இடது சாரிகள், கல்விமான்கள், மதத் தலைவர்கள், குடி மக்கள் தலைவர்கள், ஊடகத்துறையினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க...)

---

# மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை தேடி ஒரு பொதுத் தேர்தல்.....!

**அரசியல் ஆய்வாளர்**
**கலாநிதி உ.சோ.இ.சரத்குமார்**

பீதி மற்றும் அச்சுறுத்தல் சூழ்நிலையின் மத்தியில் இலங்கையில் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு எதிராகப் போட்டியிட்ட ஜெனரல் சரத் பொன்சேகாவை கைது செய்த மறு நாளே நாடாளுமன்றத்தைக் கலைத்து ஏப்ரல் 8 அன்று பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த கால எல்லை தற்செயலானதல்ல. அரசியல் எதிர்ப்புக்களை அச்சுறுத்தவும் நசுக்கவும் அரசு எடுக்கும் நடவடிக்கையில் சகல வழிமுறைகளையும் பயன்படுத்தவுள்ள ஒரு தேர்தலுக்கே இந்த கைது களம் அமைத்துள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசமைப்பை மாற்ற இயலக்கூடியவாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் பெற முயற்சிப்பதாக தெளிவுபடுத்திவிட்டது. சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் மற்றும் குறிப்பிடத்தக்க அரசமைப்புத் திருத்தங்களைச் செய்யவும் ஒரு மக்கள் ஆணையை அரசு எதிர்பார்ப்பதாக புதன் கிழமை ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

தற்போது அரசாங்கம் கையாளுவதற்கு எளிதற்ற மற்றும் ஸ்திரமற்ற கட்சிகளின் கூட்டணியில் தங்கியிருக்கின்றது. ஜனாதிபதி ஏறத்தாழ ஒவ்வொரு அரச சார்பு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் அவர்களது விசுவாசத்தைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இலஞ்சம் வழங்கும் வகையில் அவர்களுக்கு ஓர் அமைச்சர் பதவியையோ அல்லது வேறு ஏதாவது பதவியையோ வழங்கத்தள்ளப் பட்டுள்ளார்.



ராஜபக்ஷ தனது சொந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் (சிறீ.ல.சு க.) பலத்தை அதிகரித்துத் தனது கூட்டணி கட்சிகளின் செல்வாக்கை குறைத்து மற்றும் மிகவும் இலகுவாக நிர்வகிக்கத்தக்க நிர்வாகமொன்றை அமைக்க விரும்புகிறார். ஆயினும் அமைச்சரவையின் அளவைக் குறைப்பது மட்டும் மிகவும் வெளிப்படையான ஆட்சிக்கு வழிவகுக்காது. அரசு நாட்டில் ஆழ மடைந்துவரும் பொருளாதார நெருக்கடியின் சுமைகளை உழைக்கும் மக்கள் மீது சுமத்துவதற்குத் தயாராகின்ற நிலையில் அது நாடாளுமன்றத்தின் மீதும் மற்றும் அரச இயந்திரத்தின் சகல பிரிவுகள் மீதும் தனது பிடியை இறுக்கிக்கொள்ளவும் முயற்சிக்கின்றது.

அச்சமூட்டும் வகையில் என்ன வடிவிலான அரசமைப்பு திருத்தங்கள் பிரேரிக்கப்படுகின்றன என்பது பற்றி பிரேம ஜயந்த சுட்டிக்காட்டவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் அமைச்சர்களை நியமிக்கவும் பதவிவிலக்கவும் மற்றும் அரசு ஒன்றை பதவி விலக்கவும் ஏற்கனவே ராஜபக்ஷ விரிவான அதிகாரங்களைக் கொண்டுள்ளார். தற்போது அவர் நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களை தன்வசம் கொண்டுள்ளார். கடந்த மே மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் தோல்விகண்ட போதிலும் தற்போதைய அவசரகால நிலைமையின் கீழ் அவரால் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடை செய்யவும் ஊடக தணிக்கைகளை திணிக்கவும் மற்றும் குற்றச்சாட்டுக்கள் இன்றி கைது செய்ய அதிகாரமளிக்கவும் முடியும்.

ராஜபக்ஷ பெருமளவில் நாட்டின் சட்ட முறைமையையும் அரசமைப்பையும் அலட்சியத்துடனேயே நடத்தி வந்துள்ளார். 2008 டிசெம்பரில் அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் கீழ் கோரப்பட்டுள்ள அரசமைப்புச் சபையை ஸ்தாபிக்குமாறு அவருக்கு உயர் நீதிமன்றம் கொடுத்த உத்தரவை ஜனாதிபதி உதைத்துத் தள்ளினார். வெளிப்படையாக உருமறைத்து விடுத்த சரீர தாக்குதல் அச்சுறுத்தல் ஒன்றில் ''சட்டத்துறை அதிகாரிகளின் வீடுகளுக்கு கல் எறியப்பட்டு மற்றும் மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு எதிராக அவதூறு பிரேரணைகள் கொண்டுவரப்பட்ட காலகட்டம் பற்றி'' அவர் நீதிபதிகளுக்கு நினைவூட்டினார்.

அரசமைப்பின் கீழ் அரசாங்கத்தாலும் எதிர்க் கட்சியாலும் கூட்டாக ஸ்தாபிக்கப் படும் இந்த அரசமைப்புச் சபை பொலிஸ், தேர்தல் திணைக்களம், சட்டத்துறை மற்றும் பொது நிர்வாகத்தின் ஏனைய பகுதிகளை ஸ்தாபிப்பதற்குப் பரந்த பொறுப்பைக் கொண்டுள்ளது. ராஜபக்ஷ தனது நெருங்கிய விசுவாசிகளை நியமிக்கவும் மற்றும் அரச இயந்திரத்தை இயக்கவும் தனக்குள்ள சொந்த இயலுமையை இவை குறுக்கறுப்பதன் காரணமாக இத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை களைக் கூட அமுல்படுத்துவதை ஏற்கமறுக்கின்றார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக அரசமைப்புச் சபையை ஸ்தாபிக்கும் நடவடிக்கையைக் கிடப்பில் போட்டுவிட்டு இப்போது அரசு அதை முன்னெடுக்கப் போவதாக பிரேம ஜயந்த சுட்டிக்காட்டுகிறார். இந்த மனமாற்றத்துக்கான காரணத்தை அடையாளங்காண்பது சிரமம் அல்ல. சுதந்திர முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதில் வெற்றி பெற்றால் தம் விருப்பப்படியான அரசமைப்புச் சபையை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது நாங்கள் அதன் கட்டமைப்பை அரசமைப்பு ரீதியாக மாற்றுவோம் அல்லது அதை முழுமையாகத் தூக்கி வீசுவோம் என எதிர்க் கட்சிகளுக்கு இறுதி நிபந்தனை விதிக்கக்கூடிய நிலையில் அது இருக்கும்.

(06ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தொகுப்பு: உதயன்-கல்விச்சுடர்

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 02


# வினாத்தாள் - I

நேரம் : 45 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.**

**✱ பின்வரும் விவரணம் மூலம் கூறப்படும் உணர்வைக்காட்டும் படத்தின் கீழ்க் கோடிடுக.**

01. கவலைப்படாதீர்கள் நடந்தது நடந்து விட்டது. எல்லாம் நன்மைக்கேதான் என்று மனதைத் திடப்படுத்திக்கொள்ளுங்கள். தோல்விதான் வெற்றிக்கு முதற்படி. நாங்கள் எல்லோரும் உங்கள் அருகில் இருக்கும்போது நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும். தைரியமாக இருங்கள்.

1) 2) 3) 4)



02. எனது கவிதைக்கு முதல் பரிசு கிடைக்கும் என்று நான் கனவிலும் நினைத்திருக்க வில்லை. எனக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை முதலில் அம்மாவிடம் சொல்ல வேண்டும்.


1) 2) 3) 4)


03. அம்மா ....... நான் ....... நா ...... ன் .... பேனாவைத் தொலைத்து விட்டேன் ..... அம்மா ....... இனிமேல் தொலைக்கவே .... மாட்டேன் ....

1) 2) 3) 4)


**✱ அடுத்து வரவேண்டிய உருவின் கீழ்க்கோடிடுக.**

04. 1) 2) 3)


05. 1) 2) 3)


**✱ பிழையான கூற்றின் கீழ்க்கோடிடுக.**

06. 1) வல்லாரை, பசளி, கரட் என்பன நோயிலிருந்து எம்மை பாதுகாக்கும்.
2) சோறு, கருப்பட்டி, ஈரப்பலா மூலம் எமது உடலுக்கு சக்தி கிடைக்கின்றது.
3) கறி அடுப்பில் நன்கு கொதிக்கும்போதே தேசிப்புளி இட வேண்டும்.

07. 1) இலங்கை இந்தியாவிற்கு வடக்கே, இந்தியாவிற்கு அருகே அமைந்துள்ளது.
2) இலங்கைக்கு அண்மையில் உள்ள தீவுக்கூட்டம் மாலை தீவாகும்.
3) அரச இலச்சினையில் உள்ள தர்மச் சக்கரம் தார்மீகத்தை எடுத்துக்காட்டுகிறது.

**✱ தரப்படும் தொடர்பை அவதானித்து அதற்கேற்ற தொடர்புள்ள விடையின் கீழக் கோடிடுக.**

08. யானை - களிறு
1) மான் - பிணை. 2) குதிரை - குண்டு.
3) புலி - போத்து. 4) குரங்கு - கடுவன்.


09. மயில் - அகவும்
1) புறா - சொல்லும். 2) கிளி - இரையும்.
3) ஆடு - உறுமும். 4) கரடி - உறுமும்.

**✱ கீழே சில அறிவுறுத்தல் வாசகங்கள் காணப்படுகின்றன. அவை உணர்த்தும் சரியான கருத்தைத் தரும் விடையின் கீழ்க் கீறிடுக.**

10. குடி நீர்
1) குடிப்பதற்கு உகந்த நீர் என்பதாகும்.
2) தண்ணீர் குடியுங்கள் என்பதாகும்.
3) இந்த நீர் உடை கழுவ உகந்ததல்ல என்பதாகும்.

11. கடி நாய் கவனம்
1) நாய்கள் கவனமாக இருக்க வேண்டும் என்பதாகும்.
2) இவ்வீட்டில் நாய்கள் இருக்கின்றன என்பதாகும்.
3) உள்ளே வருவது அபாயகரமானது என்பதாகும்.


**✱ தரப்படும் எழுத்துக்களையும் அவற்றுக்கான குறியீடுகளையும் அடிப்படையாகக்கொண்டு விடையளிக்குக.**




12. அவதானம் என்ற சொல்லை சரியாகக்குறிக்கும் குறியீட்டினை தெரிந்து கோடிடுக.





13. பின்வருவனவற்றில் சரியான தொடர்பை காட்டுவது,
1) அவசரம் =
2) சம்பவம் =
3) வசனம் =



**✱ முதலில் தரப்படும் வடிவத்துக்கு பொருத்தமான வடிவத்தை எதிரே தரப் பட்டுள்ள உருக்களிலிருந்து அதன் கீழ்க்கோடிடுக.**

14.

1) 2) 3) 4)

15.

1) 2) 3) 4)

16.

1) 2) 3) 4)

**✱ பின்வரும் பாடலை நன்கு வாசித்து சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

நல்லறிவான்ற தலைமுறை தோன்றிட
நம் மனைவருக்கும் நம்மரசு தந்திடும் ஏடிதை
இளையோர் நம் சோதர்களுக்காய் உணர்வுடன் பேணி
பாது காத்திடுவோம் நன்றாய்.

17. நம்மனைவர் என்பது,
1) ஆசிரியர்களை. 2) பெற்றோர்களை.
3) மாணவரை.


18. இங்கு ஏடு எனக் குறிப்பிடப்படுவது,
1) காலடிகளை. 2) நாவலை.
3) பாட நூலை.

**✱ உருக்களுக்கு பொருத்தமான கருத்துக்களை உடைய விடையின் கீழ்க் கோடிடுக.**

19. 1) மகிழ்ச்சி - செல்வம் - முன்னோக்கி.
2) நண்பிகள் - மகிழ்ச்சி - ரசித்தல்.
3) உல்லாசம் - கைகோர்த்து - நேரம்.



20. 1) நறுமணம் - தென்றல் - பறக்கிறது.
2) அழகு - நிறம் - காலை.
3) மகரந்தம் - மகிழ்ச்சி - அழகு.



**✱ பின்வரும் வினாக்களில் கூட்டில் குறுக்காவும் மேலிருந்து கீழாகவும் மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் உருவாகும் வகையில் வெற்றிடத் திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.**

21.

| | | |
|---|---|---|
| ம | | பு |
| வி | | து |
| க | | மை |

1)

| |
|---|
| ப |
| ழு |
| ம |

2)

| |
|---|
| ண் |
| தி |
| ந் |

3)

| |
|---|
| ர |
| ரு |
| ரு |

22.

| | | |
|---|---|---|
| பு | | மை |
| ▨ | ற | ▨ |
| த | | டு |

1)

| |
|---|
| ல |
| ▨ |
| க |

2)

| |
|---|
| து |
| ▨ |
| கு |

3)

| |
|---|
| து |
| ▨ |
| வி |

**✱ தகவல்களை அடிப்படையாகக்கொண்டு மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


23. 24 → [ ] → 8

பொறியின் உள்ளே சென்ற எண் 24 வெளியே வந்த எண் 8 எனின், பொறி செய்த வேலை,
1) × 3 2) - 3
3) ÷ 3 4) +3

24. → [×5] → 505

எனின், பொறியின் உள்ளே சென்ற எண் யாது?
1) 101 2) 11
3) 110 4) 1010

**✱ விலைத் தொகுதியிலிருந்து 25-27 வரையான வினாக்களுக்கு விடை தருக.**




25. ஒரு மாம்பழத்தின் விலை எவ்வளவு?
1) ரூபா 20 2) ரூபா 30 3) ரூபா 40 4) ரூபா 50

(9ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 புலமைப்பரிசில் மாணவர்களுக்காக பல மாவட்ட ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு

26. ஒரு அன்னாசிப்பழத்தின் விலை எவ்வளவு?
1) ரூபா 30 2) ரூபா 40 3) ரூபா 50 4) ரூபா 20

27. மூன்று மாம்பழம், இரண்டு அப்பிள் பழத்தின் விலை எவ்வளவு?
1) ரூபா 110 2) ரூபா 100 3) ரூபா 140 4) ரூபா 120

* **ஒரு வகுப்பறையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.**




28. இதற்கேற்ப பாடசாலைகளில் அதிகம் உள்ளவர்,
1) சிறுவர்கள். 2) வளர்ந்த ஆண்கள்.
3) வளர்ந்த பெண்கள்.

29. பாடசாலையில் உள்ள மாணவர்களை கூடிய எண்ணிக்கையில் இருந்து குறைந்த எண்ணிக்கை வரை ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடை,
1) சிறுவர்கள், வளர்ந்த ஆண்கள், வளர்ந்த பெண்கள்.
2) சிறுவர்கள், வளர்ந்த பெண்கள், வளர்ந்த ஆண்கள்.
3) வளர்ந்த ஆண்கள், சிறுவர்கள், வளர்ந்த பெண்கள்.
4) வளர்ந்த பெண்கள், வளர்ந்த ஆண்கள், சிறுவர்கள்.

* **சரியான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**


30. சமிலை விட பாரிசா உயரமானவள். ஜென்னா பாரிசாவை விட உயரம் குறைந்தவர். சமில் ஜென்னாவை விட உயரம் குறைந்தவன். இவர்களில் உயரம் குறைந்தவர் யார்?


(..........................................)

31. தீபனுக்கு வடிவழகி என்ற ஒரே ஒரு சகோதரி உண்டு. இவள் பாலா என்பவரை மணந்து சிந்தாதேவி என்ற பெண்ணை பெற்றெடுத்தாள். தீபன் தம்பதியினருக்கு கயல்விழி என்ற பிள்ளை உண்டு. சிந்தாதேவி கயல்விழியை என்ன முறை சொல்லி அழைப்பார்?

(..........................................)

* **முதலில் தரப்படும் சதுரமுகியைச் செய்வதற்கு தயாரிக்கப்பட்ட இரு பரிமாண உருவில் ஒட்டும் பசை பூசப்பட்ட பகுதியில் பிழையாகக் காணப்படும் உருவின் கீழ்க் கோடிடுக.**

32. 


33. 


* **சரியான விடையினை எழுதுக.**

லீனா, லானா, லூனா ஆகிய ஒவ்வொருவரிடமும் பேனைகள் உண்டு. லானா, லூனா, லேனா ஆகிய ஒவ்வொருவரிடமும் பென்சில்கள் உண்டு. சானா, லீனா, லேனா ஆகியவர்களிடம் புத்தகம் உண்டு.

34. யாரிடம் பேனையும் புத்தகமும் உண்டு? (..............................)

35. யாரிடம் புத்தகம் மட்டும் உண்டு? (..............................)

36. மாலை 5 மணியளவில் அஸாயா நகரிலிருந்து வீடு வரும்போது அவளது நிழல் அவளைப் பின்தொடர்ந்து வந்தது. எனின், அவள் எத்திசையை நோக்கி நடக்கிறாள்?

(..............................)

37. எனது அண்ணனின் மகளின் மகன் எனது தாயாரை என்ன முறை சொல்லி அழைப்பான்?

(..............................)

38. ஜாகிதா தனது தம்பியுடன் கடற்கரைக்கு சென்றாள் அங்கே அவளது சித்தியின் மகள் பஸ்லியாவும் அவளது கணவரும் வந்திருந்தனர் எனின், ஜாகிதாவின் தம்பிக்கு பஸ்லியாவின் கணவர் என்ன உறவு முறை?

(..............................)

39. நான் கண்டி நோக்கிச் செல்கிறேன், எனக்கு எதிரே நான்கு பேர் வருகின்றனர். எனின், கண்டிக்கு செல்வோர் எத்தனை பேர்?

(..............................)

40. ஈசான மூலைக்கு எதிர்த்திசை எது? (..............................)

-நிறைவுற்றது-

ஆசிரியர்:- U.L.M சாஜித், நிந்தவூர். தொ.பே.இல: 0779597407

**கல்விச்சுடர் தொடர்பான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....**

உதயன் பணிமனை, இல.365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 071-8724054/071-6850005/071-4273035





அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வு அண் மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பாடசாலை அதிபர் ச.வேலழகன் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி சி.சித்திரவடிவேல் ஓய்வுபெற்ற அதிபர் க.விநாயகலிங்கம் மற்றும் அச்செழு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ.ரதன் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் -

மாணவர் ஒருவருக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி சி.சித்திர வடிவேல் பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: கோப்பாய்ச் செய்தியாளர்)*



இளவாலை மாரீசன்கூடல் றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் உதவிப்பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.சங்கப் பொது முகாமையாளர் எ.நாக ராசா கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட [illegible] அருட்பணி எம்.எம். எச் ஞானேந்திரன் அடிகளார் பாடசாலை [illegible] ஆகியோர் பாடசாலைச் சமூகத்தால் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.



[illegible]டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் [illegible]ரம்பப்பிரிவு மாணவர்களின் உடற்பயிற்சி கண்காட்சி இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா




**மேடம்** மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். தந்தை வழியில் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். தாய் வழி உறவுகள் மூலம் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு அவர் இல்லாமல் போகலாம். மறதியால் அவதியுண்டு.



**இடபம்** வீட்டில் வசதி வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். மற்றவர்கள் பாராட்டும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்ய நினைப்பீர்கள். உங்களின் கடந்த கால செயல்பாடு ஒன்றை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். வாகனங்கள் வழியில் செலவுகள் ஏற்படலாம். மாற்று மதத்தினரிடம் எச்சரிக்கை அவசியம்.



**மிதுனம்** தெம்பு, தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடிவரலாம். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகளைப் பெறலாம். நேற்று செய்யாமல் விட்ட சில வேலைகளால் இன்று பிரச்சினை ஏற்படலாம். பிள்ளைகள் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.



**கடகம்** எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலையலாம். பல நாள்களாகப் பார்க்காமல் இருந்த நண்பர் ஒருவரை இன்று திடீரெனப் பார்க்கலாம். உடல் உபாதைகளால் பணிபுரிவோர் திடீர் விடுமுறை எடுக்கலாம். தொலைபேசி மூலம் பேசி சிலரிடம் உதவிகள் கேட்கலாம்.



**சிங்கம்** நீண்ட நேரம் ஓய்வாக இருந்துவிட்டு பின்னர் அவசரமாகச் செயல்படுவீர்கள். திட்டமிட்ட சில வேலைகளை நாளை செய்யலாம் என தள்ளிவைப்பீர்கள். சிலருக்கு வாக்குக் கொடுத்துவிட்டு அதைக் காப்பாற்ற முடியாமல் சாக்குப் போக்குச் சொல்லி சமாளிக்கலாம். கைமாத்தாக வாங்கிய பணத்தை உடனே திருப்பக் கொடுக்க நேரிடலாம்.



**கன்னி** தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நண்பர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். வெளியுலக தொடர்புகள் விரிவடையும். ஓய்வாக இருக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். நண்பர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம்.



**துலாம்** புத்துணர்ச்சியுடன் செயற்படும் நாள். முடியுமோ, முடியாதோ என நினைத்த வேலை ஒன்று சுமூகமாக முடிவடையும். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். வீட்டில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். மூத்த உடன்பிறப்புக்கள் விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது.



**விருச்சிகம்** சுபகாரியங்களுக்காகவோ அல்லது வேறு விடயங்களுக்காகவோ கணிசமான பணத்தைச் செலவிடலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல், அதை நீங்களே செய்ய நேரிடலாம். அரசியல் தொடர்புடையவர்கள் வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். சிலருக்குக் கடன் கொடுக்கலாம்.



**தனுசு** சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். உறவினர்கள் சிலர் தாங்கள் செய்ய வேண்டிய வேலைகளை உங்களிடம் ஒப்படைக்கலாம். எதிலும் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாகச் செயற்பட வேண்டிய நாள். சில வேலைகளை வேகமாகத் தொடக்கிவிட்டு பின்னர் பாதியில் விட்டுவிடலாம்



**மகரம்** மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகிவிடும். வெளியூர்களில் இருக்கும் சிலரை தொலைபேசியில் தொடர்புகொண்டு முக்கியமான விடயங்களைப் பேசலாம். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பணப்பற்றாக்குறை தீரும் வகையில் கணிசமான வரவுகளைப் பெறலாம்.



**கும்பம்** செய்ய வேண்டாம் என தள்ளி வைத்த சில வேலைகளை இன்று மீண்டும் செய்யலாம். உத்தியோக சூழ்நிலை, கோபம், எரிச்சல் தருவதாக அமையலாம். அயலார் சிலர் உங்களை விமர்சிக்கலாம். உறவினர்கள் உங்களிடம் அன்பாக நடந்து கொள்வார்கள். சிலரிடம் மனம்விட்டுப் பேசும் சூழ்நிலை உருவாகும்



**மீனம்**

சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். வியாபாரிகள் வசூலாகி திருப்தி காண்பர். ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளால் அவதிகளுக்கு ஆள்பட லாம். குடும்ப உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி, உற்சாகம் தரும்.

---

## இனி வேறு வழிகளை...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது - இவர்களில் வேலுப்பிள்ளை பிரபாகரன் தவிர மிகுதி எல்லோருமே - ஜனநாயகத்தின் காவலர்களாக, அறவழிப் போராட்டகாரர்களாக உலாவருகின்றார்கள்.

இன்னொரு பக்கத்தில் - நோர்வே தலைமையிலான உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தினைக் குழப்பும் வகையில் வோஷிங்டனில் இடைக்காலக் கூட்டத்தினைக் கூட்டி அதுவரை சிறிலங்கா அரசிற்கும் புலிகளுக்கும் இடையில் உருவாக்கப்பட்டிருந்த சமதரப்பு நிலையினை சிதறடித்து நிலைமையினை மீள முடியாத சிக்கலுக்குள் தள்ளியது யார்?

அமெரிக்கா

பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த இரண்டு பகுதியினருமே தங்களது பொறுப்புக்களினை நிறைவேற்றாது தட்டிக்கழித்த போது - வெறுமனே கையறுநிலையில் தபால்காரன் வேலையுடன் தனது பொறுப்பினை மட்டுப்படுத்திக்கொண்டது யார்?

நோர்வே

டோக்கியோ மகாநாட்டில் ஒதுக்கப்படவிருந்த நிதியினைக் கையாளுவதற்கான பொதுக் கட்டமைப்பினைக் கண்டறியாமல் தனது செல்வாக்கினைக் கட்டியெழுப்பும் ஒரே குறிக்கோளுடன் செயற்பட்டதும், பிற்காலத்தில் சிறிலங்கா அரசின் மீது அழுத்தங்களினைப் பிரயோகித்து வழிக்கு கொண்டு வர முற்பட்ட இணைத் தலைமை நாடுகளின் தீர்மானத்திற்கு எதிராகச் செயற்பட்டதும் யார்?

ஜப்பான்

மிகப் பெரிய மனிதப் பேரவலம் நிகழப் போகின்றது என்று தெரிந்திருந்தும், இராஜதந்திரச் சித்துவிளையாடல்களிலும், வெறும் வார்த்தையாடல்களிலும் மட்டுமே ஈடுபட்டிருந்தது யார்?

ஐ. நா. சபையும் மேற்குலகமும்

சிறிலங்கா அரசினதும் சிங்களப் பேரினவாதத்தினதும் ஆழமான உள் நோக்கங்களினைத் தங்களால் கட்டுப்படுத்த முடியாது என்று தெரிந்திருந்தும் தமிழீழ விடுதலைப் புலிகளினைத் தடை செய்வதன் மூலம் சிங்களப் பேரினதேசிய வாதத்திற்கு துணை போனது யார்?

ஐரோப்பிய ஒன்றியம்

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் - இந்தச் சித்து விளையாட்டுக்களுக்கும் கோர அழிவுகளுக்கும் - அங்கீகாரம், ஆலோசனை, அனுசரணை, ஆதரவு, ஒத்தாசை, இராஜதந்திரப் பாதுகாப்பு என எல்லாவற்றையும் வழங்கியது யார்?

இந்தியா

இவ்வாறே - இலங்கைத் தீவின் இன்றைய பூதாகரமான தோற்றத்திற்கு ஒவ்வொருவரும் தங்கள் பங்கு வழங்கலைச் செய்தனர்.

வரலாறு படைத்துவிட்டிருக்கும் அதிசயம் என்னவென்றால் - இவ்வளவையும் செய்த இவர்களில் எவரினது கைகளிலும் இலங்கைத் தீவு இப்போது இல்லை என்பதுதான்.

இலங்கைத் தீவை மீண்டும் தங்கள் கைகளில் எடுக்க வேண்டுமெனில் - இதுவரை கையாண்டு தோற்றுப் போன வழிமுறைகளைத் தொடர்ந்தும் கையாளாமல் - இவர்கள் இனி வேறு வழிகளை யோசிக்க வேண்டும்.

கடந்த தடவை நாம் குறிப்பிட்டிருந்தது போல - உலகம் இனி வேறு வழிகளை யோசிக்க வேண்டும்.

நன்றி - 'புதினப்பலகை' இணையம்.

---

### முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 30 ★ 07 ★ 1963 | 01 ★ 03 ★ 2009 |



அமரர்

**கனகரெட்ணம் விசாகரெட்ணம் (ராசன்)**

திதி: 19.02.2010

அன்பு மொழிபேசி அரவணைத்த அப்பாவே!!
காலனவன் செய்த கொடுமையினால் ஏங்கித் தவிக்கின்றோம்
என்றும் எங்களுடன் இணைந்தே வாழ்ந்திருந்தீர்
துன்பம் எமை வாட்ட தூரதேசம் சென்றீரோ?
குடும்பத்தின் ஒளி விளக்காய் ஒளிவீசிப் பிரகாசித்தீர்
குடும்பமே இன்று தவியாய் தவிக்குதையா
ஆண்டுகள் எத்தனை சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு அகலா.

உங்களின் பிரிவுத் துயரில் தத்தளிக்கும்....

7ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு,
வேலணை.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

(94943)

---

### 6ஆம் மாத நினைவுச் சுடர்

தோற்றம் 07.10.1981 — மறைவு 19.09.2009



**இரவி பிரசாத் (றாயூ)**

(முன்னாள் ஊழியர் தொலைத்தொடர்பு)

உன் பிரிவின் செய்தி கேட்டு ஒரு நிமிடம்
போல் இருக்கையில் ஆறு மாதங்கள் ஆறாக
ஓடிவிட்டது. மகனே தொலைபேசி மணி
ஒலிக்க உனது அழைப்பு என ஒரு பிரமை
ஓடிச்சென்று எடுக்கிறேனே அதில் ஏனோ
ஓர் அமைதி ஏன் றாயூ இந்த ஏக்கம்?
கலியுக காலத்தில் ஒரே ஒரு நிமிடம்
அம்மா என்று அழைக்கத்தான் மாட்டாயோ?
உன் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும் உன்

இ.இரவி,
புகையிரத வீதி, கொடிகாமம்.


அம்மா, அப்பா,
சகோதரர்கள்.

(94945)

---

### ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 1928 ★ 08 ★ 20 | 2005 ★ 02 ★ 13 |



**அமரர் வேலன் பிள்ளையான்**

(ஓய்வு பெற்ற முன்னாள் புகையிரத கங்காணி)

அன்பான தந்தையே ஐயாவே!
ஆண்டுகள் 5சென்றதையா
ஆனாலும் ஆறவில்லை உங்கள் நினைவலைகள்..
போற்றுகின்றோம்... வேண்டுகின்றோம்....
மருதடி விநாயகனை தாழ்பணிந்து
அடைக சாந்தி என்று நாமெல்லோரும்.

சரஸ்வதி வாசா, மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(94920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மக்கள் அனுபவித்த துயரங்கள் இனிவரும் காலங்களில் ஒருபோதும் ஏற்படக் கூடாது

## சமாதானத்திற்கான சமயங்களின் சம்மேளனத் தலைவர் கருத்து

மட்டக்களப்பு,பெப்.19

''30வருடகால யுத்தத்தில் இந்நாட்டிலுள்ள அனைத்து மக்களும், குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் அனுபவித்த துயரங்கள் சொல்லுந்தரமன்று. இனிவரும் காலங்களில் இவ்வாறான நிலைவரக் கூடாது. ஆனால், இன்று அனைவரும் ஒரேநாடு, ஒரேமக்கள், நாம் இலங்கையர் என்று இணைந்து செயற்பட காலம் கனிந்துள்ளது.''

-இவ்வாறு இலங்கை சமாதானத்திற்கான சமயங்களின் சம்மேளனத் தலைவரும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக வேந்தரும், பேராசிரியருமான வண, வெல்லன் வில விமலரத்ன தேரர் சாய்ந்தமருதில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட கூட்டத்தில் தெரிவித்தார்.

சம்மேளனத்தின் அம்பாறை மாவட்டக் குழுவின் அங்குராற்பணக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று சாய்ந்தமருது பரடைஸ் விடுதியில் சம்மேளன உப தலைவர் மௌலவி, எஸ்.எச்.ஆதம்பாவா தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கொழும்பிலிருந்து மேற்படி சம்மேளனத்தின் செயலாளரும் களனிப் பல்கலைக்கழக பேராசிரியருமான வண. தம்மஜோதிதேரர், பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வண.ராகுல தேரர், ஜனாதிபதியின் இந்து சமய விவகார இணைப்பாளர், பிரதிச் செயலாளர் வண. பிதா, லீபோல்ட் ரத்னசேகர, பொருளாளர் சிவானந்தினி துரைசாமி, தேசபந்து. ஜெஸீமா இஸ்மாயில் உபபொருளாளர் சவரிமுத்து ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

அங்கு பேராசிரியர் வெல்லன்வில விமலரத்ன தேரர் மேலும் உரையாற்றும் போது கூறியவை வருமாறு:-

''கல்வி மற்றும் சமயம், சமாதானம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக நான் பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்துள்ளேன். ஆனால், நாட்டிலுள்ள அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்வது இதுவே முதற்தடவையாகும்.

இந்தளவுக்கு, யுத்தம் பலரையும் பிரித்து வைத்திருந்தது. சமாதானம், அமைதி, சுதந்திரத்தைப் பெறுவதிலிருந்தும் தடைவிதித்திருந்தது. நாட்டுமக்கள் இன்னல்களுக்கு ஆளானார்கள்.

மக்கள் அச்சம் பீதியுடன் வாழ்ந்தார்கள், கூடவே ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்னோடு பார்த்தார்கள். புரிந்துணர்வு குறைவாக இருந்தது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழத்துடித்த போதும் நிலைமைகள் தடுத்தன. ஆனால், இன்று யுத்தம் ஓய்ந்து நல்லதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இதுதான் உரியதருணம், நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்தை ஏற்படுத்த நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். எமக்கிடையேயுள்ள சிற்சில தடைகளை வேரோடு அறுத்தெறிய வேண்டும்.

அம்பாறை மாவட்ட சமயத் தலைவர்களை ஒரேமேடையில் காண்பதையிட்டு மிகவும் சந்தோசமடைகின்றேன். இப்பிராந்தியத்தில் மூவினமக்களும் ஒன்றிணைந்து நிம்மதியாக, சுதந்திரமாக, அமைதியாக வாழவேண்டும் என்பதே எமது நோக்கம்.

இதற்கு அம்பாறை மாவட்ட சர்வசமய சம்மேளனப் பிரதிநிதிகளை எமது மாவட்டக்கிளை உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்வதில் நாம் பேருவகை அடைகின்றோம் உங்களின் ஒட்டுமொத்த ஒத்துழைப்புக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.''-என்றார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் வேந்தரும், சம்மேளன உபதலைவரும், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் தலைவியுமான தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

''நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க சமயத் தலைவர்கள் வழிகாட்ட வேண்டும்.

30 வருடயுத்தம் முடிவுற்று 9 மாதகாலமாகின்றது. நாட்டில் சமாதானம் வந்துவிட்டதா? இன்னும் பிரச்சினைகள் நாட்டில் இருக்கிறதா? இனங்கள் மத்தியில் நல்லுறவு வந்துவிட்டதா? இவ்வினாக்களுக்கெல்லாம் விடைகூறமுடியுமா? உண்மையில் சமாதானம் என்பது நீதியோடு [illegible] வேண்டும். சமாதானம், ஓர் இனத்திற்கு ஒருவாறு இருக்க முடியாது. நீதியுடனான சமாதானம் நிலவவேண்டும்.

பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதமே வேண்டாம். அனைவரும் இலங்கையர்கள் இதுதான் எமது நாடு என்ற உணர்வுடன் வாழவேண்டும்.

அதற்காக சமூகத்துடன் ஒன்றிய ஆன்மீகம் என்பதைக் கட்டியெழுப்ப வேண்டும்.''-என்றார். (ஸி)



சம்மேளனக்கூட்டம் இடம்பெற்றபோது.....

## திருக்கோவில் கல்வி வலயத்திற்கு புதிய பணிப்பாளர்

அம்பாறை,பெப்.19

புதிதாக உதயமாகிய திருக்கோவில் கல்வி வலயத்திற்கான வலயக்கல்விப் பணிப்பாளராக திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பட்டிருப்பு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராகச் சிறந்த சேவையாற்றி வந்த திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் கடந்த 8 ஆம் திகதி முதல் திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையேற்றுள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு-1 ஐச் சேர்ந்த கல்வி நிர்வாக அதிகாரியான இவர் ஆசிரியராக, அதிபராக, உதவிக்கல்விப் பணிப்பாளராக, திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி வந்துள்ளார் திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ள திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்திற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். இவர் மட்டக்களப்பு மாவட்டத்தின் துறைநீலாவணைக் கிராமத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸி)

## பரபரப்பாகின்றது திகாமடுல்ல தேர்தல் களம்

### போட்டியிடுவதற்கு பலர் முண்டியடிப்பு

அம்பாறை,பெப்.19

திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் முஸ்லிம் காங்கிரஸைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பலர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட விருப்பம் கொண்டுள்ள போதிலும், அவர்களில் ஒரு சிலருக்கே போட்டியிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படலாம் என்பதால் கட்சி மாறி அல்லது சுயேச்சையாகப் போட்டியிட சிலர் தயாராகி வருகின்றனர் என அறியமுடிகின்றது.

கல்முனைத் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனை மாநகர் மேயருமான எச்.எம்.எம்.ஹரீஸ், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.எம்.ஏ. ஜவாட் சம்மாந்துறைத் தொகுதியிலிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எம்.நௌஷாட் சம்மாந்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஐ.எம்.மன்சூர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் ஆகியோருடன் அக்கரைப்பற்று, பொத்துவில் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் காங்கிரஸின் புது முகங்களும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி யானைச்சின்னத்திலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வீட்டுச் சின்னத்திலும் போட்டியிட உத்தேசித்துள்ள நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடலாம் என்றே நம்பப்படுகின்றது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவின் படி திகாமடுல்லத் தேர்தல் தொகுதியில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுமானால் அது கட்சியின் ஆசனங்களை இழக்க வழிகோலலாம் என்ற கருத்தும் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. திகாமடுல்ல மாவட்டத்தில் யானைச்சின்னத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடத் தலைமை விரும்புகிறது. இதில் அம்பாறைத் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.தே.காவின் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர் ஒருவர் போட்டியிடவிரும்புகிறார் எனவும் அறியமுடிகின்றது.

இவ்வாறான கூட்டின் மூலம் ஐ.தே.கவின் அம்பாறை பிரதிநிதித்துவம் குறைக்கப்படலாம் என்ற அச்சமும் அங்கு ஏற்பட்டுள்ளது

இவைகளுக்கிடையில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திலேயே போட்டியிடவுள்ளார் என நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றன.

தனித்துப் போட்டியிடுவதா? அல்லது கூட்டுச் சாத்தியாமாகுமா? தாம் எங்கு போட்டியிடுவது? என்கின்ற திரிசங்கு நிலையில் கட்சியின் தலைமைப் பீடம் இருக்கும் சூழலில் வேட்பாளர்களாகக் களமிறங்கவுள்ளவர்களின் முன்னெடுப்புக்கள் வேட்பாளர் தெரிவில் சிக்கல் நிலையைத் தோற்றுவிக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

எது எவ்வாறு இருந்தும் கட்சியின் தலைப்பீடம் இதுவரை உறுதியான முடிவு எதனையும் எடுக்கவில்லை என்றே தெரிகின்றது. (ஸி)




## பொலிஸ் அதிகாரம் குறித்த தூதுவரின் கருத்துக்கு தமிழ் கூட்டமைப்பு எம்.பி.கடும் கண்டனம்

''வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்க முடியாது என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் புதுடில்லியில் வைத்துக் கூறிய கருத்து கவலை அளிப்பதுடன் வடக்கு, கிழக்கு வாழ் ஒட்டுமொத்த மக்களையும் அவமதிக்கும் செயலாகவும் - புன்படுத்தும் கருத்தாகவுமே அமைந்துள்ளது.''

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் கடந்த சனியன்று புதுடில்லியில் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பொலிஸ் அதிகாரத்தை உள்ளவாங்கிக் கொள்வதற்கான பொறிமுறையை வடக்கு, கிழக்கு வாழ்மக்கள் கொண்டிருக்கவில்லை என கூறியிருந்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மேலும் கூறியவை வருமாறு:-

பொலிஸ் அதிகாரத்தை மட்டுமல்ல, காணி அதிகாரத்தையும் உள்வாங்கிக் கொள்வதற்கான பொறிமுறையையும், அனுபவத்தையும் வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் எப்போதும் கொண்டிருக்கிறார்கள். ஆனால், வடக்கு, கிழக்கு வாழ்மக்களுக்கு அரசியல் தீர்வும், அதிகாரப் பகிர்வும் வழங்கக்கூடாது என்ற பொறிமுறையும், மனோநிலையும் இலங்கையை ஆட்சி செய்த சகல சிங்களத் தலைவர்களுக்கும் கடந்த 62 வருடங்களாக இருந்து வருகின்றது. இதுதான் உண்மை. இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியாவின் ஆதரவுடன் முன்மொழியப்பட்ட 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் பிரசாரம் உள்ளடக்கப்பட்ட வடக்கு, கிழக்கு இணைப்பு துண்டாடப்பட்டு எந்த அதிகாரங்களும் அற்றவர்களாக வாழும் வடக்கு, கிழக்கு வாழ்மக்கள் அதிகாரப் பகிர்வு படிப்படியாக இலங்கை அரசு மேற்கொள்ளும் என இன்றுவரை [illegible] களுக்கு இலவுகாத்த கிளியாய் இருப்பது எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (ஸி)

## தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கற்கைக்கு மாணவர் தெரிவு

திருகோணமலை,பெப்.19

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரி கற்கைகள் பிரிவுக்கு புதிய மாணவர்களைப் பதிவு செய்யும் பணிகள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

கலைமாணி, வணிகமாணி மற்றும் வியாபார நிர்வாகமாணி ஆகிய மூன்று துறைகளுக்கு புதிய கல்வியாண்டிற்கான வெளிவாரி மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் எனப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.ஐ.நௌபர் தெரிவித்தார்.

இதற்கான விண்ணப்பங்கள் தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் இயங்கிவரும் வெளிவாரிக் கற்கை [illegible] இம்மாதம் 24 ஆம் திகதிவரை விநியோ[illegible]வுள்ளன.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இம்மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் கேட்டுள்ளார்.

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களும், அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றில் இரண்டு வருடங்களைக் கொண்ட டிப்ளோமா அல்லது சான்றிதழ் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களும் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியுடன் ஒருவருட கற்கை நெறியொன்றைப் பூர்த்திசெய்த மாணவர்களும் வெளிவாரிக் கற்கைநெறிகளில் இணைந்து கொள்ள முடியும் எனவும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் கூறினார். (ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூர்மைப்படுத்துவோம்

இரண்டு பேர் விறகு வெட்டுவதற்காக காட்டுக்குப்போனார்கள். இருவரும் விறகு வெட்ட ஆரம்பித்தார்கள். ஒருவர் களைப்பு, இளைப்பு பார்க்காமல் ஒரே மூச்சாக வெட்டிக் கொண்டிருந்தார். மற்றவரோ அவ்வப்போது மரநிழலில் அமர்ந்து ஆற, அமர வெட்டிக்கொண்டிருந்தார். பொழுது சாய்ந்ததும் இருவரும் வீடு செல்லப் புறப்பட்டனர். அப்பொழுது பார்த்தால் ஓயாமல் வெட்டிக் கொண்டிருந்தவரை விட ஓய்வெடுத்து வெட்டிக் கொண்டவரின் விறகுகள் அதிமாகக் காணப்பட்டன. இதனால் ஆச்சரியப்பட்ட முதலாமவர் "நண்பா பகற்பொழுதில் பல தடவை நீர் ஓய்வாக இருந்தீர். அப்படியிருக்க உமது விறகுகள் அதிகமாக இருப்பது எப்படி?" என்று கேட்டார். அதற்கு அடுத்தவர் சொன்னார். "நான் ஓய்வாக இருந்தது உண்மைதான். ஆயினும் நான் சும்மா இருக்கவில்லை அந்த வேளையில் எனது கோடரியைத் தீட்டிக் கொண்டிருந்தேன்" என்றார்.

பல சந்தர்ப்பங்களில் எமது வாழ்வும் முன்னவரைக் போல ஓய்வில்லா உழைப்பிலும் களைப்பிலும் கரைகின்றது. பணம் உழைப்பதற்கும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் என அலையாய் அலைகின்றோம். ஆனால் எமது வாழ்வை சரியான திசைக்கு நடத்திச் செல்லக்கூடிய காரியங்களில் ஈடுபடத் தவறி விடுகின்றோம்.

**அருட்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன்**

தவக்காலம் எம்மைக் கூர்மைப்படுத்திக்கொள்ள இறைவன் அழைப்பு விடுக்கும் ஒரு காலம். சிந்தனைகளின்றி கடுகதியாக ஓடும் எமது வாழ்வை சிறிது நிறுத்தி சீராக நகர வைக்கும் காலம். உடைகளை அல்ல ஆனால் உள்ளங்களைக் கிழித்துக் கொள்வதன் மூலம் எம்மையே நாம் ஆய்ந்தறிந்து வாழ்வை மாற்றும் காலம். தவறான திசையில் நடப்பவன் எவ்வளவு விரைவாக நடந்தாலும் தான் சேர விரும்பும் இடத்தை அடையமுடியாது. ஆகவே இந்த நாள்ககளில் தின மும் சிறிது ஓய்வெடுப்போம். எம்மைப் பற்றியும் நாம் வாழும் சமூகம், உலகம் பற்றியும் சிந்திப்போம். சரியான வழியில் சீரான கதியில் உறுதியுடன் பயணிக்கப் புறப்படுவோம்.

## தவக்காலச் சிந்தனை




## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஹற்றன் நஷனல் வங்கியின்
வடபிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள
உயர்திரு. திசைவீரசிங்கம்
ஜெயராசசிங்கம்
அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சகல செளபாக்கியங்களுடனும் தனது குடும்பத்தினருடன் நீடூழி வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

இல.7,8,24 நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2227179

நியூராகம்ஸ்
பட்டுச்சேலை.

(சி/564970)



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2097 திகதி 17-02-2010

ஆங்கில எழுத்திற்கும் R

வெற்றி எண்கள் **15 35 48 64**   போனஸ் இல: **68**

ஜக்பொட் பரிசு ரூ. **17,383,850/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 194646 | 20/- | 3,892,920/- |
| 2 இல | 13957 | 100/- | 1,395,700/- |
| 3 இல | 296 | 1,000/- | 296,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7645 | 40/- | 305,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 553 | 1,000/- | 553,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 07 | 10,000/- | 70,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,383,850/- | - |
| 1 இல + போனஸ் இல | 9225 | 100/- | 922,500/- |
| 2 இல + போனஸ் இல | 437 | 500/- | 218,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 424 | 200/- | 84,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,261,720/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 227221 | | 9,861,720/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் -முஹமட் தாரிக் லக்சானா - கொழும்பு 02.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - H.M.சீலவதி - பதியதலாவ.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அநுராதபுரம் | 201640157-6-46 |
| பொலன்னறுவை | 201628590-4-47 |
| குருணாகல் | 201623972-2-19 |
| களுத்துறை | 201632580-7-19 |
| மொணராகலை | 201629236-6-32 |
| திருகோணமலை | 201638156-5-49 |
| கம்பஹா | 201627312-9-23 |
| கொழும்பு | 201639718-8-38 |
| கேகாலை | 201636712-7-45 |
| மட்டக்களப்பு | 201630529-6-17 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
**ரூ.17,914,975/-**

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 பெப்ரவரி 20 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே 2333546/7


# மெய்வன்மைப் போட்டிகள்

வடமராட்சி,பெப்.19

அல்வாய்,சின்னத்தம்பி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மாலிசந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் அதிபர் ப.சந்திரபாகு தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் கி.சண்முகநாதனும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் செ.செல்வராசா, ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி புனிதவதியார் சிவகடாட்சம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

பரிசில்களை திருமதி அன்னராணி சண்முகநாதன் வழங்குவார்.

(04-236)

* * *

வடமராட்சி,பெப்.19

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு தீருவில் இளைஞர் விளையாட்டு மைதானத்தில் அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் கௌரவ விருந்தினராக வல்வை ஒன்றியத் தலைவர் மு.தங்கவேலும் கலந்து கொள்வர்.

திருமதி நந்தினி உதயகுமார் பரிசில்களை வழங்குவார்.

(04-236)

* * *

மூளாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி புஸ்பராணி பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு, சிறப்பு விருந்தினராக மூளாய் கிராம உத்தியோகத்தர் ச.வைத்தியநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(04-93)

## மரதன் ஓட்டப் போட்டி

வடமராட்சி, பெப்.19

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை ஒட்டி 6 மைல் மரதன் ஓட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு இப்போட்டி இடம் பெறவுள்ளது.

மாலிசந்தியிலிருந்து ஆரம்பமாகும் மரதன் ஓட்டப் போட்டி, மந்திகை, துன்னாலை, கலிகைச்சந்தி, கோவில் சந்தை, நெல்லியடி ஊடாக வதிரிச் சந்தியை அடைந்து அங்கிருந்து போட்டி ஆரம்பமான இடமான மாலிசந்தியுடன் முடிவடையும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் வீரர்கள், போட்டி நடைபெறும் நாளன்று காலையில் பதிவுகளைமேற்கொண்டு போட்டியில் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04-236)


## வாழ்த்துகின்றோம்

ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட வட பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று யாழ். நகரிலே உன்னதமான சேவையை வழங்கவுள்ள உயர்திரு. திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம் அவர்களை மனதாரப்பாராட்டி வாழ்த்துகின்றோம்.



கடந்த பதினாறு வருடங்கள் யாழ்ப்பாண வங்கியில் முகாமையாளராகவும் சிரேஷ்ட முகாமையாளராகவும் கடமையாற்றி மக்களுக்கும், வர்த்தகர்களாகிய எங்களுக்கும் நாட்டின் அசாதாரண சூழ்நிலையிலும் தோள்கொடுத்து உதவிய வடபிராந்திய முகாமையாளர் திரு.தி.ஜெயராசசிங்கம் அவர்கள் சகல செளபாக்கியங்களும் பெற்று நீடூழிவாழ வாழ்த்துவதோடு மேலும் பல உயர் பதவிகள் பெற வாழ்த்துகின்றோம்.

இல.5,6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2225260 (சி/564971)

லலிதா புடைவை
மாளிகை.



## Wanted A Medical Rep

One of the most reputed pharmaceutical Company requires a Medical Representative immediately for Northern Province.

Those Who wish to apply please handover the CVs to the address given below before the 21st.

**Ramesh Xavier,**
**No : 306, Hospital Road,**
**Jaffna.**
**Contact No. : 0777283729**



## தங்குமிட வசதி

இல. 163, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (பழைய மீன் சந்தை அருகாமையில்) சகல வசதிகளுடன் கூடய தங்குமிடம் உண்டு. வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு.

தொடர்புக்கு :
0777283811, 0770770529

(85614)



## T.V கள் விற்பனைக்குண்டு

Sony 14", 21" T.Vகளும் (புதிய Sw 21 wega-26000/=, G.21Q2 - 16000/=, 2184 - 14000/=, G14q2 - 11000/= இன்னும் பல மொடல்களிலும்) குளிர்சாதனப் பெட்டிகளும், ரேடியோக்களும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு :0771393670
இ.மகேஸ்வரன் (அப்பளக் கொம்பனி)
சீனிப்புளியடி ஆரம்பப் பாடசாலை அருகில்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

(85614)


# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
14.04.1948

மறைவு:
01.02.2009

## திருமதி முருகேசு நாகேஸ்வரி

திதி: ஷஷ்டி 20.02.2010



பன்னிரண்டு மாதங்களாகிய போதிலும்
பறந்து சென்ற உம் அன்பினை பிரிவதனால்
சோகத்தில் நாமிங்கு தவிக்கின்றோமே- நாள்தோறும்
சோகம் எனும் கடல்தனில் மூழ்கின்றோம்
எத்தனை எத்தனை பொழுதுகள் இங்கு
ஆனபோதும்
எம் தலைவி உங்களுக்கு நிகர் தான்
எதுவோ? எம் வாழ்விலே
நீங்கள் இல்லாத எம் கோயில் கொண்ட வீடு
வெறிச்சோடியது
நிம்மதி ஏதுமின்றி தனியாய்த் தவிக்கின்றோம்
உற்றவொரு துணைபோன்று உம் ஆத்மா
எம்முடன்
உடனிருந்து நல்லதொரு வழியதனை
காட்டுமம்மா
வேதவன விநாயகர் பாதங்களினை - எமக்கு
வேதனை தந்து விசாலமாக பற்றிவிட்ட
நீங்கள் இங்கு
காலமெல்லாம் கண்களிரண்டின் இமைபோல
காத்திடுவீர் எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே.

01.02.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் ஓராண்டு நினைவு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை எமது இல்லத்தில் நாளை (20.02.2010) சனிக்கிழமை நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

என்றும் நினைவுடன்:
கணவர் -மு.முருகேசு (சின்னத்தம்பி)
மகன் - சுகந்தன் (U.K), மருமகள்-கவிதா (U.K)
பேர்த்தி-சுகன்யா (சஞ்சு U.K)
மகள்-வாசுகி, மகன்-சுவர்ணன் (சொனா U.K)

வெதவனப் பிள்ளையார் கோயிலடி,
கல்வயல், சாவகச்சேரி.

(95621)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டுக்கு

# வெளிநாட்டிலிருந்து வருகின்ற தபால் பொதிகள் சுங்கப்பகுதியினரின் உதவியுடன் இங்கேயே தரம்பிரிக்கப்படும்

### - வடமாகாணப் பிரதி அஞ்சல் மாஅதிபர் தகவல் -

யாழ்ப்பாணம், பெப்.19

வடமாகாணத்துக்கான வெளிநாட்டிலிருந்து வரும் தபால் பொதிகளைக் குடாநாட்டிலேயே வைத்து சுங்கப் பகுதியினரின் உதவியுடன் பரிசோதனை செய்து விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபர் வி.குமரகுரு மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

வெளிநாட்டிலிருந்து வருகின்ற தபால் பொதிகள் தற்போது கொழும்பில் சுங்கப் பகுதியின ரின் பரிசீலனைக்குப் பின்னரே யாழ்ப்பாணம் எடுத்து வரப்படுகின்றன.

இந்த நடவடிக்கையால் தபால் பார்சல்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்வதில் காலதாமதம் ஆகின்றது.

இத்தகைய தாமதத்தை நீக்கும் வகையில் யாழ்.பிரதம தபாலகத்தில் சுங்கப் பகுதியினரின் அனுசரணையுடன் பொதிகளைப் பரிசோதனை செய்து உடனேயே அவற்றை விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெரும்பாலும் இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் பிரதி அஞ்சல் மாஅதிபர் மேலும் கூறினார். (04-224)

## வடமராட்சியில் சைக்கிள் திருட்டுகள் அதிகரிப்பு

வடமராட்சி,பெப்.19

வடமராட்சிப் பிரதேசத்தில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

பருத்தித்துறை, மந்திகை ஆகிய இடங்களில் உள்ள பிரதான சந்தைகள் அமைந்துள்ள சுற்றாடலில் பல தடவைகள் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

சைக்கிள் திருடப்படும்போது புதிய சைக்கிள்கள் மட்டுமல்லாமல் பழைய சைக்கிள்களையும் திருடர்கள் விட்டுவைப்பதில்லை.

திருடப்படும் பழைய சைக்கிள்களிலிருந்து உதிர்ப்பாகங்களைக் கழற்றிய பின்னர் எஞ்சிய பகுதியை பழைய இரும்பாக அவர்கள் விற்றுவிடுவதாகவும் கூறப்படுகின்றது. (04-236)

## ஆள்களில்லாக் காணிகளில் அதிகரிக்கும் தேங்காய்த் திருட்டு

யாழ்ப்பாணம், பெப்.19

கொழும்புத்துறைப் பகுதியில் வளவுகளிலுள்ள தேங்காய்களைக் களவாகப் பறித்துச் செல்லும் விஷமிகளின் தொல்லை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

இப்பகுதியில் மக்கள் குடியிருக்காத வெறும் காணிகளில் உள்ள தென்னை மரங்களில் களவாக ஏறி தேங்காய்களைத் திருடர்கள் பறித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தேங்காய்த் திருட்டுச் சம்பவங்கள் கூடுதலாகக் கொழும்புத்துறை மேற்குப் பகுதியிலேயே இடம்பெற்று வருகின்றன எனவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.(04-224)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## பற்றைகள் வெட்டிச் சுத்தமாக்கப்படுவதால் முற்றவெளியிலிருந்து தப்பித்தோடும் பாம்புகள்

யாழ்ப்பாணம், பெப்.19

யாழ்.முற்றவெளிப் பகுதியில் பாம்புகளின் நடமாட்டம் கடந்த சில நாள்களாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

இப்பகுதியில் உள்ள பற்றைகள் மற்றும் புற்கள் என்பன வெட்டித் துப்புரவு செய்யப்பட்டு வருவதையடுத்து இவற்றுள் இது நாள் வரையும் தங்கியிருந்த பாம்புகள் வேறு இடங்களுக்கு ஊர்ந்து சென்று தப்பிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கூடுதலாக நாகபாம்புகளின் நடமாட்டமே இங்கு அதிகளவில் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அதனைவிடக் கோட்டையைச் சுற்றியுள்ள அகழியில் நீர்க்கொத்திப் பாம்புகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது. (04-224)

## வன்னியிலிருந்து வருகிறது மாட்டெரு; கொள்வனவு செய்வதில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், பெப்.19

வன்னிப் பகுதியிலிருந்து கனரக வாகனங்கள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு மாட்டெரு எடுத்து வரப்படுகின்றன.

வன்னியில் பெருமளவிலான மாடுகள், ஆடுகள் கட்டாக்காலியாகத் திரிவதால் அங்கு அவற்றின் திண்மக் கழிவுகள் (சாணம்) தேங்கிக் கிடக் கின்றன.

இந்த எருக்களை அங்குள்ள மக்கள் கூட்டி அள்ளி விற்பனை செய்து வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டிலிருந்து பாரவூர்திகள் மற்றும் உழவு இயந்திரங்களில் செல்லும் வியாபாரிகள் சிலர் இந்த எருக்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இவ்வாறு கொள்வனவு செய்யும் எருவகைகளை அதிக லாபத்துடன் யாழ்.விவசாயிகளுக்கு விற்கவும் செய்கின்றனர். விவசாய நடவடிக்கைகளுக்கு உகந்த இந்த இயற்கைப் பசளைகளை குடாநாட்டு விவசாயிகளும் போட்டி போட்டுக் கொண்டு வாங்கி வருகின்றனர். (04-224)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் பழுதடைந்த 'லிப்ட்' திருத்தப்படுகின்றது

யாழ்ப்பாணம், பெப்.19

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் பழுதடைந்த 'லிப்ட்' டினைத் திருத்தும் பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

வைத்தியசாலையில் பொதுமருத்துவ விடுதியில் உள்ள 'லிப்ட்'டே இவ்வாறு பழுதடைந்ததால் நோயாளர்கள் மேல்மாடி விடுதிகளுக்கு ஏறி, இறங்குவதில் சிரமப்பட்டு வந்தனர்.

அதனைவிடக் கடும் சுகயீனங்களுக்கு இலக்கான நோயாளர்கள் 'ஸ்ரெச்சரில்' தூக்கிக்கொண்டே மேல்மாடி விடுதிகளுக் குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாகப் பழுதடைந்து கிடந்த இந்த 'லிப்ட்'க்கு இப்போதுதான் விடிவுகாலம் பிறந்து, திருத்தப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (04-224)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.19

கொழும்புத்துறை, ஆத்திப்புலம் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

திருவிழாக் காலங்களில் தினமும் காலை 9.30 மணிக்கும், பிற்பகல் 4 மணிக்கும் பூசைகள் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்குக் கொடியிறக்கமும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்.வண்ணை, கன்னாதிட்டி காளியம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம்திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முற்பகல் 11 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை வைரவர் மடையும் நடைபெறும். (201)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# கால்நடை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை புனரமைத்துத் தருமாறு கால்நடை வளர்ப்போர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.19

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரான்பற்றுப் பிரதேசத்தில் அரசாங்க கால்நடை சுகாதார வைத்திய அதிகாரி ப ணிமனை விரைவில் புனரமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.மகேந்திரன் -

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் (உதவி) திருமதி எ.அன்ரன் யோகநாயகம் ஊடாக வடக்கு மாகாண கால்நடை அமைச்சு செயலாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார். இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு 28 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பரந்து விரிந்த பாரிய பிரதேசம். இப்பிரதேசம் கால்நடை வளர்ப்பினையும், கோழி வளர்ப்பினையும் பிரதான தொழிலாகக் கொண்டது.

இப்பிரதேசத்தில் அரசாங்க கால்நடைச் சுகாதார வைத்திய நிலையம் அமைக்க 2004ஆம் ஆண்டில் இரண்டு பரப்புக்காணி - பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கத்தினால் கால்நடைச் சுகாதாரத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டது. இது நடந்து 6 வருடங்கள் முடிவடைந்துள்ளன.

தற்போது வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுகின்றன.

எனவே இதுவரை எய்தப்படாத அபிவிருத்தியான கால்நடைச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை மேற்படி காணிக்குள் இரண்டு மாடிக் கட்டடமாக 2010ஆம் ஆண்டிலாவது அமைத்து உதவ நிதியினைப் பெற்றுத் தர வேண்டும் - என அக்கடிதத்தில் பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கமும் - வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப் போர் கூட்டுறவுச் சங்கமும் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இதேவேளை -

சண்டிலிப்பாய் உதவிப்பிரதேச செயலாளர் திருமதி எ.அ.அன்ரன் யோகநாயகம் இத்திட்டத்தைச் சிபார்சு செய்து வடக்கு மாகாண கால்நடை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4-302)



நீர்வை தி.மயூரகிரி எழுதிய 'எவ்வழி நல்வழி? அவ்வழி நாடுவோம்' என்ற பல்சமய உறவாடல் நூலின் அறிமுகவிழா அண்மையில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் இடம்பெற்றபோது [illegible] படங்கள் இவை. [illegible] அதிபர் இ.குணநாதன், எழுத்தாளர் 'ஞானம்' தி.ஞானசேகரன், எழுத்தாளர் கோப்பாய் சிவம், கோப்பாய் ஆசிரிய [illegible], நூலாசிரியர் தி.மயூரகிரி ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: கோப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அழிவுகளுக்குக் காரணமான தலைமைகளை தேர்தலில் நிராகரித்து நடைமுறை சாத்தியமான அரசியல் உரிமைகளுக்கான சக்திகளை ஆதரிக்கவேண்டும்

## ஈ.பி.டி.பி. கட்சி அறிக்கையில் கோருகிறது

யாழ்ப்பாணம்,பெப்.19

எதிர்வரும் தேர்தலில் திருப்பத்தை ஏற்படுத்தும் தீர்மானத்தை தமிழ்மக்கள் எடுப்பது என்பது இதுவரை கால அழிவுகளுக்கும் அவலங்களுக்கும் மட்டும் தமது நாடாளுமன்றப் பலத்தை துஷ்பிரயோகம் செய்திருந்த சுயலாப அரசியல் தலைமைகளை முற்றாக நிராகரித்து, நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் எமது மக்களின் அரசியல் உரிமைக்காக உழைத்து வரும் சக்திகளை ஆதரிப்பதாகும்.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது மக்களின் உரிமைப் பிரச்சினைகளைத் தமது சுயலாபங்களுக்காக மட்டும் அடிக்கடி உச்சரித்துக் கொண்டு தமிழ் மக்களினதும், இளைஞர், யுவதிகளினதும் இரத்தத்தைச் சூடேற்றி அவர்களது வாக்குகளை மட்டும் அபகரித்துக் கொண்டு, எமது மக்களின் மீது அழிவுகளைச் சுமத்தி, அவர்களை அவலங்களுக்குள் சிறைப்படுத்திவிட்டு நாட்டை விட்டே ஓடிப்போய் சொகுசு வாழ்க்கை வாழ்ந்துவரும் சுயலாப அரசியல் தலைமைகள் எந்த முகத்தோடு இனியும் மக்களிடம் ஆணை கேட்டு வரப் போகிறார்கள்.

கடந்துபோன பல்வேறு காலச் சூழல்களின் போது தமக்கு வாக்களித்து மக்கள் ஆணையை வழங்கினால் தாம் மக்களது உரிமைகளை பெற்றுத்தருவோம் என்று வாக்குறுதி கொடுத்த சுயலாப அரசியல் தலைமைகள் எவையும் வாக்குறுதி கொடுத்தபடி எமது மக்களுக்கான உரிமைகளுக்காகப் பேரம் பேசும் அரசியலுக்காக பயன்படுத்தியிருக்கவில்லை என்றும், இவ்வாறு தங்களது பதவி நாற்காலிகளில் இவர்கள் உல்லாசமாக உட்கார்ந்துகொண்டு வெறுமனே ஊடகங்களுக்கான அறிக்கைகளை மட்டும் வீராவேசங்களோடு விடுத்து வந்திருந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எமது மக்கள் தொடர்ந்தும் இடப்பெயர்வுகளையும், அழிவுகளையும், பேரவலங்களையும் மட்டுமே சந்தித்திருந்தனர்.

77 இல் தனிநாடு கேட்டு மக்கள் ஆணையை பெற்றவர்கள் எமது மக்களை அழியவிட்டு தமிழ்நாட்டில் பெற்றுக் கொண்டது தனிநாடு, ஆனாலும் எமது மக்களுக்குக் கிடைத்திருந்தது சுடுகாடு என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கும் அந்த அறிக்கையில், அன்றைய காலச் சூழலில் தாம் ஆயுதம் ஏந்திய நீதியான போராட்டத்தை நடத்தியிருந்தபோது தனிநாடு கேட்ட அவர்களே அந்த ஆயுதப் போராட்டத்தை கொச்சைப்படுத்தியிருந்தார்கள் என்றும் குறிப்பிட்டிருந்ததோடு, எமக்கு கிடைத்திருந்த பொன்னான வாய்ப்பான இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை முறைகேடாகவும், மக்களுக்கு விரோதமாகவும் நடத்தியிருந்தவர்களோடு கூட்டுச் சேர்ந்து இன்று மக்களின் உரிமை குறித்துப் பேசுவது வெறும் சந்தர்ப்பவாத அரசியலாகும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது தவறான வழிமுறையிலாயினும் பெற்றுக் கொண்ட 22 நாடாளுமன்ற உறுப்புரிமையினை ஒரு முடியாத தமிழ் ஆணையாக வைத்து தமிழ் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாத தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், மாறாக தாம் பெற்ற நாடாளுமன்றப் பலத்தை அழிவு யுத்தத்தைத் தூண்டி விடுவதற்கும், அதற்கு நியாயம் கற்பிப்பதற்கும் மட்டுமே பயன்படுத்தியிருந்தவர்கள்.

தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் திருப்பத்தை ஏற்படுத்தும் தீர்மானத்தை எடுப்பது என்பது இதுவரை கால அழிவுகளுக்கும், அவலங்களுக்கும் மட்டும் தமது நாடாளுமன்ற பலத்தை துஷ்பிரயோகம் செய்திருந்த சுயலாப அரசியல் தலைமைகளை முற்றாக நிராகரித்து, நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் எமது மக்களின் அரசியலுரிமைக்காக உழைத்துவரும் சக்திகளை ஆதரிப்பதாகும்-என்றுள்ளது. (1)

# வில்பத்து வனப்பூங்கா மீண்டும் திறப்பு

கொழும்பு,பெப். 19

உல்லாசப் பயணிகள் பார்வையிடுவதற்காக இம்மாத இறுதியில் வில்பத்து தேசிய வனப் பூங்கா திறந்துவைக்கப்படவுள்ளது என வனப் பாதுகாப்புத் திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 667 ஹெக்டேயர் பரப்புக் கொண்ட இவ்வனப் பிரதேசத்தில் உல்லாசப் பயணிகள் தங்கிச் செல்வதற்கான அடிப்படை வசதிகள் இப்போது அமைக்கப்பட்டுவருகின்றன எனவும் அவர் கூறினார்.

யாலை தேசிய பூங்காவைவிட வில்பத்து வனப்பூங்காவில் வரிப்புலிகளின் அதிகம் உள்ளன எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதனால் கூடுதலான வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இங்கு வர ஆர்வம் காட்டுகின்றனர். இங்கு யானைகளின் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரித்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

இலங்கையின் மிகப் பழைமை வாய்ந்த வனப்பூங்காவான வில்பத்து 1905ஆம் ஆண்டில் மிருகங்களின் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது. பின்னர் 1938 ஆம் ஆண்டில் தேசிய வனப்பூங்காவாக அறிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.19

இலங்கை வங்கி, திருநெல்வேலிக் கிளையின் கோப்பாய் அலுவலகம் கணனி வலைப்பின்னல் சேவையுடன் இணையும் ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை வங்கியின் கோப்பாய் அலுவலகப் பொறுப்பதிகாரி மு.தவபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என். சிவரட்ணம் கலந்துகொள்வார். (04-201)

## வடமராட்சியில் வரையப்படும் வீதிச் சமிக்ஞை வர்ணக்கோடுகள்

வடமராட்சி,பெப்.19

வடமராட்சிப் பிரதேசத்தில் பிரதான வீதிகளில் வீதிக் கடவைக்கான சமிக்ஞை வர்ணக் கோடுகள் வரையப்பட்டு வருகின்றன. பாடசாலைகள், வைத்தியசாலைகள், சந்தைகள் உள்ளிட்ட முக்கிய சந்திகளில் இவ்வர்ணக் கோடுகள் வரையப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே வரையப்பட்டிருந்த வர்ணக் கோடுகள் மழையால் அழிந்ததையடுத்து, அந்தந்த இடங்களில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வர்ணக்கோடுகளை வரைந்து வருகிறது. (04-236)

## ஊர்சுற்றி ஓட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.19

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு பழைய மாணவர்களுக்கு இடையேயான ஊர்சுற்றி ஓடும் போட்டி இன்று காலை 7 மணியளவில் அதிபர் கு.கிருபாகரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (04-9-23)


### விற்பனைக்குண்டு

சைனா மோட்டார் சைக்கிள் விற்பனைக் குண்டு. பற்றரியிலும், பெற்றோலிலும் இயங்கக்கூடியது.
தொடர்பு: 0771819357
(94947)

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள MD 90 மோட்டார் சைக்கிள் (மொடல் 21) விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
தொ.பே: 0770592000, 0771532465
(95619)

### வேலையாள்கள் தேவை

* மருந்து வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புவர்களும் தேவை. (யாழ்/ நல்லூர் பிரதேசங்களில்)
* கணனி வேலைகளும் தெரிந்திருந்தால் விரும்பத்தக்கது.
* ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 3985, மே/பா உதயன்.
(95618)

### தவறிவிட்டது

உடுவில் தெற்கு, சத்தியபுரம், சுன்னாகம் எனும் முகவரியைச் சேர்ந்த சண்முகம் பத்மாசலம் என்பவரது தே.அ.அட்டை (701204387V) உடுவிலுக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0771614335 உடன் தொடர்பு கொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும். (95624)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஹற்றன் நஷனல் வங்கியின்
சிரேஷ்ட் வடபிராந்திய
முகாமையாளராகப் பதவி உயர்வு
பெற்று யாழ்.மண்ணிலே தனது
உன்னதமான சேவையை வழங்கவுள்ள
உயர்திரு. திசைவீரசிங்கம்
**ஜெயராசசிங்கம்**
அவர்களை மனதாரப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

கடந்த பதினாறு வருடங்கள் யாழ்ப்பாண வங்கியில் முகாமையாளராகவும் சிரேஷ்ட முகாமையாளராகவும் கடமையாற்றி மக்களுக்கும் வர்த்தகர்களாகிய எமக்கும் நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவிய வேளையிலும் தனது நலன்பாராது எந்தவேளையிலும் எமது பிரச்சினைகளை நேரடியாக கேட்டறிந்து எமக்கு தோள் கொடுத்து வியாபாரத் துறையில் முன்னோடியாக திகழவைத்த சிரேஷ்ட வடபிராந்திய முகாமையாளர் திரு.தி.ஜெயராசசிங்கம் அவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று தனது குடும்பத்தினருடன் நீடூழி வாழ வாழ்த்துவதோடு அவர் மேலும் பல உயர் பதவிகள் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

*Jaffna Electricals,*
*Jaffna Electrical (Abans Show room),*
*Midea Electro Mart,*
*Mahas &Sons,*
*Mahanathy Tex,*
*Lingam Silk House.*

(அ 504929)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்ட உதைபந்தாட்டப்போட்டி

# குருநகர் பாடும்மீன் - நாவாந்துறை சென்.மேரிஸ் இறுதிப்போட்டியில் நாளை பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையேயான 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இறுதிப்போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பலம் பொருந்திய அணிகளாக இரண்டு அணிகளும் உள்ளதால் இறுதியாட்டத்தில் விறுவிறுப்புக்குப் பஞ்சமிருக்காது என ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதேவேளை நீண்ட காலத்திற்குப் பின்னர் யாழ்.குடாநாட்டின் பிரபலமான இந்த இரு அணிகளும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளதால் இந்த ஆட்டத்தினைக் காணப் பெரும் எண்ணிக்கையான உதைபந்தாட்ட ரசிகர்கள் மைதானத்தில் திரள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (04-23)

# பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து சம்பியன்

வலி.வடக்கு, பெப்.19

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஆனைக்கோட்டை கலை ஒளி விளையாட்டுக்கழகமும் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களில் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக்கழகம் 25:07, 25:09 புள்ளிகள் என்ற அடிப்படையில் கலை ஒளி விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (04-86)

# நீச்சல் போட்டியில் வென்றோர் விவரம்

வலி.வடக்கு, பெப்.19

மாதகல் சென்.லூர்த்து மாதா ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி மாதகல் சென்.தோமஸ் யூத் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட நீச்சல் வீரர்களுக்கு இடையே நடத்திய இரண்டு கடல் கிலோ மீற்றர் நீச்சல் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

எஸ்.தாசன் (வடமராட்சி), அ.ரூபன் (வடமராட்சி), தி.தேவநாதன் (போயிட்டி).

இப்போட்டியில் 19 வீரர்கள் கலந்து கொண்டனர். கடந்த பல வருடங்களாக மாதகல் பகுதியில் மக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படாத நிலைமை காணப்பட்டது.

எனினும் இவ்வருடம் பொதுமக்கள் லூர்த்து மாதா ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து சென். தோமஸ் யூத் விளையாட்டுக்கழகம் முதல் தடவையாக இப்போட்டியை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (04-86)

எக்ஸ்போ எயார் கூடைப்பந்தாட்டம்

# அரையிறுதியில் வென்று இறுதிக்குள் நுழைந்த அணிகள்

யாழ்ப்பாணம்,பெப்.19

'எக்ஸ்போ எயார்' விமான சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டத்தில் பெண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம், உடுவில் மகளிர் கல்லூரி அணிகளும் ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் யாழ்.மத்திய கல்லூரி அணிகளும் வெற்றி பெற்றுள்ளன.

யாழ்.இந்துக் கல்லூரிக் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் முதலில் இடம்பெற்ற போட்டியில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் அணியை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரி அணிமோதியது. இதில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் அணி தன்னை எதிர்த்து விளையாடிய வேம்படி மகளிர் கல்லூரி அணியை 46:38 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது.

பிற்பகல் உடுவில் மகளிர் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்ற மற்றொரு அரையிறுதியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை 38:32 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

ஆண்களுக்கு இடையில் இடம்பெற்ற அரை இறுதியாட்டத்தில் முதலில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ்.மத்திய கல்லூரி அணியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை 62:28 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது.

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்.இந்துக் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணியை 80:48 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டு இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது. (04-23-86)

# வீதியோட்டப் போட்டியில் வெற்றிபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.19

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டியின்போது மாணவர்களுக்கு இடையே இடம்பெற்ற வீதி ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-



முதலாமிடம் யே.யாசேதரன்



இரண்டாமிடம் க.மு.பவுசன்



மூன்றாமிடம் க.காங்கேயன்

# பூப்பந்தாட்ட இறுதியாட்டத்திற்கு மானிப்பாய் இந்து நுழைந்தது

வலி.வடக்கு, பெப்.19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான பூப்பந்தாட்ட - அரையிறுதி ஆட்டமொன்றில் மானிப்பாய் இந்துக் கல்லூரி இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டமொன்றில் உடுவில் மான்ஸ் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்கள்கொண்ட இப்போட்டியில் இரண்டு தனிநபர் சுற்றுக்களையும் ஒரு இரட்டையர் சுற்றையும் வெற்றிகொண்டு மானிப்பாய் இந்துக்கல்லூரி இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

முதல் மூன்று தனிநபர் சுற்றுக்களில் முதலாவது சுற்றில் உடுவில் மான்ஸ் வித்தியாலயம் 21:17, 21:18 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாம் மூன்றாம் தனிநபர் சுற்றுக்களை மானிப்பாய் இந்துக் கல்லூரி 21:15, 21:09 மற்றும் 21:17, 21:16 புள்ளிகள் என்னும் அடிப்படையில் வெற்றி கொண்டது.

நான்காவதாக இடம்பெற்ற இரட்டையர் சுற்றையும் மானிப்பாய் இந்துக்கல்லூரி 21:13, 21:13 என்ற அடிப்படையில் உடுவில் மான்ஸ் வித்தியாலயத்தை வீழ்த்தியது. (04-86)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## வீதியோட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.19

எழுவைதீவு முருகசேர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு மாணவர்களுக்கு இடையேயான வீதியோட்டப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 6 மணியளவில் புனித தோமையார் ஆலய முன்றிலில் ஆரம்பமாகி பாடசாலை முன்றிலில் நிறைவடையும்.

நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் கு.கிருபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளன. (04-9-23)

# உதைபந்தாட்டப் போட்டி திகதியில் மாற்றம்

வலி.வடக்கு, பெப். 19

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறுவதாக இருந்த ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி தாவடி காளியம்பாள் விளையாட்டு மைதானத்திற்குப் பதிலாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி வேறு ஒரு தினத்தில் பின்னர் நடைபெறும் எனவும் உடுவில் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் செல்வி ம.சின்னத்தம்பி அறிவித்துள்ளார். (04-86)



உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும், உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொள்வதைப் (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற தொற்றல்லாத நோய்களின் கண்காட்சியில் வைத்தியப் பரிசோதனை மேற்கொள்ளப் படுவதையும், நீரிழிவு நோயாளர்களுக்கான உணவு தயாரிப்பு செய்முறை விளக்க மளிக்கப்படுவதையும், பாடசாலை மாணவர்களுக்கு விளக்க மளிப்பதையும் படங்களில் காணலாம். (படம்- விற்ரோறி)

# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக் கண்காட்சியில் பெரும் எண்ணிக்கையானவர்கள் பங்கேற்றனர்

மூளாய்,பெப்.19

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நேற்று தொற்றல் லாத நோய்கள் தொடர்பான கண்காட்சி இடம்பெற்றது. பெரும் எண் ணிக்கையானவர்கள் இக் கண்காட்சியில் பங்கேற்றனர்.

கொழும்பு பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் சமூக மருத்து வப்பிரிவு, போசாக்கு மற்றும் சுகாதார பராமரிப்பு அமைச்சு, இலங்கை நீரிழிவு சங்கம், உலக சுகாதார அமைப்பு, சுகாதார வாழ்வு கிளினிக், நீரிழிவுத் தடுப்பு இயக்கம், இலங்கை மருத்துவ சங்கம் ஆகியன இணைந்து கண்காட்சியை நடத்தியன.

இக் கண்காட்சியைத் தொற்றல்லாத நோய்களினது தாக்கங்கள் பற்றியதாக இருந்தபோதும் நீரிழிவு நோய் தொடர்பான விடயங் களே முக்கியமாக இடம்பெற்றிருந்தன.

நீரிழிவு நோய் எவ்வாறு, எப்படி ஏற்படுகிறது, அது மனிதர்களை தாக்காது இருக்க வேண்டும்என்றால் என்ன செய்ய வேண்டும், நீரிழிவு நோய் உள்ளவர்கள் எவ்வாறு தங்களைப் பராமரித்து நோயின் தாக்கத்தை குறைத்துக் கொள்வது, உட் கொள்ள வேண்டிய உணவு முறைகள் ஆகி யன பற்றியெல்லாம் மிகத் தெளிவாக வும் பார்வையாளர்களுக்கு விளங்கக்கூடிய வகையிலும் மருத்துவபீட விரிவுரையாளர் களாலும், வைத்தியர்களாலும், தாதிமார் களா லும் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் விரும்பிய பார்வையாளர்க ளுக்கு மருத்துவ சோதனைகளும் செய்யப் பட்டதுடன் உரிய ஆலோசனைகளும் வழங் கப்பட்டன.

இங்கு நீரிழிவு நோயாளர்கள், பொது மக்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாண வர்கள் என பெருமளவிலான பார்வையா ளர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். (1-93)

# தென்மராட்சியில் புதிய பாணியில் மோசடிகள்; மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.19

தென்மராட்சிப் பிரதேசத்தில் புதிய பாணியில் மோசடிகள் இடம் பெறுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

மீசாலை பகுதியில் வீதியோரத்தில் மணல் பறிக்கப்பட்டிருந்த வீட்டிற்குச் சென்ற இனந்தெரியாத அங்கிருந்த பெண்ணிடம் கடை யொன்றின் பெயரைச் சொல்லி அந்த வீட்டுக்காரர் 5 பைக்கற் சிமெந்துக்கு 'ஓடர்' பண்ணியுள்ளதாக கூறி 5 ஆயிரம் ரூபா பணத் தினை வாங்கிச் சென்றுள்ளார்.

வேலைக்குச் சென்று விட்டு மாலை வீடு திரும்பிய வீட்டு உரிமையாளரும், மனைவியும் தாங்கள் சிமெந்துக்கு 'ஓடர்' கொடுக்கவில்லையென தெரிவித்தபோதுதான் ஏமாந்து போனதை பணம் கொடுத்தவர் உணர்ந்தார்.

இதே வேளை மீசாலை மேற்குப் பகுதி யில் நடமாடும் பெண்கள் ஆள்களில்லாத வீடுகளில் புகுந்து பொருள்களை அபகரித் துச் சென்றுள்ளனர். வெளியில் நின்று பல தடவைகள் அழைக்கும் பெண்கள் வீட் டில் ஆள்கள் இல்லையென்பதை உறுதிப் படுத்தி உள்சென்று பொருள்களை திருடிச் செல்வதாகவும் வளவுக்குள் சென்ற வேளை யில் வீட்டுக்காரர் இருப்பதை அவதானித் தால் தாம் வெளியிடத்தில் இருந்து வருவ தாகவும் தண்ணீர் குடிக்க உள்ளே வந்ததா வும் தெரிவித்து நழுவி விடுகின்றனர்.

இவ்வாறான சம்பவங்களையடுத்து அப்பகுதி கேற்களில் போத்தல்களில் தண் ணீர் தொங்க விடப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டது. இத்தகைய மோசடிக்காரர் களில் இருந்து தப்புவதற்கு மக்கள் அவ தானமாக இருக்க வேண்டும் என்று அறி வுறுத்தப்படுகிறது. (1-207)


## கண்ணீர் அஞ்சலி



இ.மி.ச.வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் சி.குமாரலிங்கம் (மின் அத்தியட்சகர், யாழ்.புறநகர்) அவர்களின் அன்புத் தாய்

திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இ.மி.ச.வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம்,
இ.மி.ச., யாழ்ப்பாணம்.

(சி/564981)


## சுவசெத Suwasetha லொத்தா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 358
சீட்டிழுப்பு திகதி: 17.02.2010

வெற்றி எழுத்து: H வெற்றி இலக்கங்கள்: 25 28 51 63 போனஸ் இலக்கம் 31

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 13,279,255.50 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | 02 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 81 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 137 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 3615 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 2436 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 45962 |

இந்த முறை வெல்வப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 1,410,780.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,498,678.50

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்புப்பணியின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 2473360, 2433631 இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.

## சுன்னாகத்தில் நாளை சேவை நயப்புவிழா

வலி.வடக்கு,பெப்.19

சுன்னாகம், தாளையடி ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் தேவஸ்தானத்தில் 40 வருடமாக குருத்துவப்பணியாற்றிய முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்களைப் பாராட் டும் சேவை நயப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஐயனார் தேவஸ்தான திரு மண மண்டபத்தில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி.குமரவேல் தலைமையில் நடை பெறவுள்ளது.

வரவேற்புரையை யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த க.மணிவண் ணனும் ஆசியுரையை மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்களும், வாழ்த்துரையை சித்தாந்த நல்லறிஞர் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ,சிவஸ்ரீ ச.சண்முகநாதக் குருக்கள் ஆகியோரும் வழங்குவார்கள்.

பாராட்டுரையை அல்லையம்பதி சிவஸ்ரீ ராம்.கெங்காதரக்குருக்கள் ,நயினாதீவு சிவஸ்ரீ பாலகணேஸ்வரக்குருக்கள், யாழ்.பல்கலைக் கழக வணிகத்துறை பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், தெல்லிப்பழை வைத்திய அதிகாரி ஆ.ஜெயக்குமார் உட்பட பலரும் வழங்கவுள்ளார்கள். (1-86)


## மனம் பூரிக்கின்றோம்



ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள

உயர்திரு திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சகல சௌபாக்கியங்களுடனும் தனது குடும்பத்தினருடன் நீடூழி வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

(சி/564980) அல்டி எலக்ரோனிக்ஸ், யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட வட பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள

உயர்திரு திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்

அவர்களை மனதாரப்பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தின் பலதரப்பட்ட தரப்பினருக்கும் உன்னத சேவை வழங்க இறையருள் வேண்டி நிற்கின்றோம்.

உரிமையாளர் எஸ்.உதயகுமார்
மற்றும் ஊழியர்கள்
பிரசாத் நகையகம்,
இல: 177 A , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(95627)

## ஸ்கந்தாவின் பிரார்த்தனைக்குரியவர்கள்

சமீபத்தில் இறையடி சேர்ந்த பிரபல பௌதிக ஆசிரியர்
S.சிவசுப்பிரமணியம் (மணியம் மாஸ்டர்)
ஆங்கில ஆசிரியர் P.குமாரவேல்
ஆகிய அமரர்களை நன்றியுடன் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் கழகம்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

(95628)


## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 499
சீட்டிழுப்பு திகதி: 17.02.2010

வெற்றி எழுத்து: K வெற்றி இலக்கங்கள்: 23 34 40 63

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ.11,258,130.40 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 03 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 237 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 434 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40/- | 10784 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6153 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 155654 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25083 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,350,220.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 2473360, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,534,598.40

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி மகளிர் கல்லூரி



தொகுப்பு: ஜயந்தன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஆரம்ப காலத்தில் அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்களையும் 14 மாணவிகளையும் கொண்டு செயற்பட ஆரம்பித்தது. செல்வி பாலாம்பிகை கனகசபை வித்தியாலயத்தின் முதலாவது அதிபராகப் பொறுப்பேற்று வித்தியாலயத்தின் மேம்பாட்டுக்கு உறுதுணையானார். அவரைத் தொடர்ந்து செல்வி யோகாம்பிகை கனகசபை, திருமதி காயத்திரி கணேசன், திருமதி இராசலட்சுமி வைத்திலிங்கம், திருமதி எஸ்.ஆறுமுகராசா, திருமதி பர்வதவர்த்தினி சிவசங்காரம், த.காசிநாதர், திருமதி குணேஸ்வரி பரராசசிங்கம் ஆகியோர் வித்தியாலயத்தை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் சென்றனர்.

செல்வி கிருபாதேவி வீரசிங்கம் அதிபராக இருந்த காலத்தில் 1ஏபி பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு சாவகச்சேரி மகளிர் கல்லூரி என்று பெயர் பெற்றது. ஆரம்ப காலம் தொடக்கம் பாட இணைப்பாட விதானங்கள் ஆகியவற்றில் பிரதேச, மாவட்ட, தேசிய மட்டப்போட்டிகளில் ஈட்டிய சாதனைகள் மகாவித்தியாலயம் கல்லூரியாக மாறக் காரணமாகின. பிரதேச, மாவட்ட மட்டங்களில் வருடாவருடம் பல்வேறு வகையான போட்டிகளில் கல்லூரி மாணவிகள் பல சாதனைகள் படைத்தனர். பரீட்சைகளிலும் வருடாவருடம் சிறந்த பெறுபேறுகளை இக் கல்லூரி மாணவிகள் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

பெண்களுக்கான தனித்துவமான கல்விச் செயற்பாடுகளில் முன்னனி வகித்த கல்லூரி 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களின்போது பாரிய அழிவுகளைச் சந்தித்தது. கல்லூரியில் இருந்த அனைத்துக் கட்டடங்களும் தரைமட்டமான நிலையில் மக்கள் மீளக்குடியமர்வின்போது காணப்பட்டது. இதன் போது கல்லூரியில் இருந்த தளபாடங்கள் உட்பட அனைத்துப் பொருள்களும், விஞ்ஞான ஆய்வுகூடத்தில் இருந்த பெருள்கள், நூலகத்தில் இருந்த ஆயிரக்கணக்கான புத்தகங்கள் உட்பட அனைத்தும் அழிவடைந்தன.

யுத்த அனர்த்தங்களின் போது மக்கள் இடம்பெயர்ந்திருந்த வேளையில் கரவெட்டியில் உள்ள ரலன்ற் பிரத்தியேக கல்வி நிலையத்தில் திருமதி சிவத்திரை சிவநாதன் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தார் அங்கு கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளப் போதிய இடவசதி இல்லாததால் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய (UNHER) நிறுவனத்தினரால் கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் அமைக்கப்பட்ட இரு தற்காலிக வகுப்பறைகளில் பல இடர்பாடுகளுக்கு மத்தியில் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

மக்கள் தென்மராச்சிப் பிரதேசத்தில் மீளக்குடியேறிய வேளையில் போதிய கட்டட வசதிகள் இல்லாததால் கட்டைவேலி மெதடிஸ்தமிஷன் பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிகக் கொட்டகைகளை கொண்டுவந்து கொட்டகைகள் அமைத்து கடந்த 2002 ஏப்ரல் 29ஆம் திகதி மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது. கல்லூரிக் கட்டடங்களின் அழிவுகளை கண்ணுற்ற சுவிஸ் அபிவிருத்தி முகவர் (SDC) நிறுவனம், ஜேர்மன் தொழிநுட்ப வலய நிறுவனம் (GTZ), கல்வி அமைச்சின் GEP II திட்டம் ஆகியவற்றின் உதவியுடன் புதிய மாடிக்கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டது. வகுப்பறைத் தொகுதிகள், பிரதான மண்டபம் ஆகியவை நிர்மாணிக்கப்பட்டு புதுப்பொலிவு கண்டது. கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு பாடவிதானங்கள் முழுமை பெற்ற போதிலும் இணைப்பாட விதான செயற்பாட்டுத் திட்டங்கள் முழுமையடைய பல தேவைகள் கல்லூரிக்குத் தேவையாக காணப்படுகிறது.

முதலாவது, கல்லூரி வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியாத அளவுக்கு முட்கம்பிகள் போடப்பட்டிருந்தன. வெடிபொருள்கள் அபாயம் காரணமாக மாணவிகள் அப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படாததால் விளையாட்டு மைதானம் பற்றைக்காடுகளால் நிறைந்து காணப்பட்டது. மைதானத்தில் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பெற்றோர்கள் மூலம் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கல்லூரியில் உள்ள மாணவர் தொகைக்கேற்ப விளையாட்டுப் போட்டிகளை நடத்த விளையாட்டு மைதானம் போதியதாகக் காணப்படவில்லை. போதிய விஸ்தீரனமற்ற நிலையில் மைதானம் காணப்படுவதால் மாணவிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் யுத்த வேளையில் சேதமடைந்த மதில்கள் இன்னமும் சீர் செய்யப்படவில்லை. இதனால் இவ்விடங்கள் ஊடாக கால்நடைகள் மேய்ச்சலுக்காக மைதானத்துக்கு கொண்டு வரப்படுகின்றன. அழிவடைந்த நூலகம் இன்னமும் புனரமைக்கப்படாதது மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு பெரும் பாதிப்பாக உள்ளது.

நவீன வசதிகளுடன் கூடிய பாடங்களுக்கான வகுப்பறைகள், செயற்திறன் மிக்க கணணிகள் நவீன கற்பித்தல் செயன்முறையை முன்னெடுக்க அவசியமானவை. இவற்றினை நிறைவு செய்யுமிடத்து சாவகச்சேரி மகளிர் கல்லூரி புதுப் பொலிவுடன் தன்னிறைவு பெற்ற பாடசாலையாக உயர்வுறும். வளங்களுடனும் வசதிகளுடனும் சாதனைகளுடனும் நிமிர்ந்து நிற்கும் இக்கல்லூரி எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அதனை எய்துவதற்கு சமூகமும் கல்லூரியுடன் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு கை கொடுக்குமிடத்து சாதனைகளை மென்மேலும் அதிகரித்து தென்மராட்சியில் தலை நிமிர்ந்த கல்லூரியாக மிளிரும் என்பதில் ஐயமில்லை. (முற்றும்)

# மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்








கற்றல் என்பது வகுப்பறைச் செயற்பாட்டுடன் மட்டுப்படுத்தப்பட்டதொன்று. அறிவைப்பெறுவது என்பது கற்றலின் ஓர் அங்கம் மட்டுமே. அறிவுவிருத்தி, பண்பு மற்றும் ஆளுமை விருத்திக் கூறுகளை வளர்த்தெடுப்பது கல்வியின் பிரதான நோக்கமாகும். இத்தகைய நோக்கங்களை எய்துவதற்கு வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் பெரிதும் உதவுவன.

அவ்வாறான செயற்பாடுகளால் இன்று வெளிச்சவீட்டு (LIGHT HOUSE) பாடசாலையாக நவோதயப் பாடசாலையாக முன்னேறிய மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் பற்றி ஆராய இவ்வித்தியாலய மாணவர்களை வழிநடத்திய அதிபர்கள், ஆசிரியர்களின் முழுமையான பங்களிப்பே காரணமாகும்.

கிறிஸ்தவ மிஷனரிகள் தமது மதத்தினைப் பரப்பும் நோக்குடன் கிராமங்கள் தோறும் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவி ஆங்கிலக் கல்வியைப் புகட்டிய காலத்தில் அப் பகுதியைச் சேர்ந்த வேதாரணியர் வீரசிங்கம் என்பவர் மீசாலைப் பகுதி மக்களுக்கு ஆங்கிலக் கல்வியை ஊட்டவேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பிப்பதால் சைவ மக்களாகிய அப்பகுதி மக்கள் மதம் மாறமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள தனது காணியினை மிஷனரிக்கு வழங்கினார்.

காலப்போக்கில் கல்விக்குப் பதிலாக மிஷனரியினர் மத மாற்றத்தை குறியாகக் கொண்டுள்ளதைக் கண்ணுற்ற வீரசிங்கத்தார், அப்பகுதியில் சைவ சமயத்தினை வளர்க்கும் நோக்கில் தனது மற்றொரு காணியில் சைவத் தமிழ் வித்தியாசாலை என்னும் பெயரில் பாடசாலையை ஆரம்பித்து தானே தலைமையாசிரியராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். பாடசாலைக்கு மூன்று ஆசிரியர்களையும் தனது சொந்தப் பணத்தில் அவர்களுக்கு மாதாந்தம் வேதனமும் வழங்கினார்.

பாடசாலையின் மாணவர் தொகை படிப்படியாக அதிகரித்துள்ளமையால் பெரும் இடநெருக்கடி ஏற்படவே தற்போது வித்தியாலயம் இயங்கும் இடத்தில் விசாலமான கொட்டில்களை அமைத்து தொடர்ந்து நடத்தினார். அத்துடன் பாடசாலையைத் தொடர்ந்து நிர்வகிப்பதற்காக ஒரு பரிபாலன சபையையும் அமைத்தார்.

இவர் 1919ஆம் ஆண்டு இறைபதமெய்தியதையடுத்து பரிபாலன சபையினர் பராமரித்து வந்தனர். காலப்போக்கில் நிதியின்மையால் நிர்வகிப்பதில் ஏற்பட்ட கஷ்டங்கள் காரணமாக அப்போது கல்விப் பணியைப் பரவலாக யாழ்.மாவட்டத்தில் மேற்கொண்டு வந்த சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்தனர்.

இப் பாடசாலையை மீண்டும் இயக்குவதற்கு சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினரால் 1926ஆம் ஆண்டு பாடசாலை மண்டபத்தில் கூட்டம் கூடப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து மக்களும் பாடசாலைக்கு பெரியார் வீரசிங்கத்தின் பெயரைச் சூட்ட வேண்டுமென கேட்டுக் கொண்டதையடுத்து 1926ஆம் ஆண்டு ஆவணி மாதம் 29ஆம் திகதி வீரசிங்கம் சைவ வித்தியாசாலை என்னும் பெயருடன் ஆரம்பமானது.

(வளரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர நாட்டில் சுயாட்சி கோருவது தவறல்ல என்கின்றார் கருணாநிதி



சென்னை,பெப்.19

சுதந்திரமடைந்த இந்நாட்டில் சுயாட்சி கோருவது தவறல்ல. சுயாட்சி கோரிக்கைக்கு இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களின் ஆதரவு கிடைக்கும் - என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும், வராவிட்டாலும், என்றும் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் நிலை தொடர்ந்தாலும், இந்தியாவில் ஜனநாயகத்தைக் காத்திட வேண்டும். தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ உழைக்க வேண்டும். அந்தப் பூங்காவை காத்திடும் பணியை அமைதியாகவும், ஆர்ப்பாட்டமின்றியும், அன்னியருக்கு இடம் கொடுக்காத வகையிலும் கடைப்பிடித்து நிறைவேற்றிடவேண்டும்.

இதை உறுதி பூண்டு, ஒத்துழைப்புத் தருகின்ற இந்த இயக்கத்தை தலைமை ஏற்று நடத்துகின்ற தகுதி, திறமை தி.மு.கவுக்கு உண்டு. சென்னையில் நான் நடத்திய மாநில சுயாட்சி மாநாட்டில் எஸ். எம். கிருஷ்ணா கலந்து கொண்டு பேசினார்.

காஷ்மீரில் பரூக் அப்துல்லா மாநில சுயாட்சி கொள்கை மாநாடு நடத்திய போது சாதிக் பாட்ஷா கலந்து கொண்டார். ஜோதிபாசு, மேற்கு வங்கத்தில் மாநில அதிகாரங்களை மேலும் பெறுவதற்கு வலியுறுத்துகிற நியாயமான தீர்மானங்களை நிறைவேற்றினார்.

கடிகாரத்தின் முள் சுழன்றால் அதன் தொடர்ச்சியாக நாட்காட்டியில் நாட்கள் சுழலும். அப்படிச் சுழன்ற போது எத்தனையெத்தனை இடங்களுக்கு, நாடுகளுக்கு சுயாட்சியும், சுதந்திர ஆட்சியும் கிடைத்திருக்கிறது என்பதை நன்றாகவே அறிவோம்.

'கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்தம் ஒன்று வருகுது' என்ற பழம் பெரும் சுதந்திரப் பாடலை நினைவிலே நிறுத்தி, சுதந்திரமடைந்த இந்நாட்டில் சுயாட்சிகோருவது தவறல்ல.

மாலை தங்கத்தால் ஆனதாயினும், மரகத மணிகளால் ஆனதாயினும் ஒவ்வொரு மணியையும் இணைத்திருக்கின்ற 'கொக்கி' வலிமையாக இருந்தால்தான் மாலைக்கு வலிவு. அந்த வலிவுக்கு நாம் வைத்துள்ள பெயர்தான் மாநில சுயாட்சி. நாம் வலியுறுத்துகின்ற மாநில சுயாட்சிக்கு இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களின் ஆதரவு கிடைக்கும் என நம்புகிறேன் - என்றுள்ளது.

## ஆற்றில் பஸ் கவிழ்ந்ததில் உ.பிரதேசத்தில் 23 பேர் பலி

ஜலான்,பெப். 19

திருமணத்துக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த பஸ், திடீரென ஆற்றில் விழுந்ததால் 23 பேர் பலியாயினர்.

உத்தரப் பிரதேசத்திலுள்ள மதோகர் என்ற இடத்தில் நடந்த திருமணத்தில் கலந்துகொண்ட 63 பேர் பஸ் ஒன்றில் ஏறி பிந்த் என்ற இடத்துக்குச் சென்று கொண்டிருந்தனர். வழியில், அதிக பாரத்தால் பஸ் நிலை தடுமாறி, பாகுஞ்ச் ஆற்றில் தலைகுப்புற விழுந்தது.

இதன்போது, நீரில் மூழ்கி 23 பேர் இறந்துபோயினர். இவர்களில், 22 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும், ஒருவரின் உடல் காணவில்லை என்றும் பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.

## பாகிஸ்தானுடன் அமைதிப் பேச்சு அல்ல; பயங்கரவாதம் குறித்தே விவாதிக்கப்படும்

### அமைச்சர் கிருஷ்ணா தெரிவிப்பு



டில்லி,பெப். 19

இந்தியா - பாகிஸ்தான் வெளியுறவு செயலர்கள் மட்டத்தில் வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சு இரு நாடுகளுக்கு இடையேயான அனைத்துப் பிரச்சினைகள் பற்றி பேசப்படும் அமைதிப் பேச்சாக இருக்காது. அதற்கு மாறாக பயங்கரவாதம் குறித்து மட்டுமே பேசப் படும் - என்று வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த அவர் இதுகுறித்து மேலும் கூறியவை வருமாறு -

பல்வேறு பிரச்சினைகள் பற்றிப் பேசும் இருதரப்பு அமைதிப் பேச்சு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். இரு தரப்பு அமைதிப் பேச்சு புதுப்பிக்கப்படவில்லை. பயங்கரவாதம் குறித்து மட்டுமே, வரும் 25ஆம் திகதி இரு நாட்டு வெளியுறவு செயலர்களும் பேசுவர். இந்தியா எழுப்பிய பிரச்சினைகளை, பாகிஸ்தான் கவனித்து நடவடிக்கை எடுக்கும் வரை, அமைதிப் பேச்சு நடக்காது - என்றார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான அமைதிப் பேச்சு நான்கு சுற்றுக்கள் வெற்றிகரமாக நடந்தன. ஆனால், மும்பைத் தாக்குதல் காரணமாக, ஐந்தாவது சுற்றுப் பேச்சு நிறுத்தி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

## பாயும் புலியைப் படமாகக் கொண்டு கட்சிக் கொடி அமைத்துள்ளார் சீமான்



மதுரை, பெப்.19

மதுரையில் எதிர் வரும் மே 18ஆம் திகதி புதிய அரசியல் கட்சி தொடங்கப்படுகிறது என்றும் மேற்படி கட்சிக் கொடியில் பாயும் புலியின் படமும் முக்கிய இடம் பெறும் எனவும் 'நாம் தமிழர்' இயக்கத்தின் தலைவரும் இயக்குநருமான சீமான் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சேலத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

சமூக இயக்கமாக செயற்பட்டு வந்த 'நாம் தமிழர்' அமைப்பு மதுரையில் மே 18 ஆம் திகதி நடக்கும் தமிழ் எழுச்சி மாநாட்டில் அரசியல் கட்சியாக அறிவிக்கப்படுகிறது.

உலக அளவில் சர்வதேசு இனமான தமிழினம் பரவி விரிந்து கிடக்கிறது. தமிழர்களைத் தொடர்ந்து அடையாளப்படுத்தவும் அவர்களை ஒருங்கிணைக்கும் வகையிலும் அக்கட்சி செயற்படும்.

சிவப்பு நிற பின்னணியில் கொடி உருவாக்கப்பட்டுள்ளது. கொடியின் மத்தியில் பாயும் புலியும் அதைச் சுற்றி கரு வட்டமும் அதிலிருந்து சூரியக் கதிர்கள் வெளிவருவது போலவும் அமைந்துள்ளது.

முதலில் கட்சியை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். உரிய நேரத்தில் எமது கட்சி தேர்தலில் போட்டியிடும் - என்றார்.

## தீவிரவாத மிரட்டல்களுக்கு அஞ்சோம்; திட்டமிட்டபடி விளையாட்டுப்போட்டிகள் நடைபெறும்

### அமைச்சர் சிதம்பரம் உறுதி

ஜம்மு, பெப். 19

பயங்கரவாத அமைப்புகளான, ஹூஜி மற்றும் அல் குவைதாவின் மிரட்டல்களுக்கு இந்தியா பயப்படாது. திட்டமிட்டபடி எல்லா விளையாட்டு நிகழ்ச்சிகளும் நடைபெறும், வீரர்களும் பங்கேற்பர் - என்று உள்துறை அமைச்சர் சிதம்பரம் கூறினார்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் பாதுகாப்பு நிலை குறித்து நேற்றுமுன்தினம் அம்மாநில முதல்வர் ஒமர் அப்துல்லாவின் வீட்டில், மாநில மத்திய அரசுகள், எல்லைப் பாதுகாப்புப் படை, உளவுப் பிரிவு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டம் நடந்தது.

சமீபத்தில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் (பி.ஓ.கே.) இருக்கும் ஜம்மு - காஷ்மீரைச் சேர்ந்தவர்கள் தங்கள் மாநிலத்துக்குத் திரும்ப வழிவகை செய்வது குறித்து, அம்மாநில அரசு, மத்திய அரசுக்கு ஆலோசனை தெரிவித்தது.

பின்னர் அமைச்சர் சிதம்பரம் கூறியவை வருமாறு -

பயங்கரவாதப் பயிற்சிக்காகத் தங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்து பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருப்பவர்கள் பயங்கரவாதத்தைக் கைவிட்டால்தான், திரும்பி வருவதற்கு அனுமதி வழங்கப்படும். சரண் அடையும் கொள்கையைப் பொறுத்தவரை திரும்பி வருபவர்களை அடையாளம் கண்டறிதல், சரணடைதல், மறுவாழ்வு அளித்தல் என்ற ரீதியில் ஓர் அறிக்கையை மாநில அரசு தயாரித்து வருகிறது.

விரைவில் அதை மத்திய அரசிடம் அளிக்கப்படும். இந்தத் திட்டத்தைத் தயாரிப்பதில் மத்திய அரசு அவசரப்படுத்தாது.



ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இதுவரை ஊடுருவல், பயங்கரவாதிகள் - பாதுகாப்புப் படையினர் இடையிலான மோதல்கள் இவையெல்லாம் சேர்த்து 65 சம்பவங்கள் நடந்துள்ளன. இச்சம்பவங்களில் ஏழு பொதுமக்களும், ஒன்பது பாதுகாப்புப் படையினரும் உயிரிழந்துள் ளனர். மொத்தம் 25 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

நாம் என்ன செய்ய வேண்டும் என்று பயங்கரவாதி இலியாஸ் காஷ்மீரி சொல்லக் கூடாது. அவன் சொன்னபடி நாம் நடக்க முடியாது. அதற்கெல்லாம் பயப்படவும் இல்லை.

கொமன் வெல்த் போட்டிகள் மற்றும் ஐ.பி.எல். நிகழ்ச்சிகளுக்கு திட்டமிட்டபடி வீரர்கள் வந்து பங்கேற்பர். வெளிநாடுகளிலிருந்து வரும் கிரிக்கெட் மற்றும் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் அவர்களது பயற்சியாளர்களுக்கும் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றார்.

## இந்தியச் செய்திகள்

## சேதுத்திட்ட கண்காணிப்புப் பணியிலிருந்த மீனவர் மீது இலங்கைப் படை தாக்குதல்!

### நடுக்கடலில் இருவர் காயம்

இராமேஸ்வரம், பெப்.19

சேது சமுத்திரத் திட்ட கடல் சுற்றுச்சூழல் ஆய்வு மிதவைக்கருவிகளைக் கண்காணித்து வரும் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கியதில் இரு மீனவர் காயமடைந்தனர். இச்சம்பவம் அதிகாரிகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சேது சமுத்திர கால்வாய் திட்டத்திற்காக மாற்று வழித்தடத்தை தேர்வு செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, மன்னார் வளைகுடா, பாக்ஜல சந்தி கடல் பகுதியில் தேசிய கடல் ஆராய்ச்சி மையத்தினரால், கடல் சுற்றுச்சூழல் குறித்த ஆய்வுப்பணிகள் தொடங்கியுள்ளன.

இதற்காக கோடியக்கரை முதல் பாம்பன் வரையுள்ள கடல் பகுதியில் எட்டு இடங்களில் இரவிலும் ஒளிரும் மிதவைக் கருவிகள் நிறுவப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆய்வுக்கருவிகளை மீனவர்களின் படகுகள், கப்பல்கள் சேதப்படுத்தாமல் இருக்க மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், ஆய்வுக் கருவிகளைப் பாதுகாக்க ஒப்பந்த அடிப்படையில் மீனவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள், நடுக்கடலில் படகில் தங்கி இரவு பகலாக இதை கண்காணித்து வருகின்றனர்.

நடுக்கடலில் மிதவை ஆய்வுக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளது குறித்தும், மீனவர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளமை குறித்தும் துறைமுகத்துறை, மீன்வளத்துறை, இந்தியக் கடற்படை மற்றும் கடலோரக் காவல் படை அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாட்களாக ஆய்வுப் பணிகள் நடந்துவரும் நிலையில், கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த மீனவர்களை, இலங்கை கடற்படையினர் தாக்கிய சம்பவம் நடந்துள்ளது.

தனுஷ்கோடி அருகில், ஐந்தாம் மணல் திட்டு கடல் பகுதியில் நிறுவப்பட்டுள்ள மிதவைக்கருவியைக் கண்காணிக்கும் பணியில் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் அகஸ்டின், ரீகன் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். நடுக்கடலில் படகில் இருந்த இவர்களை, கடந்த செவ்வாயன்று அதிகாலையில் இப்பகுதியில் படகில் ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர் தாக்கினர் எனக் கூறப்படுகிறது.

நடுக்கடலில் நடந்த இச்சம்பவம் அதிகாரிகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## சிறந்த மகிழ்ச்சியான தம்பதியாக ஐஸ்வர்யா - அபிஷேக் தேர்வு



மும்பை,பெப். 19

காதலர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றில் சிறந்த மகிழ்ச்சியான தம்பதிகளாக ஐஸ்வர்யா ராயும், அபிஷேக் பச்சனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

பிரபல இணையதளம் ஒன்று பொலிவுட்டின் மகிழ்ச்சியான சிறந்த தம்பதி யார் என்ற கேள்வியுடன் ஒரு கருத்துக்கணிப்பை நடத்தியது.

இதில் 3 லட்சத்து 60 ஆயிரம் வாசகர்கள் தங்களது வாக்கைப் பதிவு செய்தனர். இதில் ஐஸ்வர்யா ராய் - அபிஷேக் பச்சன் ஜோடிதான் மகிழ்ச்சியான, சிறந்த தம்பதி என்று 32 சதவீதம் பேர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

அவர்களுக்கு அடுத்தபடியாக ஷாரூக் கான் - கௌரி ஜோடி 29 சதவீதம் வாக்குகளை பெற்றுள்ளனர்.

மூன்றாவது இடத்தை அமிதாப் பச்சன் - ஜெயா பச்சன் தம்பதியர் பெற்றுள்ளனர். அதற்கு அடுத்த இடத்தை அமீர் - கிரன் ராவ் ஜோடி பிடித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயாளரும் சாதாரண வாழ்வை தன்னம்பிக்கையுடன் அனுபவிக்க உதவுவோம்

எமது குருதியில் ''குளுக்கோஸ்'' அளவைச் சீராகப் பேணமுடியாத நிலையே நீரிழிவு நோயின் முக்கிய அம்சம் ஆகும். இந்நிலையைக் குணப்படுத்த முடியாது. ஆயினும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம்.

> 'நீரிழிவை வெற்றிகொள்வோம்'
> மாபெரும் விழிப்புணர்வு
> விழாவும் கண்காட்சியும்
> இடம் : மருத்துவபிடம் - யாழ். பல்கலைக்கழகம்
> காலம் : 21.02.2010
> பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகி
> 27.02.2010 வரை தினமும்
> காலை 8.30 மணி தொடக்கம்
> இரவு 7.30 மணி வரை

இக்கட்டுப்பாடானது உணவு, மருந்து, உடற்பயிற்சி மற்றும் மன ஆறுதல்களுக்கான பயிற்சி, எனும் முறைகளால் எட்டப்படும்.

மருந்து மூலம் கட்டுப்படுத்தல் என்பது இங்கு மருத்துவரால் வழங்கப்படும் மாத்திரைகளையோ, ஊசி மருந்தையோ (இன்சுலின்) காலக்கிரமம், அளவுநியமம் தவறாது உட்கொள்ளுதல் மூலம் அடையலாம்.

''உணவு'' மூலமான கட்டுப்படுத்தல் என்பதை ஒரு சித்திரவதை போலவோ அல்லது ''தண்டனை'' போலவோ கருதாது, நீரிழிவ நோயாளர்களும் சிறப்பான உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொண்டு சாதாரண வாழ்வை அனுபவிப்பதற்கான தன்னம்பிக்கையையும், வழிமுறைகளையும் அவர்களுக்கு இலகுவாக புரியக்கூடிய வகையில் நிகழ்த்திக் காட்டுவதே எமது கண்காட்சியின் நோக்கமாகும்.

உதாரணமாக, நீரிழிவு நோயாளி ஒருவர் அல்லது உயர் குருதி அமுக்கம், உயர் கொலஸ்ரோல் அளவுடைய நீரிழிவு நோயாளி ஒருவர் எவ்வாறு தனது காலை, மதியம், இரவு உணவு மற்றும் காலை, மாலை, இடை உணவு என்பவற்றைத் தனது விருப்பத்திற்கு ஏற்றவாறும் அதேவேளை உணவுக் கட்டுப்பாட்டு முறையை விட்டு பிறழாமலும் தயாரித்துக்கொள்ளலாம் என்பதைக் காட்டுதலைக் கூறலாம்.

இங்கே ஒருவேளை உணவை எடுத்துக்கொண்டோமானால் அதில் சராசரி மனிதனுக்குத் தேவையான மாப்பொருள், புரதம், கொழுப்பு மற்றும் நார்ப்பொருள் அடங்கியதாக இருக்க வேண்டும். அதே வேளை குருதியில் குளுக்கோஸ் அளவைப் பெரியளவில் மாற்றஞ்செய்யாத மற்றும் உயர்குருதியமுக்கம், உயர்கொலஸ்ரோல் என்பவற்றிற்குப் பங்கம் விளைவிக்காத ஒரு உணவுத் தொகுதியை உண்ணவேண்டிய அவசியம் உள்ளது. ஆகவே; தொடர்பாக நீங்கள் கண்காட்சி யில் அறியக்கூடியதாக இருக்கும். அத்துடன் சலரோக நோயாளி தினசரி உண்ணக் கூடிய பழவகைகள் அவற்றின் அளவுகளை நீங்கள் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கும்.

### செய்முறை அட்டவணை

நீரிழிவு நோயாளர்கள் உண்ணக்கூடிய தானியவகைகள், கடலை வகைகள் எவ்வாறு எமது அன்றாட உணவுகளுடன் சேர்த்துக்கொள்ளலாம் என்பது தொடர்பான விளக்கங்களும் இங்கு வழங்கப்படும். நீங்கள் விரும்பினால் அவ்வுணவிற்கான செய்முறை அட்டவணையையும் பெற்றுக்கொள்ளலாம்.

அதேபோல் கீரைவகைகள் பற்றியும் நீங்கள் அறிந்து கொள்ளலாம். மாணவர்களுக்குப் பயனுள்ள வகையில் உணவுப் பொருள்களில் போசனைக்கூறுகள் பற்றிய தெளிவான விளக்கமும் இங்கு தரப்படும்.

இக்கண்காட்சியில் கலந்துகொள்ளும் மக்கள் நீரிழிவு நோயாளருக்கான உணவு தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள விரும்பினால் உணவுக் கட்டுப்பாட்டு நிபுணர்களால் (Dictician) வழங்கப்படும் குழுநிலை கலந்துரையாடல்களிலும் பங்கு பற்ற வாய்ப்பளிக்கப்படும்.

இக்கண்காட்சி மூலம் நீரிழிவை ஒரு ''சுமை''யாக நினைக்காமல் சவாலாக எண்ணி வெற்றிகொள்ளும் உளப் பாங்கை மக்கள் பெறுவார்கள் என நம்புகிறோம்.

## அதனை இலகுவாகப் புரியவைக்கும் ''நீரிழிவை வெற்றிகொள்வோம்'' கண்காட்சி

## நீரிழிவு நோயாளருக்கான சேவையை சமூக மட்டத்தில் பிரவலாக்க விழிப்புக் குழுக்கள்



வைத்திய நிபுணர் எஸ்.சிவன்சுதன்

யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது நீரிழிவு நேயாளர்களின் நன்மை கருதி அதற்கான தனிப்பிரிவு அமைக் கப்பட்டுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவு யாழ்.மாவட்டத்திலுள்ள சகல நீரிழிவு நோயாளர் களுக்குமான சிகிச்சைகளை ஒருமுகப்படுத்தும் மையமாக விளங்குகிறது.

இந்த நிலையத்தில் நீரிழிவு நோயாளர்களின் பூரண விவரங்களையும் கணனி மயப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையத்தின் சேவையினை யாழ்.போதனா வைத்தியசாலையில் மட்டுப்படுத்த மால் சமூக மட்டத்துக்கும் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதற்காக பிரதேசங்கள் தோறும் நீரிழிவு விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இடம் பெறவிருக்கும் நீரிழிவு விழிப்புணர்வு நிகழ்வில் இதற்குரிய ஏற்பாடுகள் தொடங்க இருக்கின்றன. இந்த விழிப்புக் குழுக்களில் பங்கு பற்ற விரும்புபவர்கள், மருத்துவபீடத்தில் நடைபெறும் விழிப்புணர்வு விழாவின் போது தமது பெயர் விவரங்களை பதிவு செய்து கொள்ள முடியும்.

இந்தக் குழுக்கள் தத்தமது பிரதேசத்திலுள்ள நீரிழிவு நோயாளருடன் தொடர்பை ஏற்படுத்தி அவர்களின் கவனிப்பு முன்னேற்றமடைய உதவுமுடியும்.

இந்தக் குழுவினருக்கு போதிய பயிற்சிகள் வழங்கப்படும். அதன் மூலம் அவர்கள் சமூக மட்டத்துக்கு எடுத்துச் சென்று விழிப்புணர்வு நடவடிக்கையிலும் நீரிழிவு நோயாளிகளுக்கான கவனிப்பு நடவடிக்கையிலும் ஈடுபடுவார்கள். மருத்துவபீடத்தில் நடைபெற விருக்கும் கண்காட்சியில் பல்வேறுபட்ட பயன்தரும் அம்சங்கள் உள்ளடங்கியிருப்பதனால் அனைவரும் தவறாது நிகழ்விற்கு வருகை தந்து பயனடைந்து கொள்ளுமாறு கேட்கிறேன்.

> யாழ்.மருத்துவ பீடத்தில் நடைபெறவுள்ள 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' கண்காட்சி தொடர்பான நிகழ்வுகள் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் சிவன்சுதன், நீரிழிவு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.பரமேஸ்வரன் மற்றும் நோயாளர்கள் உதயனுக்கு வழங்கிய நேர்காணலின் தொகுப்பு இங்கே:

## பயன்தரு விழிப்புணர்வுக் கண்காட்சியை அனைவரும் பார்த்துப் பயன்பெறவேண்டும்



வைத்திய கலாநிதி இ.பரமேஸ்வரன்

யாழ்.மாவட்டத்தில் தற்போது நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை விகிதம் அதிகரித்து வருகிறது. அத்துடன் நீரிழிவு தொடர்பான போதிய விளக்கமின்மை மக்களிடம் இருக்கின்றது. இந்த இரு விடயங்களை அடிப்படையாக வைத்தே யாழ் வைத்திய சாலையில் நீரிழிவு சிகிச்சைக்கு எனத் தனி அலகு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது யாழ்.மக்களுக்கு ஒரு வரப்பிரசாத மாக இருக்கும்.

### நீண்டகால பாதக விளைவுகள்

நீரிழிவு நோயாளிகளுக்கு நீண்ட காலப்போக்கில் ஏற்படும் பாதக விளைவுகளில் கண் பாதிப்பும் ஒன்றாகும். கண்ணைப் படம் பிடித்து பார்க்கும் கருவி மூலம் பாதகமான விளைவு கண்டறியப்படுகிறது. தேவையேற்படின் கண் வைத்தியரினால் பார்வையிடப்பட்டு அவர்களுக்கு மேலதிக சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

மேலும் உணவு சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகிறது.

மக்களிடையே மேலதிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் பல தரப்பட்ட மக்களும் பார்வையிடக் கூடிய வகையில் நீரிழிவு விழிப்புணர்வு கண்காட்சியை யாழ் போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவும், யாழ் மருத்துவபீடமும் பொது வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்த விருக்கின்றன.

இதில், ஆரம்ப நிகழ்வாக நீரிழிவு தொடர்பான நூல் வெளியீடும் மன ஆறுதலுக்கான இறுவெட்டு வெளியீடும் , கலை நிகழ்வுகளுடனும் அமர்வுகள் இடம் பெறவிருக்கின்றன.

இவற்றில் பிரதானமாக, நீரிழிவு வகைகள் உடற்பயிற்சிக்கான விளக்கங்கள், உணவுக் கட்டுப்பாடு தொடர்பான அறிவுறுத்தல்கள், குருதிப் பரிசோதனையும் நோயை இனங்காணலும், நீரிழிவு நோயாளிக்கு நீண்ட, குறுகிய காலத்தில் ஏற்படும் பாதகமான விளைவுகள், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏற்படும் நீரிழிவு தொடர்பான விளக்கங்கள், மன ஆற்றுப்படுத்தலும் பயிற்சிகளும், வழங்கப்படவிருக்கின்றன.

அத்துடன், நீரிழிவு தொடர்பான அறிவுசார் போட்டிப் பரீட்சை, சான்றிதழ் வழங்கல் நிகழ்வு மற்றும் நீரிழிவு சம்பந்தமாக மேலதிக ஆலோசனை வழங்குதல் ஆகியன உண்டு. மிகவும் பயன்தரும் இந்த விழிப்புணர்வு நிகழ்வில் மக்கள் அனைவரும் பங்கேற்று நன்மையடைந்து கொள்ள வேண்டும்.

## அன்புடன் ஆலோசனை வழங்குகின்றார்கள் வைத்தியர்கள்



யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரியிலுள்ள நீரிழிவு சிகிச்சைப்பிரிவு எங்களுக்கு மிகுந்த பயனுடையதாக இருக்கின்றது. இங்கு நவீன உபகரணங்கள் மூலம் நோயாளர்களைப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கின்றனர். நீரிழிவு நோயாளிகளுக்கு கண் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதால் நவீன கருவி மூலம் கண்களை சோதனை செய்கின்றனர். எதை எப்போது எவ்வளவு சாப்பிட வேண்டும் என ஆலோச னைகள் வழங்குகின்றனர். மருந்து உட்கொள்ளாது தவிர்ப்பதனால் ஏற்படும் மோசமான விளைவுகள் குறித்து விளங்கப்படுத்தினார்கள்.

நீரிழிவு பிரிவில் 'சிடி' மூலம் பல விடயங்களை படங்களாக காட்டி எம்மை எச்சரித்தனர்.

மேலும் இரத்தப்பரிசோதனை எந்தக் காலப்பகுதியில் செய்ய வேண்டும் எனவும் இரத்தத்திலுள்ள இனிப்புச் சத்து (குளுக்கோஸ்) அளவு தொடர்பாகவும் எமக்கு அறிவுறுத்தல்களை வழங்கினர். இங்கு சிகிச்சை வழங்கும் வைத்தியர்கள் மிக அன்பாக எம்மை அணுகி ஆலோசனைகளையும், ஆறுதல்களையும் வழங்குகின்றனர்.

**க.சிவலிங்கம் (நோயாளி)**
**ஒட்டுமடம்**

## குழுக் கலந்துரையாடல்கள் வித்தியாசமான அனுபவங்களைத் தந்தன

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் தற்போது நீரிழிவு நோயாளிகளுக்கு எனத் தனிப் பிரிவு ஆரம்பித்திருப்பது என் போன்ற நோயாளர்களுக்கு மிகவும் பயன்படும்.

நீரிழிவு நோய் இருக்கும் என நினைப்பவர்கள் அங்கு சென்று சோதிக்க ஏற்ற இடமாக இருக்கின்றது. கண்களைப் பரிசோதனை செய்தார்கள். கை, கால் விறைப்பு தொடர்பாகவும் சோதித் தனர். பாதங்களை எவ்வாறு கவனிப்பது குறித்தும், கவனிக்காவிடின் ஏற்படும் பாதக விளைவுகள் குறித்தும் விளக்கினார்கள்.

நீரிழிவு நோயாளிகளான எம்மை குழுவாக பிரித்துக் கலந்துரையாடுவதற்கு ஒழுங்குகள் செய்து தந்தனர். இது எமக்கு வித்தியாசமான அணுகுமுறையாக இருந்தது.

இந்த கலந்துரையாடலின் மூலம் ஒவ்வொரு நோயாளியினதும் தன்மைகள் குறித்து அறிய முடிந்தது. அனேக சந்தர்ப்பங்களில் இது எனக்கு ஆறுதல் அளிப்பதாகவும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைந்தது.

இந்தச் சிகிச்சைப் பிரிவின் மூலம் அனைவரும் பயனடைய வேண்டும்.

**திருமதி சிறிஜெயா பேரின்பநாதன்**
**(நோயாளி) கோண்டாவில்.**

தொகுப்பு: உமா.

யாழ்.மருத்துவ பீடம் சென்று "நீரிழிவை வெற்றிகொள்வோம்"
கண்காட்சியை தவறாது பார்த்துப் பயனடையுங்கள்

ஊடக அனுசரணை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UK இல் கல்வி வாய்ப்பு

கொழும்பில் பிரபல்யமான, நம்பிக்கையான, பல வருடகால அனுபவமிக்க நல்லதொரு செயற்திறன் கொண்ட GBS (Greenwich Business School) நிறுவனத்தினர் மாணவர்களின் நலன் கருதி யாழில் தமது கல்வி நிலையத்தை ஆரம்பித்துள்ளனர்.

அனைவரும் வருக! நல்பயன் பெறுக! (95646)

**Greenwich Business School**

இல. 19, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P.: 0773537378, 021 3734747



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட வடபிராந்திய முகாமையாளராக பதவி உயர்வு பெற்று யாழ்.நகர் தனிலே தனது உன்னதமான சேவையை வழங்கவுள்ள

**உயர்திரு. திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்**

அவர்களை மனதாரப்பாராட்டி வாழ்த்துகின்றோம். கடந்த பதினாறு வருடங்கள் யாழ்ப்பாண வங்கியில் முகாமையாளராகவும், சிரேஷ்ட முகாமையாளராகவும் கடமையாற்றி மக்களுக்கும், பாதுகாப்பு சேவை நிறுவனத்தினராகிய எமக்கும் தனது நலன் பாராது எந்த வேளையிலும் உதவிகளும், ஆலோசனைகளும் வழங்கி பாதுகாப்புச் சேவையில் முன்னோடியாகத் திகழவைத்த சிரேஷ்ட வடபிராந்திய முகாமையாளர் திரு. தி.ஜெயராஜசிங்கம் அவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று தனது குடும்பத்தினருடன் நீடூழி வாழ வாழ்த்துவதோடு அவர் மேலும் பல உயர் பதவிகள் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

651/12, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (95633)

பணிப்பாளர், மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை.



## மனமுவந்து பாராட்டுகிறோம்



யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதியும் மாணவர் மனங்களை வென்றவருமாகிய

**திருவாளர்**

**கந்தையா தேவராஜா**

அவர்கள் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றதையிட்டு மாணவர்களாகிய நாங்கள் மனமுவந்து பாராட்டுகின்றோம். அத்துடன் மேன்மேலும் அவரது உயர்வுக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பீட மாணவர்கள்,**
**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

(95638)



## லாலா

**சலவைப்பவுடர்**

யாழ்.குடாநாட்டில் முதல் முதலாக மிகவும் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது.

எமது அன்பான மாணவச்செல்வங்களே! உள்ளூர் தயாரிப்புக்களுக்கு முன்னுரிமை கொடுங்கள்.

லாலா சோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.



## VACANCY

### வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் ஓர் தனியார் நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

**01. Office Co-ordinator**

40-55 வயதுக்குட்பட்ட ஆங்கிலக் கடித தொடர்பு கொள்ளக்கூடிய E-Mail, Accounts அறிவுடையவர் தேவை.

**02. Marketing Co-ordinator**

30வயதுக்கு குறைந்த, இளம்பட்டதாரி (BBM) விரும்பத்தக்கது.

**03. Receptionist**

20-25 இடைப்பட்ட A/L சித்தியடைந்த, நல்ல ஆங்கில அறிவுடைய ஒருவர் விரும்பத்தக்கது.

**04. Office Boy**

18-23 வயதுக்கிடைப்பட்ட O/L படித்த, வெளிவேலைகள் செய்யக்கூடிய ஒருவர் தேவை.

**Call : 0777-767818**
**077-3900161**


## கசிப்பு வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு அபராதமும் சிறையும்

யாழ்ப்பாணம், பெப். 19

கசிப்பு வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதமும் ஆறு மாத கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஏற்கனவே இவ்வாறான வழங்குத் தொடர்பாக குற்றம் அறவிடப்பட்டதை பொலிஸார் நீதிவானின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இந்த நபருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதமும் ஆறு மாத கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஓ-207)

## குடைச் சுவாமிகள் குருபூசை

கோண்டாவில் குருதேவர் கந்தையா சுவாமிகளின் (குடைச் சுவாமிகள்) 32 ஆவது வருடாந்தக் குரு பூசை நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள சுவாமிகளின் சமாதியில் இடம்பெறவுள்ளது.

குருதேவரின் அடியார்களை இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-1)


## மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை

MSS — WE SERVE TO PROTECT

வெற்றிடங்கள் : கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள்)

தகைமை : க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட இரு தடவைகளிற்கு மேற்படாதவாறு 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும். உயரம் 5' 4''

வயதெல்லை : 26 வயதுக்கு மேற்பட்டோர்

நேர்முகப்பரீட்சை : 26.02.2010 அன்று மு.ப. 10 மணிக்கு 651/12, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறும்.

ஆவணங்கள் : கிராம சேவகரின் நற்சான்றுப்பத்திரம் (6 மாதத்திற்குட்பட்டது)
பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்
தேசிய அடையாள அட்டை
உறவினரல்லாத இருவரின் நற்சான்றுப் பத்திரம்

மேற்கூறப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதியுடனும் போட்டோ பிரதியுடனும் வருகை தரவும்.

651/12, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (95634) பணிப்பாளர்.



## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 | 08 |
| 11 | 03 |
| 1938 | 2003 |

**அமரர் வேலுப்பிள்ளை சின்னத்துரை**

(கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்)

திதி: 19.02.2010

ஏழை பங்காளனே! ஏழ்மையின் வடிவமே
ஏழாண்டுகளாய் உங்களைப் பிரிந்து
அல்லற்பட்டு ஆற்றாது அழுது அரற்றி
சொல்லொணாத்துன்பத்தில் துவழ்கின்றோம்.
ஏழையாய எம்மை யெல்லாம் ஏற்றிவைத்த ஏந்தலே
ஏழேழு பிறப்புப் பிறந்திடினும் உந்தன் அரவணைப்பில்
வாழும் வகை செய்யும் வண்ணம் படைத்தளிக்குமாறு
வாழ்வளிப்பான் தாம் பணிவோம்.

வாதரவத்தை, புத்தூர். (95636)

உங்கள் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கும் இ.தெய்வேந்திரம்.



## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



அல்வாய் மாலிசந்தி ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார்

**பிரம்மஸ்ரீ**
**தே.ரவீந்திரக்குருக்கள்**

வரதராஜ விநாயகரின் சிவாச்சாரியாராக இருந்து எங்கள் குடும்பத்தின் தலைமகனாகப் பிறந்து வாழ்ந்து எம்மைக் கலங்க வைத்து மறைந்த எங்கள் அன்புச் சகோதரனுக்கு எமது கண்ணீர்க் காணிக்கை.

**சகோதரர்கள், மாலிசந்தி, அல்வாய்.**



## மரண அறிவித்தல்

**திருமதி லலிதா அரியநாயகம்**

(முன்னாள் ஆசிரியை, மெதடிஸ்த மகளிர் உயர்தரப்பாடசாலை பருத்தித்துறை, திரு இருதயக்கல்லூரி, கரவெட்டி)



திருமதி லலிதா அரியநாயகம் (18.02.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஜோர்ஜ் அரியநாயகத்தின் (இளைப்பாறிய யாழ்.மேல் நீதிமன்ற தலைமை லிகிதர்) அன்பு மனைவியாவார்.

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை (20.02.2010) சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இரவது ஆன்ம சாந்திக்காக இரங்கல் திருப் பலி நிறைவேற்றப்பட்டு பூதவுடல் கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. (C/564989)

தகவல்: கணவர், பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிலடி கொடுத்து—தொடரைச் சமன்படுத்தி முதலிடத்தையும் தக்கவைத்தது இந்தியா!



தென்னாபிரிக்காவுக்கு எதிராகக் கல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி திரில் வெற்றிபெற்று - தொடரைச் சமனிலைப்படுத்தி - தரவரிசையில் முதலிடத்தையும் தக்கவைத்துக் கொண்டது.

முன்னதாக தென்னாபிரிக்க அணி, தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 296 ஓட்டங்களைச் சேர்த்தது.

தொடர்ந்து தனது இன்னிங்ஸை ஆடிய இந்திய அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 643 ஓட்டங்களைக் குவித்த நிலையில் தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

பின்னர் 341 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில், 3ஆவது நாளிலேயே தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, நேற்றுமுன்தினம் (நான்காம் நாள்) சீரற்ற காலநிலை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 115 ஓட்டங்களைப் பெற்றிருந்தது

நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி மிகவும் நிதானமாக ஆடத் தொடங்கியது. இறுதிவரை அதாவது நேற்று ஆட்ட நேரம் முடிவடைவதற்குசிறிது நேரம் இருக்கும் வரையில் போராடிக் கொண்டிருந்தது.

முந்தையநாள் களத்தில் இருந்த ஆம்லா - பிறின்ஸ் ஆகியோர் நேற்றுத் தமது இன்னிங்ஸைத் தொடர்ந்தனர். பிறின்ஸ் 23 ஓட்டங்களை பெற்றவேளை ஆட்டமிழந்தார். பின்னர்வந்த டி வில்லியர்ஸ் (3), டுமினி (6), ஸ்ரைன் (1), பேர்னல் (22), ஹரிஸ் (4) ஆகியோர் சராசரி இடைவெளியில் வெளியேறினார்.

எனினும், மறுமுனையில் பொறுப்பாக ஆடிக்கொண்டிருந்தார் ஆம்லா, இவர் தென்னாரிக்க அணிக்காகத் தன்னந்தனியாகப் போராடிக்கொண்டிருந்தார்.

கடைசி விக்கெட்டுக்காக இவருடன் இணைந்த மோர்கல் நிதானமாக நின்று ஆடிக்கொண்டிருந்தார்.

எனினும், ஆட்டநேரம் முடிவவதற்கு சொற்பவேளை இருக்கும்போது அவர் (12) ஆட்டமிழந்தார்.

இதனால், தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 289 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

அத்துடன், ஓர் இன்னிங்ஸ் மற்றும் 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இறுதிவரை போராடிய ஆம்லா ஆட்டமிழக்காமல் 127 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், ஹார்பஜன் சிங் அசத்தலாக 5 விக்கெட்டுகளை அள்ளினார். எஞ்சிய விக்கெட்டுகளை மிஷ்ரா (3), இஷாந் சர்மா (2) ஆகியோர் கைப்பற்றினர்.

ஆட்டநாயகன் - தொடர்நாயகன் விருதுகளை தென்னாபிரிக்க வீரர் ஆம்லா பெற்றுக்கொண்டார்.

இந்த வெற்றியின் மூலம் முதலாவதுபோட்டியில் தாம் வாங்கிக் கட்டிய தோல்விக்கு, தகுந்த பதிலடிகொடுத்தது இந்திய அணி. அத்துடன் தொடரை 1-1 என்ற கணக்கில் சமனிலையில் முடித்தமையால் தொடர்ந்தும் டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தையும் தக்கவைத்துக் கொண்டது.




# தோல்வி நோக்கி நகர்கிறது பங்களாதேஷ்!

நியூஸிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் 404 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கோடு நேற்றுத் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி, நேற்றைய ஆட்டநேர முடிவின் போது 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெறும் 88 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியின் விளிம்பில் உள்ளது.

முன்னதாக தனது முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி, 553 ஓட்டங்களையும் பங்களாதேஷ் அணி 400 ஓட்டங்களையும் பெற்றிருந்தன.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கி ஆடிய நியூஸிலாந்து அணி, மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது, ஒரு விக்கெட் இழப்புக்கு 9 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் இன்ரோஸ் (5), இங்ராம் (2) ஆகியோர் இருந்தனர்.

தொடர்ந்து தனது இன்னிங்ஸை நேற்றுத் தொடர்ந்த நியூஸிலாந்து அணி, 52 ஓட்டங்களைப் பெற்றவேளை இங்ராமை (13) இழந்தது.

அவரைத் தொடர்ந்து வந்த ரெய்லர், மறுமுனையில் நின்ற இன்ரோஸுடன் ஜோடி சேர்ந்து சிறப்பாக ஆடினார். அரைச்சதம் கடந்து, இவர் (51) ஆட்டமிழந்து சென்றார். அவரைத் தொடர்ந்து இன்ரோஸ் 89 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த அணித்தலைவர் விற்றோரியும் (13) சிறிது நேரத்தில் ஆட்டமிழந்து சென்றார்.

இறுதியாக நியூஸிலாந்து அணி விக்கெட்டுகள் இழப்புக்கு 258 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

குப்தில் 56 ஓட்டங்களுடனும் மைக்கலம் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

பங்களாதேஷ் அணி சார்பாக முகமதுல்லா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பின்னர் 404 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கோடு களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு, ஆரம்பம் ஓரளவு சிறப்பாக அமைந்திருந்தாலும் பின்னர் சற்றுச் சறுக்கல் நிலையே காணப்பட்டது.

ஆரம்ப வீரராகக் களமிறங்கிய தமிம் இக்பால் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, பின்னர்வந்த சித்திக் (8), அஹ்மட் (8), மொஹமட் அஷ்ரப்புல் (2) ஆகியோர் சிறிய இடைவெளியிலேயே ஆட்டமிழந்து சென்றனர்.

மறுமுனையில் சிறப்பாக-பொறுமையாக ஆடிக்கொண்டிருந்த கெய்ஸ் 29 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்து சென்றார்.

இறுதியில் நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது பங்களாதேஷ் அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 88 ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான நிலையில் உள்ளது.

களத்தில் சஹிப் அல் ஹசன் (0), ராஹிம் (10) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், விற்றோரி 2 விக்கெட்டுகளையும், மார்டின், படேல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்றைய நிலவரப்படி பங்களாதேஷ் அணி, நியூஸிலாந்தை விட 316 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளது. இன்னும் கைவசம் 5 விக்கெட்டுகள் மாத்திரமே உள்ள நிலையில், இன்று கடைசி நாள் என்பதால் ஒருநாள் முழுவதும் பங்களாதேஷ் அணி நிலைத்து நின்று ஆடுவதோ அல்லது வெற்றி நோக்கி நகர்வதோ பெரும்பாலும் இயலாத காரியமே. அந்த வகையில் பங்களாதேஷ் அணி தோல்வி நோக்கியே நகர்ந்துகொண்டிருக்கிறது.

இன்று ஆட்டத்தின் இறுதி மற்றும் 5ஆம் நாள் ஆகும்.

# கூட்டணியைப் பொறுப்புள்ளவர்களிடம் ஒப்படைக்க ஆனந்தசங்கரி தயாராம்!

கொழும்பு, பெப். 19



தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுப் புள்ளவர்களிடம் கையளித்து விட்டுத் தாம் ஒதுங்குவதற்கும் கூடத் தயாராக இருக்கின்றார் என அக் கட்சியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அறிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

வடக்கிலும், கிழக்கிலும் மட்டுமன்றி மேற்கிலும், தெற்கிலும், மத்தியிலும் வாழ்கின்ற தமிழ்மக்களும், ஏனைய தமிழ்பேசும் மக்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய அவசியம் இன்று காலத்தின் கட்டாயமாகும். அரசுடன் முரண்படுவதற்காக அன்றி, ஏனைய இன மக்களைப் பாதிக்காத வகையில் அனைத்துத் தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வைக் காண்பதற்காகவே இது அவசியமாகின்றது. இதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை.

என்னையும், தமிழர் விடுதலைக் கூட்டணியையும் பொறுத்தவரையில் சமாதானத்தையும், சமத்துவத்தையும் அனைவருக்கும் பெற்றுக்கொடுப்பதற்காக ஒரு பொதுத் திட்டத்திற்கமைய அனைவருடனும் இணைந்து செயற்பட நாம் தயாராகவுள்ளோம். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் மறைந்த தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் ஆகியோரின் ஆசீர்வாதத்தோடும், ஆதரவோடும் 'ஈழத்து காந்தி' என அனைவராலும் வாஞ்சையோடு அழைக்கப்பட்ட எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தினால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து செயற்படுவதை எதிர்ப்பதற்கு நியாயமான காரணம் எதுவும் இருக்க முடியாது.

தமிழ்க் காங்கிரஸும், எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தினால் உருவாக்கப்பட்ட தமிழரசுக் கட்சியும் இணைந்து உருவாக்கப்பட்டதே தமிழர் விடுதலைக் கூட்டணியாகும். இந்த இரு கட்சிகளின் அனைத்துத் தலைவர்களும், தொண்டர்களும் தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட உதயசூரியன் சின்னத்தைக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து கொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பித்த காலம் தொடக்கம் மு.திருச்செல்வம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜி.ஜி.பொன்னம்பலம், த.வி.கூட்டணியின் செயலாளர் நாயகமும், அன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான அ.அமிர்தலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வெ.யோகேஸ்வரன், மு.சிவசிதம்பரம், தா.திருநாவுக்கரசு, அ.தங்கதுரை, க.துரைரெட்ணம், கே.இராசலிங்கம், வீ.என்.நவரட்ணம், எஸ்.கதிரவேற்பிள்ளை, மு.ஆலாலசுந்தரம், வீ.தர்மலிங்கம் மற்றும் முன்னாள் யாழ். மேயர்களான திருமதி சரோஜினி யோகேஸ்வரன், பொன். சிவபாலன் இன்னும் பலர் உள்ளூரிலும், வெளிநாட்டிலும் இறுதிக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்ட வேளையில் புனிதமானதும், அனைத்து தமிழ்மக்களாலும் மதிக்கப் பட்டதுமான உதயசூரியன் கொடியினால் போர்த்தப்பட்டே எடுத்துச் செல்லப்பட்டனர்.

உதயசூரியன் சின்னத்தைக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பதிலாக வீட்டுச் சின்னத்தைக் கொண்ட தமிழரசுக் கட்சியை மீள இயங்கவைக்க எவருக்கும் அவசியமும், தேவையும் இருக்கவில்லை. தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தமிழரசுக் கட்சியைச் செயலிழக்கச் செய்து வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி வளர்த்தெடுத்தார். 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்கள் கூடுதலாக உள்ள தொகுதிகளில் - 500 வாக்குகளால் தோல்வியடைந்த ஒரு தொகுதியைத் தவிர ஏனைய 18 தொகுதிகளிலும் வெற்றியீட்டியது.

மறைந்த தலைவர்கள், ஆரம்பகால உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் தமிழர் விடுதலைக் கூட்டணியை, சமாதானத்தையும் அஹிம்சையையும் பேணிக் காப்பதற்காகத் தொடர்ந்து வரும் பல தலைமுறைகளுக்குப் பரம்பரைச் சொத்தாக விட்டுச் சென்றுள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வா தான் உருவாக்கி செயலிழக்க வைத்த தமிழரசுக் கட்சியை என்றாவது ஒருநாள், தமிழ் மக்களின் உரிமைகளைச் சாத்வீக முறையில் வென்றெடுக்க என வேறு அரசியல் கட்சிகளுடன் இணைந்து தான் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியை அழிப்பதற்கு யாரும் உபயோகிப்பார்கள் என்று கனவில் கூட ஒதுபோதும் நினைத்திருக்கமாட்டார்.

என்னைப் பொறுத்தவரையில் நாட்டுக்கும், எனது மக்களுக்கும் கட்சியின் நலனுக்காகத் தம் உயிரை அர்ப்பணித்த பல்வேறு தலைவர்களுக்கும் எனது கடமையைச் செய்துவிட்டேன். அஹிம்சைக்குக் கட்டுப்பட்ட அனைவரும் மீண்டும் கட்சியில் இணைவதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கதவுகள் என்றும் பூட்டப்பட்டு இருக்காது.

இக்கட்சியைக் காப்பாற்றித் தலைவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற பல்வேறு கஷ்டங்கள், இடையூறுகளை நாம் எதிர்நோக்கவேண்டியிருந்தது.

கட்சியில் நான் தொடர்ந்து செயல்படுவது எவருக்கேனும் இடைஞ்சலாக இருக்குமேயானால், இக்கட்சியை பொறுப்புள்ளவர்களிடம் கையளித்துவிட்டு ஒதுங்கத் தயாராக இருக்கின்றேன். தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியத்துக்காக உழைக்கக்கூடிய இளைஞர்களை ஆயிரக் கணக்கில் கட்சியுடன் இணைந்து பேராசையும், பேராவலும் கொண்ட அரசியல்வாதிகளிடமிருந்து தமிழ்மக்களைக் காப்பாற்றப் பகிரங்கமாக அழைக்கின்றேன். கட்சியின் கொள்கைகளுக்கு விசுவாசமாக உழைக்கும் அனைவரும் எம்முடன் இணையலாம் என்றும் கூறிவைக்க விரும்புகின்றேன்'' - என்று உள்ளது.

## நீதிமன்ற ஏல விற்பனை மார்ச் 20 இற்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப்.19

சாவகச்சேரி நீதிமன்றில் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த ஏல விற்பனை தவிர்க்க முடியாத காரணங்களால் மார்ச் 20 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ள தாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

(ஓ-207)

# பேரியலின் 'நு ஆ' கட்சியும் சு.கவுக்குள் ஐக்கியமானது!

## நந்தன குணதிலகவும் அக்கட்சியுடன் இணைவு

கொழும்பு, பெப். 19

முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணையத் தீர்மானித்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

தேசிய ஐக்கிய முன்னணி முன்னர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டு வந்தது.

இதனிடையே பேரியல் அஷ்ரப் தலைமையிலான உயர்மட்டக் குழுவுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றதாக ஜனாதிபதிச் செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, தேசிய சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் நந்தன குணதிலகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.

ஜனாதிபதி அவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் களுத்துறை மாவட்ட அமைப்பாளராக நியமித்துள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டது.

முன்னாள் ஜே.வி.பி. பிரமுகரான நந்தன குணதிலக அக்கட்சியிலிருந்து வெளியேறிய பின்னர் விமல் வீரவன்ஸவுடன் சேர்ந்து தேசிய சுதந்திர முன்னணியை உருவாக்கி அதன் பொதுச் செயலாளராகப் பணியாற்றி வந்திருந்தார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப் பெண் ஒருவர் உடன் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
தொடர்பு: 0213734690 (95640)





## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

அதிபர் ஒறேற்றர் சி.சுப்பிரமணியம் அவர்களின்

## 16ஆவது ஆண்டு நினைவுப்பேருரை

தலைவர்: திரு. ஆறு.திருமுருகன் (முதல்வர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
காலம் : இன்று (19.02.2010) வெள்ளிக்கிழமை பி.ப.1.30மணி
இடம் : கல்லூரி மண்டபம்
நினைவுப்பேருரை: வைத்தியகலாநிதி கதிரவேலு புவனேந்திரன்
(சிரேஷ்ட வைத்திய நிபுணர், சிங்கப்பூர் பொது வைத்தியசாலை)
விடயம் "விஞ்ஞானத்தில் தூக்கம் (நித்திரை) பற்றிய சிந்தனை"
நிறைவுரை: திரு சி.மகேந்திரன் (உப அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ஸ்கந்தவரோதயக்கல்லூரி.
உயர்தர விஞ்ஞான மன்றம்

ஒறேற்றர் குடும்ப உறுப்பினர்கள். (C/564986)


## வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் கற்குவியல் மீது ஏறிப்பாய்ந்தது

*அதல் பயணித்த இருவரும் தூக்கி விசப்பட்டுக் காயம்*

யாழ்ப்பாணம், பெப்.18

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியருகே குவிக்கப்பட்டிருந்த கற்குவியல் மீது ஏறியதில் அதில் பயணித்த இருவரும் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் சாவகச்சேரி, நுணாவிலில் இடம் பெற்றது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த கல்வயலைச் சேர்ந்த வ.புகனேந்திரா (வயது 35) வீ. தர்மபுத்திரா (வயது 41) ஆகிய இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் கடந்த இரண்டு, மூன்று மாதங்களில் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்று கட்டுப்பாட்டை இழந்ததால் நேர்ந்த விபத்துகள் பெருமளவில் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறான விபத்துக்களில் சிக்கிய பலர் கால் முறிவு, கை முறிவு போன்ற அனர்த்தங்களுக்கு இலக்காகியுள்ளனர். உயிரிழப்புச் சம்பவங்களும் கூட நிகழ்ந்துள்ளன. (ஒ-207)


## மரண அறிவித்தல்

*சம்பந்தமூர்த்தி சீதாலட்சுமி (காட்டர் அன்ரி)*

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சம்பந்தமூர்த்தி சீதாலட்சுமி (17.02.2010) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சம்பந்தமூர்த்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகதாஸ் (ஆசிரியர்), தங்கம்மா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செந்தில்மலர், இராகுலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் பிருந்தா, வைஸ்ணவி (லண்டன்), பைரவி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7/7, 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (95643)

தகவல்
தங்கம்மா (மகள்)


## ஆசிரியர்களுக்கான வழிகாட்டி நூல்

யாழ்ப்பாணம், பெப்.19

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான அறிவுரைப்பு வழிகாட்டி நூல்கள் - 2010, இன்றும் எதிர்வரும் திங்கட்கிழமையும் விநியோகிக்கப்படவுள்ளன.

வகை III பாடசாலைகளுக்கு இன்றும், ஏனைய வகைப் பாடசாலைகளுக்கு திங்கட்கிழமையும் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் விநியோகிக்கப்படவுள்ளதாக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் அறிவித்துள்ளார். (ஒ-207)

## வீரசிங்கம் ம.வி.க்கு 3 மாடிக் கட்டடம்

யாழ்ப்பாணம், பெப். 18

சாவகச்சேரி மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலத்திற்கு மூன்று மாடிக் கட்டடம் விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

வித்தியாலயத்தில் மாணவர் எண்ணிக்கைக் கேற்ப கட்டட வசதிகள் இல்லாததால் 15 வகுப்புக்கள் தனியார் வீடுகளிலும் சங்கீதம், நடனம் போன்ற வகுப்புக்கள் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திலும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-20)

## மாற்று ஆற்றலுடையோருக்கான காசோலைகள் வந்துள்ளன

நவாலி, பெப்.18

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுயதொழில் முயற்சிக் கடனுக்கு விண்ணப்பம் செய்த மாற்று ஆற்றலுடையோருக்கான கொடுப்பணவுக்கான காசோலைகள் சமூக சேவைகள் திணைக்களத்தினால் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் செயலகத்திற்கு வந்து காசோலைகளைப் பெற்றுச் செல்லுமாறு பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வி. அருந்தவராசா அறிவித்துள்ளார்.

க.பேரின்பநாதன்(கட்டுடை), எஸ். சிவமலர் (பண்டத்தரிப்பு), எஸ். ஜெயகுமாரி (கட்டுடை), சி.ஜெபசிங்கம் (கட்டுடை) தி.கிருஸ்ணராஜ்(நவாலி வடக்கு) ஆகியோருக்கே காசோலைகள் வந்துள்ளன. (ஒ-100)


## SRI LANKA RED CROSS SOCIETY

***If you are proactive, highly motivated, results oriented and ready to embark on a challenging career - come join us! The world's largest humanitarian organization – The International Red Cross and Red Crescent Movement:***

| POST | QUALIFICATION & EXPERIENCE | DUTIES & RESPONSIBILITIES |
|---|---|---|
| **Volunteer Coordinator**<br><br>**05 positions**<br><br>**Based in Kurunegala/ Anuradhapura/ Polonnaruwa/ Vavuniya/ Jaffna**<br><br>**HRM - 382** | -Successful completion of GCE – A/L.<br><br>-Experience in organizing people, especially around youth planned activities.<br><br>-Previous experience as a volunteer coordinator and experience in community development work.<br><br>-Experience in small office support/ maintenance of files/ mails and general office maintenance. | • Enlist diverse representation of female and male volunteers for the RC/RC movement, ensure members are registered and membership dues are paid, and that all paper work related to membership registration is up to date and accurately entered electronically into the voluntary management database;<br>• Pay special attention to youth and youth volunteers, by working with the youth branch structure and its governance, supporting initiatives that involve young women and men in interesting, relevant activities of the branch;<br>• Coordinate and administrate volunteer involvement at the branch, division and unit levels together with the BEO and the OD Officer, to assure effectiveness and coherence with the overall branch program, the integrated program approach (IPA), and the SLRCS Five Year Development Plan (FYDP);<br>• Help BEO and OD Officer identify and propose appropriate training for volunteers, provide administrative support to this training, and monitor newly trained volunteer leaders and volunteers to assure that they are working effectively and according to SLRCS policy and guidelines;<br>• Represent SLRCS at the divisional and unit level when necessary, evaluate volunteer performance on an ongoing basis, and report to the BEO as appropriate;<br>• Support BEO and OD Officer in the preparation of monthly, quarterly, and annual activity plans for units, divisions, and for the branch, and for budget forecasting;<br>• Assist branch, division, and unit volunteers in developing proposals and presentations to generate new Income Generation Projects (IGPs) through the direct involvement of interested volunteers;<br>• Participate in monthly program progress meetings with branch governance and management, and the OD Advisor, and prepare and submit a monthly narrative report to the BEO on volunteer involved activities, including total number of volunteers, and their retention rate; |

**Applicable to all personnel:**

- Abide and work in accordance with the Red Cross and Red Crescent Fundamental Principles
- Respect the safety and dignity of all Red Cross personnel and the people, that we the Red Cross serve
- Perform all duties as required to the best of ability.

**Abilities and skills required**

**Excellent command of English - oral and written (preferred).**
**Kurunegala/ Anuradhapura and Polonnaruwa Fluency in Sinhala.**
**Vavuniya and Jaffna Fluency in Tamil.**
**Excellent Computer abilities (MS Office, Email, Internet and relevant Electronic Communications)**

Red Cross Movement is an equal opportunity employer. Only short listed applicants will be called
Please submit your applications no later than **23rd February 2010** to reach the following address:

Director General
Sri Lanka Red Cross Society
307, T.B. Jayah Mawatha,
Colombo 10.

adminpns@redcross.lk

**Please indicate the post and district applying with the reference number on the top left hand corner of the envelope.**



## காணி விற்பனைக்கு

**யாழ்.நகரின் மையப்பகுதியான கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதியில் அமைந்த கடைகளும் மற்றும் பிறவுண்வீதி, நாவலர் வீதி, கோயில் வீதியில் அமைந்துள்ள வீடும் காணியும் உடன் விற்பனைக்குண்டு.**

**தொடர்பு:**

**பழமுதிர்சோலை,**
**தர்மினி வாசா,**
**காரைநகர்.**

**கனகசபை தர்மகுலசிங்கம், A.K.அன்சன்ஸ்**
**இல.175, மின்சார நிலைய வீதி, யாழ்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் கிராமங்கள் பலவற்றில் கண்ணிவெடிகள் அகற்றும் பணி பூர்த்தி

## மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.19

கிளிநொச்சி மாவட்டம், கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவில் ஆனந்தபுரம், விவேகானந்தநகர், கணேசபுரம் ஆகிய கிராமங்களிலும்-

கண்டாவளைப் பிரதேசத்தில் குமரபுரம், உமையாள்புரம் ஆகிய கிராமங்களிலும்-

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் முல்லையடி, பளை, புலோப்பளை கிழக்கு, மேற்கு ஆகிய கிராமங்களிலும் - கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசகங்களில் மக்களை மீள்குடியேற்ற முடியும் என்று அலுவலக அதிகாரி வரதராஜா முருகதாஸ் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினால் கடந்த மூன்று மாதங்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் பணிகள் 'த ஹலோ ட்றஸ்ட்', 'டனிஸ் டிமைனிங் குறூப்' மற்றும் ஸ்ரீலங்கா இரா ணுவ பொறியியல் பிரிவைச் சேர்ந்த மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பிரிவு ஆகியவற்றினால் தொழில்நுட்பம் அற்ற மிதிவெடிகள் அகற்றல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆய்வுகள் மூலம் இப்பிரதேசங்களில் மக்களை மீள்குடியேற்றம் செய்ய முடியும் என்று மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஒ-1)

## ஆசிரிய மாணவரின் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், பெப்.19

கடந்த வருடம் நடைபெற்ற 2007/ 2008 ஆம் வருட ஆசிரிய மாணவர்களின் இறுதிப் பரீட்சை முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

பெறுபேறுகளை கலாசாலை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என்றும் பெறுபேற்றுச் சான்றிதழ்கள் விரைவில் வழங்க ஆவன செய்துள்ளோம் என்றும் கோப்பாய் கலாசாலை அதிபர் செல்விமலர் சின்னையா தெரிவித்தார். (ஒ-1)

## சிறுபான்மைத் தமிழர் மகாசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.19

நாடாளுமன்றத் தேர்தலில் பங்கபற்றுவது தொடர்பாக இறுதி முடிவு எடுப்பதற்காக அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் விசேட கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே மகாசபை எடுத்த முடிவின் பிரகாரம் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சங்கத்தின் செயலாளர் தெரி வித்தார். (ஒ-1)

## பாடசாலை உணவை உட்கொண்ட 150 மாணவர் வைத்தியசாலையில்!

### கற்பிட்டியில் சம்பவம்

கற்பிட்டி, கண்டகுழிகுடா பகுதி பாடசாலை ஒன்றில் உணவு விஷமடைந்ததால் நோய்வாய்ப்பட்ட 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் வயிற்றுவலி காரணமாக இந்த மாணவர்கள் கற்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்கள் பாடசாலையில் வழங்கப்பட்ட மதிய உணவை உண்ட பின்னர் வாந்தி, வயிற்றுவலி போன்றவற்றால் பாதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சரவைப் பேச்சாளர்களாக டலஸ் அழகப்பெரும, பீரிஸ் நியமனம்

கொழும்பு, பெப். 19

அரச ஊடகப் பேச்சாளர்களாகப் போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெருமளவும் சர்வதேச வர்த்தக அபிவிருத்தி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் அமைச்சரவையால் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டனர்.

இதுவரை ஊடகப் பேச்சாளராகவிருந்த அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா அப்பதவியை இராஜிநாமாச் செய்ததன் பின் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது தகவல் திணைக்களப் பணிப்பாளர் அனுஷ பல்பிட்ட இந்நியமனம் குறித்து அறிவித்தார்.

(அ-சி)

# பாடசாலை நூலகங்களுக்கு புத்தகங்கள்; ஆளுநர் சந்திரசிறி இன்று வழங்குவார்

## பல இடங்களில் கட்டடங்களையும் திறந்து வைப்பார்

யாழ்ப்பாணம், பெப்.19

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் நூலகங்களுக்கு புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி புத்தகங்களை வழங்க இருக்கிறார்.

இதைத் தொடர்ந்து ஒரு மணிக்கு அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் 1.30 மணிக்கு மல்லாகம் ம.வியிலும் 2 மணிக்கு ஏழாலை ம.வியிலும் 3 மணிக்கு இமையாணன் அ.த.க. பாடசாலையிலும் 3.30 மணிக்கு ஞானசாரியார் கல்லூரியிலும் 4 மணிக்கு வல்வை மகளிர் வித்தியாலயத்திலும் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடங்களை ஆளுநர் திறந்து வைப்பார்.

மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் இ.இளங்கோவனும் இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்வார். (ஒ-1)

## வவுனியா, பம்மைமடு, செட்டிக்குளத்தில் இருந்து

# பூஸா தடுப்பு முகாமுக்கு 49 பெண்கள்; மனித உரிமை அலுவலகத்தில் பட்டியல்

யாழ்ப்பாணம், பெப்.19

வவுனியா, பம்மைமடு, செட்டிக்குளம் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 49 பெண்கள், பூஸா முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலை அவர்களது உறவினர்கள் இன்று முதல் தமது அலுவலகத்தில் பார் வையிடலாம் என்று ஆணைக்குழுவின் இணைப்பாளர் க.கனகராஜா தெரிவித்தார்.

பூஸாவுக்கு அனுப்பப்பட்டவர்கள் விவரம் மாவட்ட ரீதியாக வருமாறு:-

யாழ்ப்பாணம் - 10, கிளிநொச்சி - 17, முல்லைத்தீவு - 14, மன்னார் - 4, திருகோணமலை, அம்பாறை, புத்தளம், வவுனியா - தலா ஒருவர். (ஒ-1 - 9)

## இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.19

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் அருட்தந்தை கே.சிங்கராயர் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் கரித்தாஸ் கியூடெக் இயக்குநர் அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஒ-267)

* * *

யாழ்ப்பாணம், பெப்.19

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலையின் அதிபர் ச.கணேஸ்வரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு தீவக வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஜோன்குயின்டஸ் பிரதம விருந்தினராகவும், வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு.சரவணபவானந்தன் மற்றும் செ.குரு நாதசிவம் ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகவும் கலந்துகொள்வர். (ஒ-267-288)

* * *

வடமராட்சி, பெப்.19

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் அதிபர் ச.திரவியராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக வித்தியாலய இளைப்பாறிய அதிபர் ஆ.ஜெகநாதன் கலந்துகொள்வார். (ஒ-1-236)

* * *

யாழ்ப்பாணம், பெப்.19

மண்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கே.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி கே.சிவானந்தம் கலந்து கொள்ளவிருக்கிறார். (1)

* * *

யாழ்ப்பாணம், பெப்.19

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நவரத்தினராஜா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கே.ஆர்.ராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் பொறியியலாளருமான கே.சிறிஸ்கந்தராஜா கலந்துகொள்வார். (1)

# துணிச்சலான முடிவை ஐக்கியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று தசாப்த உள்நாட்டு யுத்தத்தின் பேரழிவுகளிலிருந்தும், மீளமுடியாமல் தவிக்கும் - தடு மாறும் - தமிழ்ப்பேசும் சமூகத்தின் மீது கடந்த மாதத்திய ஜனாதிபதித் தேர்தலையடுத்து இப்போது பொதுத் தேர்தல் ஒன்றும் வல் வந்தமாகத் திணிக்கப்பட்டிருக்கின்றது.

கட்டுறுதியான அரசியல் கட்டமைப்பு ஒன்றையோ வலுவான அரசியல் தலைமைத்துவத்தையோ கொண்டிராத தமிழினத்தின் எதிர்காலம், இத் தேர்தல்களில் அவர்கள் வெளிப்படுத்தும் பிரதிபலிப்பை - அணுகுமுறையை- பொறுத்தே அமையப் போகின்றது என்பதை தமிழினத்தில் அக்கறை கொண்ட சமூகத் தலைவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

தமிழ் மக்கள் கடந்த ஆறு தசாப்தங்களாக - முதல் மூன்று தசாப்தங்களில் அமைதி வழியிலும், அடுத்த மூன்று தசாப்தங்கள் அமைதி மற்றும் ஆயுத வழிகளிலும் - முன்னெடுத்த பல்வேறு போராட்டங்களும் பயன்தராமல் போயுள்ள இந்தச் சமயத்தில் - போரினால் நலிவுற்று, அவலப்பட்டு, நொந்துபோயிருக்கும் தமிழ் மக்கள் தமது அடுத்த அரசியல் நகர்வு குறித் துத் திண்ணியமாகச் சிந்தித்துத் துணிவுடன் முடிவெடுத்து, ஐக்கியமாக அதனை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்கள்.

**தமிழினத்துக்கும் பெரும் சவால்**

போரின் முடிவுக்குப் பின்னர் இலங்கைத் தமிழர்கள் தமது நீதி, நியாயமான அரசியல் அபிலாஷைகளை உறுதிப்பாட்டுடன் முன்னெடுக்கத்தக்க - வலிமை மிகுந்த - அரசியல் தலைமைத்துவம் அற்றவர்களாக இருக்கின்றார்கள் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

இந்நிலைமை ஒட்டுமொத்தமான தமிழினத்துக்கும் பெரும் சவாலாகும். இத் தேர்தலை சரியாகத் தமிழர்கள் எதிர்கொள்வதன் மூலமாக மட்டுமே இச்சவாலை வெற்றிகொள்ள முடியும்.

போர் முடிவுக்கு வந்துள்ள போதிலும், தமிழ்மக்களின் பிரச்சினைகள் முடிவுக்கு வரவில்லை. அவர்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகள் எட்டப்படுவதற்கான சாத்தியங்கள் தென்படவில்லை.

அரசைப் பொறுத்தவரை தமிழர்களின் நியாயமான எதிர்பார்ப்பைத் திருப்தி செய்யும் தீர்வை வழங்கும் எண்ணமே அதற்கு இல்லை என்பதும் வெளிப்படையானது. அதேசமயம், தனக்கு உகந்த - உப்புச்சப்பற்ற - ஒருதிட்டத்தைத் தீர்வு என்ற பெயரில் தமிழர்கள் மீது கட்டிவிடும் சூத்திரத்துடனேயே அது செயற்படத் தொடங்கியுள்ளது என்பதும் வெளியானது.

**அரசியல் துணிச்சலுடன் குரல் எழுப்பும் தலைமை வேண்டும்**

இச்சூழலில் இன்றைய சூழலுக்குத் தேவையான அரசியல் துணிச்சலுடன் தமிழர்களுக்காகக் குரல் எழுப்பும் அரசியல் தலைமை ஒன்று இந்தத் தேர்தல் மூலம் வெளிப்பட்டால் மட்டுமே தமிழர்களுக்கு ஏதேனும் கொஞ்சநஞ்ச மீட்சி கிடைக்கும் என்பது தெளிவு.

அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை அரசு புரிந்து கொள்வதற்கு வலியுறுத்தக்கூடிய வலுவான அரசியல் சக்திகள் இன்று தமிழ் மக்கள் மத்தியில் இல்லை.

அதன் காரணத்தினால்தான் சகல விடயங்களிலுமே அரசுடன் இணைந்து செயற்பட வேண்டுமென்று கூறுபவர்கள், புதிதாகத் தோன்றியிருக்கும் அரசியல் சூழ்நிலைக்கேற்றவாறு அரசியல் விசுவாசத்துடன் செயற்பட முயற்சிப்பவர்களாகத் தங்களைத் தாங்களே வர்ணித்துக் கொள்கிறார்கள். தமிழ் மக்களின் நலன்களை நீண்டகால அடிப்படையில் நோக்குகையில் அவர்களின் இந்த நிலைப்பாடு விவேகமானதாக இல்லை. எத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று தீர்மானிப்பதற்கு முன்னதாக இன்று இருக்கக்கூடிய சகல தமிழ் அரசியல் கட்சிகளும் பழைய குரோதங்களை மறந்து ஒன்றிணைய வேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கைகளும் பயனற்றுப் போய்விட்டன.

**வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வேண்டியவர்கள்**

தங்களுக்கான - கட்டுறுதியான - அரசியல் சமுதாயமொன்றை மீண்டும் உருவாக்குவதற்கான வாய்ப்பாக எதிர்வரும் பொதுத் தேர்தலைத் தமிழ் மக்கள் பயன்படுத்தியேயாகவேண்டும். அரசியல் ரீதியாகத் தமிழ் மக்கள் தங்களை முனைப்புறுத்துவதற்கு உறுதியான நாடாளுமன்ற அரசியல் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பதைத் தவிர, தமிழ் மக்களுக்குத் தற்போது வேறு மார்க்கமில்லை. ஏனைய சகல மார்க்கங்களும் அடைபட்டுப் போயிருக்கும் நிலையில் இதுவே ஒரே வழி.

அதனால் அடுத்த நாடாளுமன்றத்தில் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்படக்கூடிய பிரதிநிதிகள் வரலாற்றுக் கடமையொன்றை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கப் போகிறார்கள்.

அந்தப் பொறுப்பை நிறைவேற்றக் கூடிய அரசியல் துணிச்சலும், நேர்மையும், கொள்கை உறுதிப்பாடும் விலை போகாத குணாதிசயமும் கொண்ட கற்றறிந்த வேட்பாளர்களைக் களத்தில் நிறுத்தும் அணியினரைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களின் எதிர்கால இருப்பை உறுதி செய்வதற்கான புதிய அரசியல் பாதையை வகுப்பதற்கான முதற்படியாக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதென்பதே தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடிச் சவாலாகும்.

- இவ்வாறு புத்திஜீவிகள் அடங்கிய தமிழர் நலன்காக்கும் சமூகப் பிரதிநிதிகள் தமிழ் ஊடகங்கள் வாயிலாகத் தமிழ் மக்களுக்குச் செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்கள்.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மர்மமாகப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையின் ஊடக நிலைமை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ள அவர், அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

'லங்கா' செய்தித்தாளின் ஆசிரியர் சந்தன சிறிமல்வத்த 18 நாள்கள் எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். அவரின் விடுதலையை சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் வரவேற்கிறது.

பெப்ரவரி 15 ஆம் திகதி சிறிமல்வத்த சார்பில் இலங்கை உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பத்திரிகையாளர்கள் தாம் கண்மூடித்தனமாகக் கைதுசெய்யப்பட்டுள்ளமை, தடுத்து வைக்கப்பட்டுள்ளமை என்பவற்றுக்கு எதிராகத் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை அவர்கள் விலக்கிக் கொண்டால் குறிப்பிட்ட பத்திரிகையாளர்கள் விடுவிக்கப்படுவார்கள் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

எனினும், இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவாவது விசாரணைக்கென உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

தமது கடமைகளை மேற்கொள்ளும் பத்திரிகையாளர்களைத் தடுத்து வைப்பது, துன்புறுத்துவது போன்றவற்றுக்கு எதிரான உறுதியான மரபொன்றை நீதிமன்றம் நிலைநாட்டும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

ஊடகங்களை ஒழுங்குபடுத்தும்
விடயத்தில் அடிப்படை மரபுகளை பின்பற்றவும்

இதேவேளை, ஜனவரி 24 ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ள மூத்த பத்தரிகையாளரும், அரசியல் விமர்சகருமான பிரகீத் எகனலிகொடவின் நிலை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

குறிப்பிட்ட பத்திரிகையாளர் தொடர்பான சகல தகவல்களையும் வெளியிடுமாறும் அவரைக் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறும் இலங்கை அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

பத்திரிகையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் தனது அனுமதியைப் பெறவேண்டும் என ஜனாதிபதி பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் விடயத்தை அடிப்படை மரபுகள் மற்றும் ஒழுக்காற்று விதிகளைப் பின்பற்றும் - அரசியல் கலப்பற்ற - தொழில்சார் அமைப்பிடம் விட்டு விடுமாறு நாங்கள் ஆலோசனை வழங்குகிறோம். - எனத் தெரிவித்துள்ளார்.

## ஜி.எஸ்.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதற்காக நாம் சர்வதேசத் திடம் சரணடைய மாட்டோம்.ஒரு நாட்டின் சொந்த விவகாரத்தில் தலையிடும் உரிமை வெளியாட்கள் எவருக்கும் கிடையாது. அதைக் கவனத்தில் கொண்டே செயற்பட வேண்டும்.

இலங்கையின் உள் விவகாரம் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் உரிமை இலங்கை அரசுக்கு மாத்திரமே உள்ளது என்ற யதார்த்தத்தின் அடிப்படையில் ஐரோப்பிய ஆணைக் குழுவிடம் பேச்சுகளை நடத்த நாம் தயார். - என்றார்.

'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகை கிடைக் காவிட்டால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு விடும் என்றோ, தொழிற் சாலைகள் மூடப்பட்டுவிடும் என்றோ எவ ரும் பயப்பட வேண்டாம். தொழிற்சாலை களையும், உரிமையாளர்களையும், தொழி லாளர்களையும் அரசு பாதுகாக்கும் என்று அப்போது அமைச்சர் டலஸ் அழகப் பெரும கூறினார்.

இதை நாம் ஒரு சவாலாக ஏற்று வெற்றிகரமாகச் செயற்படுவோம் என்றும் இந்நாட்டு மக்களுக் குத் தெரிவித்துக் கொள்கிறேன் - எனவும் அவர் சொன் னார். (அ-சி)

## மகா சங்கக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்தார்.

அரசிற்கு சார்பான பௌத்த மதகுருமார்கள், மகாநாயக்கர்களை சந்தித்து பல மணிநேரம் அழுத்தம் கொடுத்து அவர்களை வியாழக்கிழமை மாநாட்டை கைவிடச் செய்தனர் என அவர் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது என அறிவிப்பு வெளியான விதமே இதனைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (சி)

## பொன்சேகா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்மதிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தகவ லொன்றை அனுப்பியிருந்தார்.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு இணங்காததால், புதிய கூட்டணி குறித்து முடிவெடுக்கவேண்டிய நிலைக்குத் தாம் தள்ளப்பட்டுள்ளனர் என ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசினால் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ள சூழலில் ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானிப்பது குறித்து ஜே.வி.பி. வட்டாரங்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன. (அ-சி)

## அவசரகாலச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய நாடாளுமன்ற அமர்வுகள் எதிர் வரும் ஏப்ரல் மாத 22 ஆம் திகதி நடைபெற உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி மீண்டும் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய ஓர் நிலை உருவாகியுள்ளது. நாடாளுமன்றம் ஏற்கனவே கலைக்கப்பட்டுள்ள நிலையில் அவசர காலச்சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதில் சட்ட சிக்கல் ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அவசரகாலச் சட்டத்தை பத்து நாள்களுக்கு மட்டுமே நீடிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதனை விடவும் மேலதிக காலத்திற்கு அவசர காலச் சட்டத்தை நீடிக்க வேண்டுமாயின் விசேட வர்த்தமாணி அறிவித்தல் ஒன்றின் மூலமே நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட முடியும் எனக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு நாடா ளுமன்றம் மீளவும் கூட்டப்பட்டால் எதிர்வரும் பொதுத் தேர்தல் வரையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, நாடாளு மன்றம் கலைக்கப்ப டுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட சகல வரப்பிரசாதங்களையும் வழங்க வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(அ-சி)

## சுயேட்சைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட சுயேச்சைக்குழு சார்பிலேயே கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 9உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக ஒவ்வொரு குழுவிலும் 12வேட்பாளர்கள் நிறுத்தப்படவேண்டும்.

இதேவேளை சுயேச்சைக்குழு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒவ்வொருவர் சார்பாகவும் 2ஆயிரம் ரூபா வீதம் 24,000ஆயிரம் செலுத்த வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் கட்டுப்பணம் செலுத்த தேவையில்லை என்றும் யாழ்.பிரதி தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

வேட்பு மனுக்களை இன்று முதல் எதிர் வரும் 26ஆம் திகதி நண்பகல் 12மணி வரை தாக்கல் செய்யலாம் என்றும் அவர் கூறினார். (அ-1)

## வேட்புமனுத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுத் தேர்தல் தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இறுதித் தீர்மானம் பெரும்பாலும் இன்று வெளியாகலாம் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கூட்டமைப்பு எதிர்வரும் பொதுத் தேர்தல் குறித்து ஆராய்வதற்காகத் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது எனவும், நேற்று மாலையும் கட்சியின் அரசியற்பீடம் இது குறித்து ஆராய்ந்தது எனவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க, அன்னச் சின்னத்தில் கூட்டாகப் போட்டியிடுவது தொடர்பாகத் தமது கட்சி பேச்சுகளை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொதுச் செயலாளர் நிஸாம் காரியப்பர், இது குறித்த பேச்சுகள் தோல்வியடையுமாயின், ஏற்கனவே நடைமுறையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியுடனான புரிந்துணர்வின் அடிப்படையில் அதன் யானைச் சின்னத்தில் இணைந்து போட்டியிடத் தமது கட்சி உடன்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முடிவும் இன்று வெளியாகும் என அக்கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

அக்கட்சி பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடவுள்ளதா என்பது இன்று தெரிய வரலாம்.

அமைச்சர் அத்தாவுல்லாவின் தேசியக் காங்கிரஸ் அரசுடன் இணைந்து போட்டியிடுவதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளது.

தனது தரப்பு எதிர்பார்க்கும் வேட்பாளர்களின் எண்ணிக்கையை அக்கட்சி அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளது. எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை ஆசனங்கள் கிடைக்காது போனால், அக்கட்சி தனித்துப் போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-சி)

## ஐ.தே.க.வுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் அறிக்கை இந்த முறுகல் நிலையை அம்பலப்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் துன்புறும்போது அவர்களுக்கு ஒருபோதும் துணையிருந்திராத சில தமிழ் அரசியல் வியாபாரிகளை ஐக்கிய தேசியக் கட்சியின் நேரடி தமிழ் வேட்பாளர்கள் என்ற போர்வையில் எதிர்வரும் பொதுத்தேர்தலின்போது கொழும்பு மாவட்டத்திலே நிறுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டாம் என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத் தமிழ் வேட்பாளர்களின் நியமனம் தொடர்பில் இரண்டு கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவைத் தொடர்பு கொண்டு மனோ கணேசன் தெரிவித்த கருத்துகள் குறித்து ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தலைநகர தமிழ் மக்களுக்கு கவசமாக எமது கட்சி இருந்து கொண்டிருக்கிறது. தமிழ் மக்களுக்காக உயிரையும் துச்சமாக மதித்து வீதியில் இறங்கிப் போராடியவர்கள் நாங்கள்.

எங்கள் குரல் ஓங்கி ஒலித்து, சர்வதேச சமூகத்தைத் தட்டியெழுப்பியிருக்காவிட்டால், தலைநகரத்திலே நடந்திருந்த கடத்தல், காணாமல் போதல், வர்த்தக சமூகத்திடம் கப்பம் பெறல் மற்றும் படுகொலைகள் ஆகிய அநீதிகள் கட்டுப்பாட்டிற்கும், முடிவிற்கும் வந்திருக்கா. இதனாலேயே எமக்கு இன் றைய அரசுடன் பாரிய முரண்பாடு ஏற்பட் டது.

இந்த நிலையில் எமக்கு எதிராக துரோக முற்சிகளை ஐ.தே.க. தேர்தல் காலத்திலே செய்யுமானால் நாங்கள் மாற்று வழியை நாட வேண்டிவரும். ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள அனைத்துத் தமிழ் மக்களின் விரோதிகளையும் அம்பலப்படுத்தி நடுவீதிக்குக் கொண்டுவர வேண்டிவரும். அதுமட்டுமல்லாமல் நாடு முழுக்க வாழும் அனைத்துத் தமிழ் வாக்காளர்களையும் அழைத்துக்கொண்டே நாங்கள் ஐக்கிய தேசிய முன்னணி என்ற கூட்டணியிலிருந்து வெளி யேறுவோம். இத்தகைய நிலைமை ஏற்படாமல் இருப்பதை தவிர்ப்பது என்பது, இன்று 19 ஆம் திகதி எமக்குகிடையே நடைபெறும் இறுதிப் பேச்சுகளில் தங்கியுள்ளது - என்று உள்ளது.

PERSONAL CLASS
364, Stanly rd, (Near DMI)
GAQ/BA-I/BA Final
தமிழ் - K.தர்மராஜா
BA Part I - 11-12
இலகுவில் எழுத, பேச, வாசிக்க சிங்களம்
By. K.கார்த்திகேசு
Sat/Sun 11-12/2-3
ஆரம்பம் 20.02.2010

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட வடபிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வுபெற்று தனது உன்னதசேவையை வழங்கவுள்ள

உயர்திரு திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று தனது குடும்பத்தாருடன் பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சோதி ரெக்ஸ்ரைல்ஸ்
21 நவீனசந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம். தொ.பே: 222 2139

## தேவை

* Sales Rep (ஆண்)

உலகின் முன்னணிக் கையடக்கத் தொலைபேசி(Mobile Phone) நிறுவன மொன்றின் பொருள்களை விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.
சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளோர் விரும்பத்தக்கது.

* Accounts Clerk
(ஆண் / பெண்)

பிரத்தியேகமாக Accounts துறையில் கல்விகற்றோர் முன் அனுபவம் உள்ளோர் மற்றும் கணனி அறிவுடையோர் விரும்பத்தக்கது.
தங்களது சுயவிவரக் கோவையை கீழ்க்காணும் முகவரிக்கு 21.02.2010 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

PC SYSTEMS
Aladi Junction Jaffna Road, Manipay.

## VACANCY
(Office Administrator - Female)

* Qualifications :- Degree OR Diploma Holders (Office Administration)
* Language Skills :- English/Tamil
* Computer Skills :- Ms office And Accounting Packages
* Age :- 22 - 30

Please Send your CV before 25/02/2010

Send your CV :- The Director,
UNI - ICT CAMPUS,
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.

## புதிய பிரிவுகள் ஆரம்பம் !!

Diploma in Human Resource Management (HRM) (5 Months)

Diploma in Marketing (Professional) (4 Months)

Diploma in Spoken & Practical English (4 Months)

அரச, தனியார் மற்றும் NGO களில் தொழில் புரிவோருக்கு மிகவும் பயனுள்ள கற்கைநெறிகள் !!

புதிய பிரிவுகள் ஆரம்பம் :- 20/02/2010

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

## மரண அறிவித்தல்கள்



### இரத்தினசபாபதி சந்திரா

நல்லூர் சட்டநாதர் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி சந்திரா நேற்று (18.02.2010) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு இரத்தினசபாபதி மற்றும் சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், கமலாதேவி, பரராஜசிங்கம் (வைத் தியர், இரத்தினசபாபதி அன்சன்ஸ், யாழ்ப்பாணம்), இலங்கரத்தினா (கச்சேரி, மட்டக்களப்பு), விமலாதேவி, காலஞ்சென்ற லைலாதேவி மற்றும் குணரட்ணா (சிவபதி ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.



### கந்தசாமி சிவபாக்கியம்

பிளாக் வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வசிப்பிடமாக வும், தற்போது 40, குறுக்கு தெரு, நல்லூரில் வசித்து வந்தவருமான கந்தசாமி சிவபாக்கியம் அவர்கள் நேற்று (18.02.2010) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற தலைமை கூட்டுறவு பரிசோதகர் கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அமரசிங்கம் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், இன்சூரன்ஸ் கம்பனி)- இராசம்மா தம்பதிக ளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாவிட்டபுரம் காசிப்பிள்ளை (ஓய்வுபெற்ற மலேயன் தபாலதிபர்)- தங்கம் தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ் சென்ற ராஜ்குமார் மற்றும் ரஜனி (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் அருமைத் தாயாரும், குமாரசிங்கத்தின் (முன்னாள் ஆசிரியர்) அன்பு மாமியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நல்லூர் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40,குறுக்குத்தெரு,நல்லூர்.
தொ.பே. 0213734682

தகவல்:
மகள், மருமகன்.
ரஜனி, குமாரசிங்கம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.02.2010இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org